விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 30 செவ்வாய்க்கிழமை (14.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 239

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## மனப்பால் குடித்தவர்களின் முகம்களில் கரி பூசப்பட்டது

### கருணாநிதி நிம்மதி பே(மூ)ச்சு

டெசோ மாநாடு தொடர்பில் மனப்பால் குடித்தவர்களின் முகத்தில் எல்லாம் கரியைப் பூசுகின்ற அளவுக்கு மிகவும் சிறப்பாகவும், ஈழத்தமிழர்களுக்கு பயனுள்ள வகையில் நடைபெற்று முடிந்துள்ளதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

டெசோ மாநாடு நடைபெறவே நடைபெறாது என்றும் அப்படியே நடைபெற்றாலும் வெளி நாட்டிலிருந்தோ, இலங்கையிலிருந்தோ வட மாநிலங்களிலிருந்தோ இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆர்வமும், அக்கறையும் உடைய யாருமே வரமாட்டார்கள் என்றும், கருணாநிதி ஏமாறப் போகிறார் என்றும் மனப்பால் குடித்தவர்களின் முகத்தில் எல்லாம் கரியைப் பூசுகின்ற அளவிற்கு டெசோ மாநாடு மிகவும் சிறப்பாகவும், ஈழம்தமிழர்களுக்கு பயன் உள்ள வகையிலும் மாநில அரசு பாதுகாப்புக் கொடுக்காத போதும் நடைபெற்று முடிந்துள்ளது என கருணாநிதி தெரிவித்தார். (ந-1)

## டெசோ மாநாட்டுக்கு அனுமதி; இந்தியாவிடம் இலங்கை கவலை

(கொழும்பு)

சென்னையில் ஈழத் தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாட்டினை நடத்துவதற்கு அனுமதியளித்ததற்கு இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் கவலை தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஊடாக இந்திய அரசாங்கத்திற்கு இலங்கையின் கவலை தெரிவிக்கப்பட்டதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் அமைதியாக இருக்கிறது என்று அர்த்தமில்லை.மிகவும் பொருத்தமான இராஜதந்திர வழிமுறை மூலம் இந்தியாவுக்கு எமது கவலையை தெரியப்படுத்தியுள்ளோம்.

இலங்கையின் இறையாண்மைக்கு எந்தவொரு வெளிநாட்டு சக்தியும் பாதிப்பு ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்காது.

டெசோ மாநாடு தி.மு.க. தலைவர் கருணாநிதி நடத்தியதே தவிர அதற்கு இந்திய மத்திய அரசோ, தமிழ்நாடு மாநில அரசோ உடந்தையாக இருக்கவில்லை.

இந்த மாநாட்டுக்கு அங்கேயே பல குழுக்கள் எதிர்ப்புத் தெரிவித்தன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்காக கேள்வி கேட்ட தூதுவர் பதவி நீக்கப்பட்டார்



**(கொழும்பு), தமிழர் விவகாரத்தில் அடுத்தது என்ன என்ற தமிழர்களின் கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று இலங்கை வெளியுறவு அமைச்சரிடம் கேட்டதால், தன்னை பதவியில் இருந்து அரசாங்கம் மீள அழைத்துள்ளதாக மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் கல்யானந்த கொடகே கூறியுள்ளார். கொழும்பில் அண்மையில் நடைபெற்ற இலங்கை இராஜதந்திரிகளுக்கான மாநாட்டிலேயே இவர் இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தார்.**

இது குறித்து பிபிசியிடம் பேசிய தூதுவர் கொடகே, ஜே.ஆரின் அனைத்துக் கட்சிக் கூட்டம், திம்புப் பேச்சுவார்த்தை, பிரேமதாச – புலிகள் பேச்சுவார்த்தை, சந்திரிகா மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் அமைதி முயற்சிகள் ஆகியவற்றைத் தொடர்ந்து தற்போதைய அரசாங்கம் (20ஆம் பக்கம் பார்க்க)

## டெசோ மாநாடுகளை தடுக்க முடியாது!

(கொழும்பு)

தமிழர்களின் பிரச்சினை குறித்து சிங்களவர்கள் கவனம் செலுத்தாது இருப்பதனாலேயே டெசோ போன்ற மாநாடுகள் நடத்தப்படுவதாக முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அக்கட்சியின் பிரசார (20ஆம் பக்கம் பார்க்க)

## அட்டாளைச்சேனையில் தாக்குதல்;பதற்றம்

(மட்டக்களப்பு)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை இரவு ஏழு மணியளவில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வேட்பாளரின் தேர்தல் காரியாலயமொன்று நேற்று இரவு எதிர்க் கட்சி காரர்களினால் தாக் கப்பட்டுசேதமாக் (20ஆம் பக்கம் பார்க்க)

## த.தே.ம.முன்னணியின் போராட்டத்திற்கு கூட்டமைப்பு ஆதரவும் அழைப்பும் விடுப்பு

நாளை யாழ்.நகரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்தும் ஜனநாயக வழியிலான போராட்டத்திற்கு ஆதரவளிப்பதோடு அனைவரையும் ஒன்று திரளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கேட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர்கள் மீது மிகக் கொடூரமான யுத்தம் நடத்தப்பட்டு இறுதியில் அது பெரும் ரத்தக் களரியாக மாறி உலகின் சபைகளை உலுக்கி அது தொடர்பான வாதங்கள் நீதிக்கான தேடல்கள் இடம்பெற்றுவரும் நிலையிலும், இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ள சூழலிலும் இலங்கை அரசாங்கம் தமிழர்கள் மீதான அடாவடிகளை நிறுத்தியபாடலில்லை.

கடந்த பல தசாப்த காலமாக தமிழர்களின் போராட்டத்திற்கு பயங்கரவாத முலாம் பூசி வந்த அரசு இன்று போர் முடிந்து 3 ஆண்டுகளு க்கு மேலாகியும் எந்தத் தீர்வையோ மாற்றங்களையோ தமிழர்கள் தொடர்பாக நடைமுறைப் படுத்தவில்லை. (20ஆம் பக்கம் பார்க்க)

## சில மனித உரிமை மீறல்களை ஜெனிவா பேசத் தவறிவிட்டது

### பசீர் சேகுதாவூத் விசனம்

இறுதி யுத்தத்திலே இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் பற்றி ஜெனிவா மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அது பேசப்படத்தான் வேண்டும். ஆனால் ஒரு தரப்புக்கு மாத்திரம் மனிதாபிமானத்தைப் பற்றி பேசமுடியாது.

பல்லினங்கள் வாழ்கின்ற இந்த நாட்டிலே எல்லோருக்கும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றி பேச ஜெனிவா மனித உரிமைகள் மாநாடு தவறிவிட்டது.

மனிதாபிமானத்தை விட பெறுமதியான வார்த்தையொன்று இருக்கமுடியாது.

ஆனால் இன்று சர்வதேசம் பேசுகின்ற மனிதாபிமானம் என்பது சுயநலமாக மாறிவிட்டது என உள்நாட்டுவர்த்தக கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

ஏறாவூரில் கடந்த 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற ஊர்ப் படுகொலையின் 22-வது வருட நினைவுதினம் ஏறாவூர் காட்டுப் பள்ளிவாசலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு ஊடாக பேச எப்போதும் தயார்

### அரசு மீண்டும் கூட்டமைப்புக்கு அழைப்பு

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசத் தயார் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக நாளைய தினம் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இலங்கைக்குஎதிராகவேண்டுமென்றே சர்வதேசத்தில் பிரசாரம் செய்து வருகிறார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் ஆபிரிக்க மற்றும் முஸ்லிம் நாடுகளின் ஆதரவினை ஜனாதிபதி திரட்டினார்.

புலம்பெயர் தமிழர்களில் இரண்டு தரப்பினர் செயற்பட்டு வருகின்றனர்.

ஒரு தரப்பினர் நாட்டை மீளக்கட்டியெழுப்பும் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றனர்.

மற்றுமொரு தரப்பினர் நாட்டின் பொருளாதாரத்தை வலுவிழக்கச் செய்யும் நோக்கில் பாரியளவில் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேச (20ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் நீதிவானுக்கு அச்சுறுத்தல் நீதிமன்றில் ஆஜராகுமாறு அமைச்சர் றிசாத்துக்கு உத்தரவு

(மன்னார்)

மன்னார் நீதிவான் ஏ.ஜூட்சனை அச்சுறுத்திய வழக்குத் தொடர்பாக திங்கள் அன்று நடைபெற்ற வழக்கு விசாரணை ஒன்றில் அமைச்சர் றிசாத் பதியுதீனை எதிர்வரும் 27ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு பாணந்துறை நீதிவான் ஆர்.திஸநாயக்கவால் மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த விசாரணையின் போது அமைச்சர் றிசாத் பதியூதீனால் அச்சுறுத்தப்பட்டதாக தெரி விக்கப்படும் மன்னார் நீதிவான் ஏ.ஜூட்சன், நீதிவான் ஆர்.திஸநாயக்க முன்னிலையில் தோன்றி சாட்சியமளித்தார்.

தன்னை அமைச்சர் றிசாத் பதியூதீனே தொலைபேசியில் தொடர்பு கொண்டு அச்சுறுத்தியதாகவும் அவரது குரல் தனக்கு நன்றாகத் தெரியும் என்றும் இதற்கு முன்பும் அவர் தன்னுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார் என்பதால் அவரது குரலை நன்கு அடையாளம் காணக்கூடியதாக இருந்ததாகவும் நீதிவான் ஜூட்சன் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இரண்டாம் முறையாக அமைச்சர் தன்னை அச்சுறுத்தியபோது அவர் பேசியதை அந்தநேரம் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## டெசோ தீர்மான விவாதத்தில்

# ஈழத் தமிழர்களை பேசவிடாது தடுத்து நிறுத்திய தி.மு.கவினர்

சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டு தீர்மான விவாதத்தில் கலந்து கொண்ட ஈழத்தமிழர் பேசுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது கருத்தையும் தி.மு.கவினர் நிராகரித்துள்ளதாக குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இது பற்றி தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நேற்று முன்தினம் சென்னை நட்சத்திர ஹோட்டல் அக்ஹட் மெட்ரோ பொலிடனில் நடைபெற்ற டெசோ தீர்மானம் குறித்த விவாதத்தில் இரு ஈழத் தமிழர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

தீர்மானங்கள் மீதான விவாதத்தை கலைஞர் தலைமையேற்று நடத்த மு.க. ஸ்டாலின், ரி.ஆர். பாலு, சுபவீரபாண்டியன், கனிமொழி, அமைச்சர் பொன்முடி போன்றவர்கூள் உடன் இருந்தனர்.

அதில் கலந்து கொண்ட ஈழத் தமிழர்கள் இருவரில் ஒருவர் எழுந்து ஈழத்துக்கும் தமிழ் ஈழத்துக்குமே வித்தியாசம் தெரியாத இந்திய மத்திய அரசு, 13வது திருத்தச் சட்டம் மூலமே இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கும் என்று கூறுவது முட்டாள் தனமானது என தனது கருத்தை ஆணித் தரமாகத் தெரிவித்தார்.

இவர் பேசும்போது குறுக்கிட்டு ரி.ஆர். பாலு ஈழத்தமிழரை பேசவிடாது தடுத்தார்.

இதனைத் தொடர்ந்து தான் கூறவந்ததை யாவது சொல்ல விடுமாறு அவர் வேண்டிக் கொண்டார். தாம் ஒரு ஈழத்தமிழர் என்றும் தமிழீழத்தில் வாழ்ந்து வரும் தமிழர்கள் அந் நாட்டின் பூர்வீகக் குடிமக்கள் என்றும் அவர் தெரிவித்தார். தமிழீழத்தில் வாழும் தமிழர்கள் ஒரு தேசிய இனம் எனக் குறிப்பிட்ட அவர் தம்மை சிறுபான்மை இனத்தவர் என்று கூற வேண்டாம் என்று ஆணித்தரமாகக் கூறினார்.

இதனிடையே குறுக்கிட்ட கனிமொழி ஏன் 13வது திருத்தச் சட்டத்தை நீங்கள் எதிர்க்கிறீர்கள்? குறைந்தபட்சம் ஒரு காரணத்தையாவது கூறமுடியுமா? என வினாவினார். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அதில் சரியான அலகில் பங்கிடவில்லை என்றும் 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி தமிழர்களுக்கு தீர்வு பெறப்பட்டால் அது ஈழத் தமிழர்களை சிங்களவர்களிடம் நிரந்தரமாகவே அடிமையாக்கி விடும் என்பதனை அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் அடித்துக் கூறினார்.

சிறந்த ஆங்கிலப் புலமையும் ஈழத்தமிழிலும் அவர் கூறிய இவ்வார்த்தைகள் அங்கே வந்திருந்த மொறாக்கோ, சுவீடன், நைஜீரியா, மலேசியா, துருக்கி, ஆஜென்டீனா போன்ற நாடுகளின் பிரமுகர்களைக் கவர்ந்தது.

அந்த ஈழத்தமிழரிடம் 13வது திருத்தச் சட்டம் தொடர்பாக கேட்டறிய ஆரம்பித்த வேளை மீண்டும் குறுக்கிட்ட ரி.ஆர். பாலு, டெசோ தீர்மானங்கள் குறித்து விவாதிக்கவே இந்த அரங்கம் கூட்டப்பட்டதாகவும் வேறு விடயங்கள் குறித்து ஆராய இது கூட்டப் பட வில்லை என்றும் தெரிவித்தார்.

சுபவீரபாண்டியன், கனிமொழி ஆகியோரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் கருத்தரங்கில் கலந்து கொண்ட இந்த ஈழத்தமிழர் இந்திய மத்திய அரசை கண்டிக்கத் தவறவில்லை.

டெசோ தீர்மானத்தில் மேலும் இரண்டு புதிய தீர்மானத்தை சேர்த்துக் கொள்ள முடியுமா? என ஈழத் தமிழர் கேள்வி எழுப்பினார்.

13வது திருத்தச் சட்டத்தை டெசோ ஆதரிக்கவில்லை என்றும் வடக்கு கிழக்கு தமிழர்களைப் பற்றி மட்டுமே பேசாமல் மலையகத் தமிழர்களாகிய இந்திய பூர்வீக தமிழர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

இதில் மலையகத் தமிழர் பாதுகாப்புக் குறித்து தாம் கவனம் செலுத்துவதாக கலைஞர் பதிலளித்தார். ஆனால் 13வது திருத்தச் சட்டம் தொடர்பாக அவர் வாயே திறக்கவில்லை. பின்னர் நடைபெற்ற விவாதத்தில் ஏற்கெனவே போடப்பட்ட 11 தீர்மானத்தில் மேலும் 3 புதிய தீர்மானங்களை தாம் இணைப்பதாக சுபவீரபாண்டியன் தெரிவித்தார்.

ஜெயலலிதா அரசைக் கண்டிப்பது, இலங்கை அரசின் மிரட்டலைக் கண்டிப்பது, குடிவரவு தொடர்பான மாற்றத்தை பரிந்துரைப்பது என்று தீர்மானிக்கப்பட்டதே தவிர ஈழத் தமிழர்கள் விடுத்த கோரிக்கை எதனையும் தி.மு.க வினர் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-11)

## இலங்கையர் ஐவர் டுபாயில் கைது

டுபாயில் மூன்று மடிகணணிகளைத் திருடியதாக குற்றம் சாட்டப்பட்ட ஐந்து இலங்கையர்கள் டுபாய் குற்றவியல் நீதிமன்றில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

டுபாயின் ஜீமெய்றாவிலுள்ள மருந்துக் கடையொன்றில் களவாக நுழைந்து மடிக் கணணிகளைத் திருடியுள்ளனர். மேற்படி மருந்துக் கடையில் பணிபுரிந்து வந்தவர்களே இத் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இவர்கள் மீது இரண்டு பாதுகாப்பு பெட்டகங்களை பழுதாக்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதில் ஒருவர் மடிக்கணணிகளை விற்க முயன்றபோது பிடிபட்டுள்ளார்.

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது வேறு கடைகளில் பல களவுகள் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவ்வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## இணைய விசா மூலம் கோடிக்கணக்கில் வருமானம்

இந்த வருடத்தின் முதல் 7 மாத காலப் பகுதியினுள் இணையத்தள பதிவு மூலமான விசா அனுமதி ஊடாக ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலாநந்த பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருட ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ள இந்த திட்டத்தின் மூலம் விசா விண்ணப்பத்தினை பெற விரும்புவோர் இலகுவாக தமது விசா அனுமதி யினை பெற முடிந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெரும் நன்மையடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலப் பகுதியில் 4 இலட்சத்து52 ஆயிரத்து 867 சுற்றுலாப் பயணிகள் இலங்கையை வந்தடைந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை சுட்டிக் காட்டியுள்ளது. (ந-11)

## நல்லூர் திருவிழாக் காலங்களில் நேர்த்திக்கடன் செய்யும் அடியார்களிற்கு

நல்லூர் தேர், தீர்த்தத் திருவிழாக் காலங்களில் வீதிவலம் வரும் சுவாமி காலை 9.00 மணிக்கு ஆலயத்தினுள் சென்ற பின்னரே நேர்த்திக்கடன் செய்ய வரும் அடியார்கள் வீதித் தடையிலிருந்து உள்ளே வர அனுமதிக்கப்படுவார்கள்.

எனவே, இத்தினங்களில் நேர்த்திக்கடன் செலுத்த வரும் அடியார்களை காலை 9.00 மணியளவில் வீதித் தடையை வந்தடையும் வகையில் ஏற்பாடு செய்து வருமாறு யாழ். மாநகர முதல்வர் கேட்டுள்ளார். (ந-8)

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு சடலம் இனங்காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நேற்று மதியம் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த முதியவரின் சடலம் நேற்றுவரை இனங்காணப்படாததோடு உறவினர் எவரும் உரிமை கோரவும் இல்லை.

சாவகச்சேரி இலங்கை வங்கியின் முன்னால் நடைபெற்ற குறித்த விபத்தில் முதியவரின் தலைப்பகுதி சிதைந்து காணப்படுகிறது.

உயிரிழந்த முதியவர் 67 வயது மதிக்கத்தக்கதோடு கைநிறைய கோயில் நூல்களும் நீல நிற கோடுடைய சாரம் கட்டியிருந்ததோடு மேற்சட்டை இல்லாமலேயே சடலம் காணப்படுகிறது.

சடலம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (ந-4)

## ராஜீவ்காந்தி தனி ஈழத்தை பெற்றுத் தந்திருப்பாராம் – ராமதாஸ் கூறுகிறார்

(சென்னை)

ராஜீவ் காந்தி உயிரோடு இருந்திருந்தால் தனி ஈழம் பெற்றுத்தந்திருப்பார் என பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தென்சென்னை மேற்கு மாவட்ட பா.ம.க. சார்பில் 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு ஆபத்து விளக்கப் பொதுக்கூட்டம் மேற்கு மாம்பலத்தில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழர்களின் போராட்டத்திற்கு பலனில்லாமல் போனதால் இளைஞர்கள் ஆயுதப் பேராட்டத்தை தொடங்கினார்கள். அதன் ஒரு பிரிவுதான் விடுதலைப் புலி இயக்கம்.

ராஜீவ் – ஜெயவர்த்தன ஒப்பந்தம் சிறப்பு வாய்ந்தது. ராஜீவ் உயிரோடு இருந்திருந்தால் தனி ஈழம் பெற்றுத்தந்திருப்பார். இந்திரா காந்தி துணிச்சலுடன் பங்களாதேஷை பிரித்துக் கொடுத்தார். அதே துணிச்சலுடன் இலங்கையில் ஈழம் பெற்றுத் தரவேண்டும்.

இலங்கை ஒரு போதும் இந்தியாவுக்கு நட்பு நாடாக இருக்கப் போவதில்லை. இலங்கைப் பிரச்சினையில் தமிழர்களுக்கு கலைஞர் செய்த துரோகத்தை மறைக்க அவர் ஆடும் நாடகத்தின் கடைசி நாடகம் தான் டெசோ மாநாடு இவ்வாறு அவர் பேசினார். (அ-2)

**பாரிய மரம் விற்பனை**

யாழ். பலாலி வீதியில் 20m உயரமும் 3 1/2m சுற்றளவும் உடைய இரு பாரிய இலுப்பை மரங்கள் உடன் விற்பனைக்கு உள்ளன.

தொடர்புக்கு:- 0212241885 (216)

**வீடு விற்பனைக்கு**

சுண்டுக்குளிப் பகுதியில் இரண்டு பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776181216 (215)

**டிஜிற்றல் பனர் பிரிண்டிங்**

1 சதுர அடி 30/-

**மூர்த்தி டிஜிற்றல்**

62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

021 222 1358 (C-746)

**CANADA வில் குடும்பத்துடன் குடியேறுவதற்கான VISA ஒழுங்குகள்**

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளமாணி முதுமாணிப் பட்டம் பெற்றவர்கள் குறுகிய காலத்தில் Canada செல்வதற்கு ஒழுங்குகள் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படுகிறது. அத்துடன் Nurses, Accountant, BioMedical Science Diploma முடித்தவர்கள் ஆகியோருக்கு குடும்பமாக (Family Visa)

CANADA TOURIST VISA அரசாங்கத்தில் பதிவு செய்து இலங்கையில் எப்பாகத்திலும் சொந்த வியாபாரம் செய்பவர்கள், 4 மாதங்கள் நன்கு பேணப்பட்ட வங்கி கணக்கு உடையவர்களுக்கு Canada வுக்கு Tourist Visa ஒரு மாத காலத்திற்குள் பெற்றுத் தர ஆலோசனை வழங்கப்படும்.

CYPRUS - நாட்டில் மேலதிக படிப்புக்கு செல்பவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் Visa ஒழுங்குகள். இவ்விசா மூலம் Paris, Swiss, Italy, Germany போன்ற நாடுகளுக்கு சென்று வரலாம். மொத்த செலவு 600,000 மட்டுமே.

**Rainbow Travels**

தொடர்புகள் 0778980652 0212219596

30/2, Third Lane, Power House Road, Jaffna. (C-763)

**குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவைகள் (Parcel Service)**

கனடா, லண்டன், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே போன்ற நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் (சவுதி அரேபியா, குவைத், துபாய், டோகா கட்டார், பாகிறின்) குறைந்த கட்டணத்தில் சேவைகள்.

Canada - 1 கிலோ - 2600
London - 1 கிலோ - 1500
} மூன்று நாட்களில் ஒப்படைக்கப்படும்.

Canada - 1 கிலோ - 600
London - 1 கிலோ - 500
} ஏழு நாட்களில் ஒப்படைக்கப்படும்.

உங்கள் உணவு, உடை, அலங்காரப் பொருட்கள் CD, VIDEO, ALBUM - போன்ற பொருட்களை அனுப்பி வைக்கலாம்.

**Rainbow Travels**

கிழமையில் ஏழுநாட்களும் திறந்திருக்கும்

30/2, Third Lane, Power House Road, Jaffna. 021 221 9596 (C-763)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வாழும் முறை

"நல்லதற்கு காலமில்லை சேர்!" என்று கூறி ஒருவர் சலிப்பாகக் கதைத்தார்.

"ஏன் அப்படி சொல்கிறீர்கள்?" என்று இன்னொருவர் கேட்டார்.

"நாம் பணிவாக நடந்து கொண்டால், அதை மற்றவர்கள் நமது பலவீனமாக நினைத்துக் கொள்கிறார்கள் சேர். நடைமுறையிலே அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது" என்றார் இவர்.

இவர் கூறுவதில் ஒன்றும் பிழை இல்லை. சரி! அப்படியென்றால் இந்த உலகத்திலே நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

இந்தக் கேள்விக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் என்ன பதில் சொல்கிறார் பார்க்கலாம். அவர் சொல்லியிருக்கும் ஒரு கதையைக் கேளுங்கள் அதிலே பதில் இருக்கிறது.

ஒருநாள் பிரம்மச்சாரி ஒருவர் புல்வெளி வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் அங்கே மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் சிலபேர் ஓடி வந்தார்கள்.

"சுவாமி! அந்தப் பக்கம் போக வேண்டாம். அங்கே ஒரு விஷப்பாம்பு உள்ளது. அங்கே போகிறவர்களை அது கடித்து விடும்" என்றார்கள்.

"பாம்புதானே! பரவாயில்லை! எனக்கு ஒரு சில மந்திரங்கள் தெரியும்! அதனாலே பயமில்லை!" என்று சொல்லிவிட்டு, அவர் நேராக தனது பயணத்தை ஆரம்பித்தார்.

"இவர் என்ன?... ஆபத்தை விலை கொடுத்து வாங்கும் ஆளாக இருக்கிறாரே" என்று நினைத்துவிட்டு அந்தச் சிறுவர்கள் எட்டத்திலேயே நின்று கொண்டார்கள்.

இவர் மட்டும் போய்க் கொண்டிருந்தார். சற்றுத் தூரம் போய் இருப்பார். அந்தப் பாம்பு இவரை கண்டது. உடனே சீறிக்கொண்டு வந்து படம் எடுத்தது.

இந்தக் காட்சியைக் கண்ட இவர், ஒரு மந்திரத்தைச் சொன்னார். அவ்வளவுதான்! இந்த மந்திரத்தின் மகிமையால் பாம்பிடமிருந்த கெட்ட குணம் பூராகவும் போய் விட்டது.

அது ஒரு மண்புழு மாதிரி இவரது காலடியிலே வந்து படுத்துக் கொண்டது. இவர் அதற்கு உபதேசம் செய்தார்.

"நீ ஏன் இப்படி எல்லோருக்கும் கெடுதல் செய்கிறாய்? நான் ஒரு மந்திரம் சொல்லித் தருகிறேன். அதை நீ எப்போதும் உனது நாவில் உச்சரித்துக் கொண்டிருக்க வேண்டும். உன்னிடம் இருக்கிற கெட்ட குணம் விலகிப் போய்விடும். கடைசியிலே கடவுள் தரிசனம் உனக்குக் கிடைக்கும்" என்றார்.

பாம்பும் "சரி" என்று சொல்லிவிட்டு அதைக் கற்றுக் கொண்டது. உபதேசம் செய்து விட்டு அந்தப் பெரியவர் போய்விட்டார்.

அன்றிலிருந்து பாம்பில் இருந்த கெட்ட குணங்கள் எல்லாம் விலகியது. அது இப்போது எவரையும் பார்த்து சீறுவதுமில்லை. கொத்துவதும் இல்லை.

இதை அறிந்த மாடு மேய்க்கும் சிறுவர்களுக்கு துணிச்சல் ஏற்பட்டது. அமைதியாக இருப்பார்கள்.

அந்தப் பாம்பைக் கண்டால், கல்லையெடுத்து எறிவதும்; குச்சியை எடுத்து வீசுவதும்; இப்படியான தொல்லைகளைக் கொடுத்து வந்தார்கள்.

எல்லாத் துன்பத்தையும் அந்தப் பாம்பு பொறுமையாக சகித்துக் கொண்டது. இப்போது அதற்கு கோபம் தலைக்கு ஏறியது.

பகல் நேரங்களில் வெளியிலே வருவதில்லை; இலை, பழங்கள் ஆகியவற்றை சாப்பிட்டே காலத்தை ஓட்டிக்கொண்டது. பாம்பு மிகவும் மெலிந்து எலும்பும் தோலுமாக மாறிவிட்டது. ஆனால், ஏனையவர்களுக்கு எந்தக் கெடுதலும் செய்வதில்லை. இப்படியே வாழ்ந்து வந்தது.

ஒரு வருடம் நகர்ந்த பின்னர் மறுபடியும் அந்தப் பெரியவர் அவ்வழியாக வந்தார். பாம்பைப் பார்த்தார்.

"சௌக்கியமா?" என்று சுகநலன் விசாரித்தார்.

"ஏதோ... உங்களின் புண்ணியத்திலே மிகவும் சௌக்கியமாக இருக்கிறேன்?" என்று பாம்பு கூறியது.

"என்ன இப்படி ஒரேயடியாக மெலிந்து விட்டாய்?" என்று பெரியவர் வினவினார்.

"இப்போது இலை, பழங்கள் மட்டுமே உணவாக சாப்பிடுகிறேன்; அதனாலே இப்படியாக மாறிவிட்டேன்" என்றது.

"சிறுவர்கள் தொல்லை தரவில்லையா?" என்று பெரியவர் கேட்டார்.

"அறியாத பருவம்; என்ன செய்வது; ஏதோ தெரியாத்தனமாக தொல்லைகள் கொடுத்து விட்டார்கள்" என்றது பாம்பு.

இப்போது பாம்பிற்கு பக்குவம் வந்துவிட்டது.

அப்போது அந்தப் பெரியவர் பாம்பிடம் சொன்னார்;

"யாரையும் கடிக்க வேண்டாம் என்றுதான் சொன்னேன்; சீறிப் பயமுறுத்த வேண்டாமென்று சொல்லவில்லையே" என்றார்.

இந்தக் கதை மூலம் ஸ்ரீராமகிருஷ்ணர் என்ன சொல்ல வருகிறார் என்றால்;

"நீ ஏனையவர்களுக்கு கெடுதல் செய்யாதே; ஆனால், நீ இந்த உலகத்திலே வாழப்போகும் ஏனையவர்களுக்கு உனது பேரில் அச்சமும் மரியாதையும் ஏற்படும் அளவிற்கு நடந்து கொள்" என்கிறார்.

இந்தத் தகவலைக் கேட்டுவிட்டு ஒருவர் என்னிடம் வந்தார். அவர் ஒரு சினிமா டைரக்டர்;

"சேர்; பாம்புக்கும் எனக்கும் ஒரு ஒற்றுமை உள்ளது"

"என்ன?" என்று கேட்டேன்.

"பாம்பு படம் எடுத்தாலும் பார்க்கிறவர்கள் ஓடிப் போகிறார்கள். நான் படம் எடுத்தாலும் பார்க்கிறவர்கள் ஓடிப் போகிறார்கள்" என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மருதமடு அன்னையின் வருடாந்த பெருவிழா

(மன்னார்)

மருதமடு அன்னைத் திருத்தலத்தின் வருடாந்தப் பெருவிழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கமைய மடுத்திருப்பதியில் கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றம் இடம்பெற்று தொடர்ந்து ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

இன்றையதினம் மாலை வழிபாடுகள் 6.15 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நற்கருணை ஆராதனை, மறையுரைகள் என்பன தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து நற்கருணைப் பவனி, நற்கருணை ஆசீர்வாதம் ஆகியவை நடைபெறும்.

மரியன்னை விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தினமான நாளை புதன்கிழமை திருவிழாத் திருப்பலி இடம்பெறும். அன்றைய தினம் காலை 6.20 மணிக்கு நடைபெறும் திருவிழாத் திருப்பலி தமிழ், சிங்களம், ஆங்கிலம், இலத்தீன் ஆகிய நான்கு மொழிகளிலும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இரா.யோசேப்பு ஆண்டகையின் தலைமையில் இடம்பெறும் இத்திருவிழா திருப்பலியில் கண்டி மறை மாவட்ட ஆயர் மேதகு வியான்னி பெனாண்டோ ஆண்டகை, காலி மறை மாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை, அநுராதபுர மறை மாவட்ட ஆயர் மேதகு றோபேட் அன்றாடி ஆண்டகை, கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர் மேதகு மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுருவப் பவனியும் திருச்சுருவ ஆசீரும் இடம்பெறும்.

மடுத்திருப்பதியின் திருவிழாவில் யாத்திரிகர்களின் வசதி கருதி போக்குவரத்து ஒழுங்குகள், தண்ணீர் வசதிகள், சுகாதார வைத்திய சேவைகள், பாதுகாப்பு ஒழுங்குகள் என்பன செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மருதமடுத் திருத்தலம் ஒரு வியாபார ஸ்தலமோ அல்லது சுற்றுலாப் பகுதியோ அல்ல. பல நூற்றாண்டுகளாக ஆன்மீக மனமாற்றமும் அமைதியும் அருளும் புனிதமான திருத்தலமாகும். எனவே, இத்திருத்தலத்திற்கு யாத்திரிகர்களாக வருவோர் இத்தலத்தின் புனிதத் தன்மைக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

திருத்தலத்தின் புனிதத்திற்குப் பொருந்தாத ஆடல், பாடல், சீட்டுவிளையாடுதல், இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் போன்ற கேளிக்கைளும் மது அருந்துதலும் மது விற்றலும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன. இத்திருத்தலத்தில் கண்ணியமான நடத்தையைப் பேணும்படியாகவும் மரியாதையான ஆடைகளை அணியுமாறும் யாத்திரிகர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

மிதிவெடி அபாயங்கள் இன்னும் இருப்பதால் மிதிவெடி அகற்றப்படாத காட்டுப்பகுதிக்குள் செல்வதும் மரங்களை வெட்டுவதும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80-120 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 100 |
| தக்காளி | 50 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 60 | 70 |
| கரட் | 100 | 100 | 140 |
| பூசணி | 30 | 30 | 50 |
| புடோல் | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 70 | 90 | 60 |
| வெண்டிக்காய் | 30 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | -- |
| பயற்றங்காய் | 40 | 80 | 30 |
| லீக்ஸ் | 120 | 100 | 130 |
| பீற்றூட் | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 60-80 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 140 | 120 | 100 |
| போஞ்சி | 110 | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 20 | 18-20 |

# இராசி பலன்

14.08.2012
(ஆடி 30, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
துவாதசி முன்னிரவு 9.09 மணிவரை
திருவாதிரை மாலை 5.45 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
நல்லைக்கந்தன் தண்டாயுத பாணி உற்சவம்.

**மேடம்** முன்னோர் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி அதிகரிக்க தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவ முன்வருவர், தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள்.

**இடபம்** புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம், பெரியோர்களின் ஆதரவுகள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகலாம், நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**கடகம்** அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், விலையுயர்ந்த பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது, அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள்.

**சிங்கம்** அந்நியதேச தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை பெறுவீர்கள்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை செய்து முடிப்பீர்கள், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள்.

**துலாம்** தடைகளைத் தகர்த்தெறிந்து தன்னிறைவு காணும் நாள், எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறலாம், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வரலாம்.

**விருச்சிகம்** ஆரோக்கியக் குறைவான நாள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

**தனுசு** களஸ்திர நன்மையுண்டு, அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் நன்மையுண்டு.

**மகரம்** நாவன்மையால் நற்பெறெடுக்கும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரும், அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், தொழில் விருத்தியுண்டு.

**மீனம்** உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், பயணங்களால் பலனுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும்.


வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைப்பொருளாதாரத் திட்டத்தின் கீழ்

# ஆயிரம் பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது

## பாரம்பரிய கைத்தொழில் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

மனைப்பொருளாதார வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலிருந்து ஆயிரம் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சின் ஒருங்கிணைப்பின் மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கான இலகு கடனைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடன் வழங்கும் வங்கிகளின் பிரதிநிதிகளுக்கும் பயனாளிகளுக்கும் இந்தத். திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தத் திட்டமானது நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சிறுகைத்தொழிலாளர்களை பொருளாதார ரீதியில் முன்னேற்றும் வகையில் எமது அமைச்சும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் கைத்தொழிற்றுறை சார்ந்த ஏனைய அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தக் குடிசைக்கைத்தொழிலானது விவசாயம் சார்ந்ததாகவும் சிறுதொழில், கால்நடைவளர்ப்பு போன்ற தொழில் சார்ந்ததாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி யாழ்.மாவட்டத்திலிருந்து ஆயிரம் பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதோடு வங்கிகளிலிருந்து இலகுகடன் அடிப்படையில் கடன் உதவிகளும் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை எமது அமைச்சு மேற்கொண்டுள்ளது. எனவே இத்திட்டம் வெற்றியளிக்க வேண்டுமானால் வங்கிகளின் பங்களிப்பும் மிகவும் அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




# எக்ஸ்ரே படங்கள் கழுவும் இயந்திரம் பழுதானது

## யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர்கள் அவலத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பழுதாகிய எக்ஸ் (X) கதிர் படங்கள் கழுவும் இயந்திரம் திருத்தப்படாமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த 3 நாட்களுக்கு முன்னர் பழுதடைந்த குறித்த இயந்திரம் இதுவரை திருத்தப்படாமையால் அவசர பிரிவு நோயாளர்கள் தவிர ஏனையோர் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

சில நோயாளர்கள் வெளி இடங்களில் பணம் செலுத்தி எக்ஸ் (X) கதிர்ப்படம் எடுக்க வேண்டிய நிலையும் உள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் இது தொடர்பாக நேற்று முன்தினம் கேட்டபோது, கொழும்பிலிருந்து அதிகாரிகள் திருத்துவதற்கு வந்து கொண்டுள்ளனர் என்றும் அது அன்றைய தினமே சரிப்படுத்தப்பட்டுவிடும் எனவும் தெரிவித்தார்.

எனினும் இதுவரை அவ் இயந்திரம் திருத்தப்படாததோடு நோயாளர்கள் ஏமாற்றத்துடன் செல்ல வேண்டிய நிலையும் நேற்று காணப்பட்டது. அலுவலக பிரிவு நோயாளர்களுக்கான X கதிர்ப்படங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் எடுக்கப்பட்டு அவற்றின் படங்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் கழுவப்படுவதாக பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (அ-4)

# யாழ்.பொலிஸ் நிலையத்தில் காசோலை மோசடிகளே அதிகம் பதிவாகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையத்தில் தற்போது காசோலை மோசடி சம்பந்தமான முறைப்பாடுகளே அதிகம் பதிவு செய்யப்படுவதாகவும் அதிலும் நிறுவனங்களுக்கு எதிரான முறைப்பாடுகளே அதிகம் உள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

வங்கியில் கணக்கு இல்லாமல் பொய்க் காசோலையை கொடுப்பதும் அது திரும்பியதும் பொலிஸாரிடம் முறையிடுவதுமாக உள்ளனர்.

குறிப்பாக இப்பிரச்சினையானது கடைகள் கடைகளாக சென்று வாகனத்தில் விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கிடையே இடம்பெறுவதாகவும்அவர் தெரிவித்தார். அதிகூடிய தொகைகளை காசோலைகள் மூலம் பெற்றுக்கொள்வதனை தவிர்த்தால் ஓரளவிற்கேனும் இதனை கட்டுப்படுத்த முடியும்.

இவ்வாறு காசோலை மோசடி சம்பந்தமாக வரும் முறைப்பாடுகளில் அதிகம் இரு பகுதியினரையும் பொலிஸாரே ஒரு இணக்கப்பாட்டுக்கு கொண்டு வந்து ஏமாற்றப்பட்ட பணத் தொகை பகுதிபகுதியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

வாய்த்தர்க்கம் பெரிதாகி வாள்வெட்டுச் சம்பவமாகியதில் ஒருவர் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையிலும் வாள்வெட்டுக்கு காரணமானவர்கள் நால்வர் சிறையிலும் உள்ளனர்.

இவ்வாள் வெட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் கொக்குவில் தெற்கு கொக்குவிலில் இடம்பெற்றுள்ளது. குடும்பத்தினருக்கும் இளைஞர் குழு ஒன்றுக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தினாலேயே இவ்வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் வாள்வெட்டுக்கு இலக்கான குறித்த குடும்பத்தினைச் சேர்ந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளான்.

வாள்வெட்டுக்கு காரணமான இளைஞர் கும்பலில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

# போதனாவின் சிற்றுண்டிச்சாலைக்கு அமைச்சர் டக்ளஸ் திடீர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையினது சுத்தம் சுகாதாரம் தொடர்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று ஆராய்ந்தறிந்தார்.

நேற்று முன்தினம் மாலை இந்த வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அங்குள்ள சிற்றுண்டிச்சாலையினது சுத்தம் சுகாதாரம் தொடர்பில் ஆராய்ந்தார். இதன்போது சிற்றுண்டிச்சாலையின் பல பகுதிகளையும் பார்வையிட்ட அமைச்சர் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களையும் பார்வையிட்டார்.

நோயாளர்களினதும் மக்களினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு சிற்றுண்டிச்சாலையினை நடத்துவோர் செயற்பட வேண்டும். அதேவேளை உணவு மற்றும் உணவல்லாத பொருட்களினது சுகாதாரம் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் துறைசார்ந்தவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

சிற்றுண்டிச்சாலையின் குறைபாடுகளைத் தீர்க்கவும் அமைச்சர் உரிய பணிப்புரைகளை வழங்கினார். (அ-9)

# தொடரும் திருட்டுக்களும் கைதாகும் திருடர்களும்

## யாழ். போதனாவில் தொடர்கதை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் தொடரும் சிறு திருட்டுக்களால் நோயாளிகள் தினமும் அல்லற்பட்டு வருகின்றனர்.

எனினும் இத்திருட்டுக்கள் அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் ஊழியர்களால் கண்டுபிடிக்கப்பட்டு திருடப்பட்ட பொருட்களும் உரியவர்களிடத்தில் ஒப்படைக்கப்படுகின்றன. நேற்று அதிகாலை 2 மணியளவில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நோயாளியின் உடைமைகள் அடங்கிய பொதி ஒன்றினை தன்னை நோயாளி என இனங்காட்டிய நபர் திருடிச் சென்றுள்ளார்.

இவ்வாறு திருடப்பட்ட பொதியினுள் பால்மா பெட்டியொன்றும் மூக்குக் கண்ணாடியொன்றும் காணப்பட்டுள்ளது.

திருடப்பட்ட பொதியை வெளியே கொண்டு செல்ல முயன்றபோது பாதுகாப்புக் கடமையில் இருந்த ஊழியர் மடக்கிப்பிடித்து யாழ். பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். பொலிஸ் விசாரணையின் போது திருடப்பட்ட மூக்குக் கண்ணாடி மீட்கப்பட்டுள்ளதோடு பால்மா பெட்டி தேநீர் கடையொன்றில் விற்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சூழலில் வேலைக்காக அமர்த்தப்பட்ட பத்து சிறுவர்கள் மீட்பு

## வலம்புரியின் செய்திக்கு உடன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய திருவிழா உற்சவ நாட்களில் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட சிறுவர்களில் 10 சிறுவர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் ஆலய உற்சவகால ஆரம்பத்திலிருந்து தேங்காய் விற்பனை, கற்பூரம், ஊதுபத்தி விற்பனை எனப் பல சுயதொழில்களிலும் குளிர்பான நிலையங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். இச்சிறுவர்கள் விரும்பியோ விரும்பாமலோ தமது குடும்ப வறுமையின் காரணமாக பாடசாலைக்கு கூட செல்ல முடியாத நிலையில் சொற்ப பணத்திற்காக ஈடுபட்டு வந்தனர் என சிறுவர் பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவர்களை வேலைக்கு அமர்த்துதல் சட்டத்தின் படி பாரிய குற்றமாகும். அதே போல் அது சிறுவர் உரிமை மீறலாகும்.

நல்லூர் ஆலயத்தின் திருவிழாவில் அநேகமான தொழில் நோக்குடைய இடங்களில் கூடுதலாக சிறுவர்களே வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பாக நேற்றைய வலம்புரி பத்திரிகையில் வெளியாகிய செய்தியினை அடுத்து அதற்கு நடவடிக்கை எடுக்கும் முகமாக நேற்றைய தினமே தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் நல்லூர் பிரதேச சபையினரும் இணைந்து நல்லூர்ச் சூழலுக்கு சென்று தொழிலில்ஈடுபட்ட சிறுவர்களினைமீட்டுள்ளனர்.

இதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் கோதை மாவட்ட உள சமூக இணைப்பாளர் கே.கௌதமன், சிறுவர் நன்னடத்தை மாவட்ட இணைப்பாளர் என். பத்மராஜ் ஆகியோர் உட்பட நல்லூர் பிரதேச சபையின் சிறுவர் பிரிவினரும் இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் நேற்றைய தினம் அன்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது 13, 14 வயதுடைய 10 சிறுவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இதில் ஒரு சிறுவன் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் இரு சிறுவர்கள் யாசகம் செய்து கொண்டிருந்துள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலினையும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு முதற் தடவையாக மேலதிக நடவடிக்கை எடுக்காமல் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்படவுள்ளதாகவும் இச்சிறுவர்களை வேலைக்கமர்த்தியவர்களின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும் தொழிலில் ஈடுபட்ட சிறுவர்களை மீட்பதோடு மட்டும் நின்றுவிடாது அவர்களின் கற்றல் நடவடிக்கைக்கு நடவடிக்கை எடுக்கப்படபடல் வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (அ-4)

## இந்தியாவின் 66 ஆவது சுதந்திர தின நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் 66 ஆவது சுதந்திர தின நிகழ்வுக் கொடியேற்றும் வைபவமும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு இல. 280, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறும்.

எனவே இலங்கையில் வசிக்கும் இந்திய குடியுரிமை பெற்ற அனைவரையும் இந் நிகழ்வில் பங்கேற்குமாறு கேட்கப்படுகிறார்கள். (அ-2)

## ஜனாதிபதி மஹிந்த வவுனியா வருவார்

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட அபிவிருத்தி மீளாய்வு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 17 ஆம் திகதி ஜனாதிபதி வவுனியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஜனாதிபதி வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்தி நிலைமைகளையும் பார்வையிடவுள்ளதாகவும் வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபைக்கு புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியையும் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-9-266)

YARL Taxi
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 222 1919
MOB:-0759751919
முதல் Km-60/-
அடுத்த ஒவ்வொரு Km-40/-
முச்சக்கர வண்டி/கார்/வான்
7 a.m-11p.m வரை 7 நாட்களும் சேவை
மலிவானதும் நம்பகமானதுமான சேவை
நட்புடன் உதவும் சாரதிகள்.
எங்கள் ஓட்டோ எல்லாவற்றுக்கும் கட்டண மீற்றர் பொருத்தப்பட்டுள்ளது.
36,கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-021 222 1919 , 075 975 1919
E.mail:-yarltaxi@gmail.com
(சு-727)

## மண்டலாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை கூடத்தனை அம்பாள் தேவஸ்தான மண்டலாபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு அம்பாள் உள்வீதி வலம் வரும் காட்சியும் நடைபெறவுள்ளதாக உபயகாரர்கள் அறிவித்துள்ளனர். (அ-9)

## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ரோகிணி 3<br>உயரம்:-5'8"<br>கி.பா:-24.25, 7 இல் செவ்<br>தொழில்:-Bsc in Radiographer<br>B/296 | பிறப்பு:- 1971 இந்து<br>நட்சத்திரம்:- பூரம் 1<br>உயரம்: 5'1"<br>கி.பா:-43<br>தொழில்:- பட்டதாரி ஆசிரியை<br>G/287 |
| பிறப்பு:- 1969 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சித்திரை 2<br>உயரம்:-5'8"<br>கி.பா:-30, 7 இல் செவ்<br>தொழில்:-கணக்காளர் கனடா P.R<br>B/285 | பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூராடம் 2<br>உயரம்: 5'3"<br>கி.பா:-26.75, 4 இல் செவ்<br>தொழில்:- லிகிதர் (தனியார் நிறுவனம்)<br>எ.பார்ப்பு :- விவாகரத்துப் பெற்றவர்களும் ஏற்கப்படும்<br>G/298 |
| பிறப்பு:- 1975 இந்து<br>நட்சத்திரம்:- ஆயிலியம் 2<br>உயரம்:-5'5"<br>கி.பா:-26.5<br>தொழில்:-சாரதி (அரச)<br>B/283 | பிறப்பு:- 1977 இந்து<br>நட்சத்திரம்:- புனர்பூசம் 1<br>உயரம்: 5'2"<br>கி.பா:- 55, 4 இல் செவ்<br>G/291 |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரட்டாதி 4<br>உயரம்:-5'3"<br>தொழில்:-BBA Msc. லண்டன் Not. P.R<br>B/281 | பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூரட்டாதி 3<br>உயரம்: 5'4"<br>கி.பா:-33<br>தொழில்:- அரச விரிவுரையாளர்<br>G/284 |

மேலதிக தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

சரவணா டெக்ஸ்
Saravana Tex
பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி
எமது காட்சியறைகளில்
15.08.2012 வரை
ஆடி மாத முடிவும் ஆடித்தள்ளுபடி நிறைவும்
வடமராட்சியில்...
இல. 171,பிரதான வீதி,
சம்பத்வங்கிக்கு அருகாமை,
நெல்லியடி.
தொ.பே:-021 226 2992
யாழ். நகரில்...
சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச்சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் இருபத்திரண்டாம் நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் **குறிஞ்சிக்குமரன்** எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆற்றுவார்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தெல்லிப்பழை பன்னாலை ஸ்ரீ கணேசா அறநெறிப்பாசாலை, நீர்வேலி காமாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை, ஊர் காவற்றுறை பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் இருபத்திரண்டாம் நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாட்டு தாரணி ராஜ்குமார், வயலின் செல்வி பாக்கியலட்சுமி நடராசா, மிருதங்கம் எஸ்.கமலதாஸ்,கடம் ஆர்.சிவராமன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் இருபத்திரண்டாம் நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நடைபெறவுள்ளது.

இப்பேருரையில் **இரணியன் யுத்தம்** எனும் தலைப்பில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா சொற்பொழிவாற்றுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் இருபத்திரண்டாம் நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் வடக்கு வீதியிலமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை தெய்வீக பேருரைகளும் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் **காதலென்றதுவும் ஓர் கள்ளியின் தோற்றமாம்** எனும் தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவினை மொழியும் வள்ளல் பராரதீஸ் ஆற்றுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் இருபத்திரண்டாம் நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலய மண்டபத்தில் மாலை 6.45 மணிக்கு யா/இந்துக்கல்லூரி மாணவர்களின் இசைக்கச்சேரி நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் இருபத்திரண்டாம் நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை ஆன்மீக அருளுரைகள் நடைபெறும்.

இந்நிகழ்வில் **எப்பவோ முடிந்த காரியம்!** எனும் தலைப்பிலான ஆன்மீக அருளுரையை பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா ஆற்றுவார். (அ-9)

# ஈழத்தமிழர்கள் என்றால் விடுதலைப்புலிகள் இதுவே வட இந்தியாவின் நினைப்பு

## லோக்ஜன சக்தி கட்சி தெரிவிப்பு



ஈழத்தமிழர் என்றால் விடுதலைப்புலிகள், பயங்கரவாதிகள் என்றே வட மாநிலங்களில் உள்ளவர்கள் கருதுகின்றனர். அவர்களுக்கு உண்மை நிலையை விளக்க வேண்டும் என்று லோக்ஜன சக்தி கட்சியின் தலைவர் ராம்விலாஸ் பஸ்வான் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த ஈழத்தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாட்டில் உரை நிகழ்த்திய போது அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் கருத்துரைக்கையில், ஈழத் தமிழர்களின் பிரச்சினையை வட மாநிலத்தவர்கள் அறிந்து கொள்ளவே இல்லை. ஈழத் தமிழர்கள் என்றால் விடுதலைப் புலிகள், பயங்கரவாதிகள் என்றே கருதி வருகின்றனர்.

எனவே, ஈழத்தமிழர்களின் உண்மை நிலையை விளக்க வட மாநிலங்கள் முழுவதும் டெசோ அமைப்பு கூட்டங்களை நடத்த வேண்டும். இலங்கையில் தமிழர்கள் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வசித்து வருகின்றனர்.

அவர்கள் அந்தநாட்டின் உண்மையான குடிமக்கள். அவர்களை அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது கண்டிக்கத்தது.

ஈழத் தமிழர்களின் பிரச்சினை என்பது தமிழ் நாட்டு பிரச்சினை மட்டுமல்ல. காஷ்மீர் பிரச்சினை வேறு, ஈழத்தமிழர்கள் பிரச்சினை வேறு. ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசை வலியுறுத்துவோம் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# வவுனியாவில் பிச்சைக்காரர் தொல்லை அதிகரிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் அதன் காரணமாக பொதுமக்கள் உட்பட வர்த்தகர்களும் பெரும் தொல்லைகளுக்கு முகம் கொடுப்பதாக வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.


இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக வேறு பிரதேசங்களில் இருந்து வவுனியா மாவட்டத்திற்கு வரும் பிச்சைக்காரர்கள் வர்த்தக நிலையங்கள் மற்றும் பேருந்துகள் உட்பட அனைத்து பொது மக்களிடமும் பிச்சை கேட்டு பின் தொடர்வதனால் நகர்புறத்திற்கு வரும் பொது மக்களும் நகர்ப்புற வர்த்தகர்களும் சிரமத்திற்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அத்துடன் சிறுவர்களை பிச்சை எடுப்பதற்கு பயன்படுத்துவதுடன் அவர்களது கல்வி உரிமை முதற் கொண்டு அனைத்து உரிமைகளும் மீறப்பட்டு வருகின்றது எனவும் கூறியதுடன் இது தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகளை சமூக சேவைகள் திணைக்களம் மேற்கொண்ட போதிலும் மக்களின் ஒத்துழைப்பின்மை காரணமாக இவ்வாறானவர்களை கட்டுப்படுத்த முடியாதுள்ளது என தெரிவித்தார்.

இதேவேளை, அவ்வாறாக பிச்சை எடுக்க வருபவர்களை பேருந்துகளில் ஏறி பயணிகளிடம் பணம் கேட்பதற்கு பேருந்து உரிமையாளர்கள் அனுமதி மறுக்க வேண்டுமென்பதுடன் வர்த்தக நிலையங்களில் இவர்களுக்கு பணம் வழங்குவதை தவிப்பதனாலும் இவ்வாறானவர்களை கட்டுப்படுத்த முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்ததுடன் அண்மையில் பிச்சைக்காரர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கென நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அது பயனளிக்கவில்லை எனவும் தெரிவித்தார். (அ-9-266)

# நல்லூரான் திருவடிக்கு இன்று இருபத்திரண்டாம் திருவிழா



## கந்தன் பாதம் தொழுதிடுவோம்



நல்லையம் பதிக்கு வாரீர்
நல்லூரான் அருள்தனைக் கேளீர்
நல்லூரான் அழகைக் காணீர்
நாடு போற்றும் முருகனைப் பாரீர்
பாடல்கள் பாடுவோம் வாரீர்
பாவங்கள் போக்கிட வருவான்– அவன்
பாதங்கள் தொழுவோம் வாரீர்!

*நல்லைக்குகன்.*

## உலா வரும் வேளை



**பல்லவி**

வேல் உலா வரும் வேளை– நாலு
வீதி நிறைய பக்தர் கூட்டம்– சூழும் (வேல்)

**அனுபல்லவி**

மாலை வெயில் மஞ்சள் பூசும்– வெண்
மணல் குளிரும் தென்றல் வீசும்– வடி (வேல்)

**சரணம்**

நாத வெள்ளம் பொங்கிப் பெருகும்– ஈழ
நாடே முருகா என்றுருகும்
வேத மந்திரம் ஓங்கி முழங்கும்– வெற்றி
வேலன் திருப்புகழ் எங்கும் புழங்கும்– வீர (வேல்)

நீல மயில் மீது வருவான்– வாரி
நிறைய அருளை அள்ளித் தருவான்
கோலக்குறத்தியொடு வருவான்– சேவல்
கொடி உயரப் பறக்க வருவான்–ஞான (வேல்)

*சோ.பத்மநாதன்.*

## காத்தருள வந்திடையா

நல்லை நகர் வீற்றிருக்கும் கந்தா...
நலமெமக்கு தந்திடையா நடராஜன் மைந்தா
ஆறுபடை வீடுகொண்ட ஆறுமுக வேலா
ஆறுமிடம் தந்திடையா அம்பிகை பாலா
சொத்திழந்து சுகமிழந்து துணை இழந்தோமே
சோதனைகள் தாராது சுகம் தருவீரையா
கருணைக் கடலே கார்த்திகேயா கருணாநிதியே
காத்தருள வந்திடையா சம்பு குமாரா

*திருமதி.மகேஸ்வரி நவரத்தினம், கொக்குவில்.*

## திருமுருகா ஒளி தருவாய்



பஞ்சம் படை வந்தாலென்ன
பார் எல்லாம் வெந்தாலென்ன
அஞ்சுவமோ நாங்களடி கிளியே

ஆறுமுகன் தஞ்சமடி
ஊர் அடங்கும் நேரத்திலும்
நீர் உறங்க வில்லை ஐயா

உன் மணி ஓசை மூவிரு காலமுமொலித்ததையா
உன் விழி எமைக் காத்ததையா

கடிகார முள் சில நேரம் பிழையாகும்
உனது மணி ஓசை ஒலிக்கும் நேரம் சரியாகும்

எனக்கு பல வரங்கள் தந்தீரையா
இருக்கும் குறைகளையும் தீர்ப்பீரையா
ஆறுமுகா உந்தன் தேரடியில்
காத்திருப்பேன் செல்லப்பர் போல்

*கனகரெட்ணம் லோகானந்தம்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரம் கடற்கரையில் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்திக்காட்டுவேன்

## எடுத்த சபதம் முடிப்பேன் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

**தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் உள்ளூர் மீனவர்களை கட்டுப்படுத்திய பின்னர் இந்திய மீனவர்கள் அத்துமீறிய தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு எதிராக இராமேஸ்வரம் கடற்கரையில் கவனயீர்ப்பு போராட்டத்தினை நடத்திக் காட்டுவேன் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தபோது ஊடகவியலாளர் இந்த விடயம் தொடர்பாக கேள்வி எழுப்பியிருந்தனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கையின் வடபகுதி கடற்கரையோரங்களில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதற்கு எதிராக மீனவர்களை ஒன்று திரட்டி ஆயிரம் படகுகளில் ஐயாயிரம் மீனவர்களின் பங்கேற்புடன் இராமேஸ்வரம் கடற்கரையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தவுள்ளதாக முன்னர் அறிவித்திருந்தேன் என்பது உண்மைதான்.

இருப்பினும் இந்த போராட்டத்தினை நடத்துவதற்கு முன்பாக இலங்கையில் உள்ளூர் மீனவர்கள் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மட்டும் 179 ரோலர் படகுகள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் கடல் வளம் அழிக்கப்படுவதோடு சிறு தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைவதோடு கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் 5 ஆயிரம் குடும்பங்கள் ரோலர் படகினால் பாதிப்படைகின்றன.

இந்த விடயம் தொடர்பாக இலங்கைக்கு அண்மையில் வருகை தந்த இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மாவிடமும் எடுத்துக் கூறப்பட்டது.

எனவே, உள்ளூர் மீனவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும் சட்ட நடவடிக்கை மூலம் இந்த மாதத்திற்குள் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த பின்பு இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்படும்.

தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்த எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. கடல் வளம் அழிக்கப்படுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# வாகன இலக்கத் தகடுகளில் 13 என்ற இலக்கத்திற்கு இடமில்லை

## மோட்டார் வாகன பதிவாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் இலங்கையில் பதிவுசெய்யப்படும் வாகன இலக்கத் தகடுகளில் இலக்கம் 13 உள்ளடக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து வாகன இலக்கத் தகடுகளில் 13 ஆம் இலக்கத்தை நீக்குவதென மோட்டார் வாகன பாதிவாளர் நாயகம் எஸ்.எச். ஹரிஸ் சந்திர தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலக்கம் 13 இராசியற்றது எனவும் அதனால் ஆபத்துக்கள் ஏற்படக் கூடுமெனவும் மக்கள் மத்தியில் நம்பிக்கை காணப்படுகிறது.

இதன்படி இலக்கம் 13 அல்லது கூட்டெண் 13 வரும் வகையிலான இலக்கத் தகடுகளை விநியோகம் செய்வதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டல் அறைகளில் 13 ஆம் இலக்க அறைகள் வைக்கப்படுவதில்லை. எவ்வாறெனினும் கடந்த 70 ஆண்டுகளாக இலக்கம் 13 ஐக் கொண்ட வாகன இலக்கத் தகடுகள் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வாகனங்கள் களவாடப்படுவதனை தடுக்கும் நோக்கில் புதிய இலக்கத் தகடுகளில் விசேட தொழில் நுட்பமொன்று பயன்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பகுதிச்சேத கொடுப்பனவு இதுவரை கிடைக்கவில்லை

## கண்ணகிநகர் மக்கள் அங்கலாய்ப்பு

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புன்னைநீராவி கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள கண்ணகிநகர் கிராமத்திற்கு இன்றுவரை பகுதிச்சேத கொடுப்பனவு கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இக் கிராமத்தில் போரினால் முற்றாக அழிக்கப்பட்ட வீடுகள் புனரமைக்கப்பட்ட போதிலும் பகுதிச்சேத புனரமைப்பு புறக்கணிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிச்சேத வீடுகளை பல தொண்டு நிறுவனங்கள் வந்து பார்வையிட்டு இழப்பீடு வழங்குவதாக உறுதிமொழி தந்தும் இன்று வரை எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, மழை காலத்திற்கு முன்னர் இப் புனரமைப்பு வேலையை பூர்த்தி செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-264)

# பொறிக்கடவை வீதியை புனரமைத்து தாருங்கள்

(சிவநகர்)

பூநகரி- பரந்தன் வீதியின் 6 ஆவது கட்டையில் இருந்து குஞ்சுப் பரந்தனில் அமைந்துள்ள பொறிக்கடவை அம்மன் கோவிலடியை வந்தடையும் வீதியால் போக்குவரத்து செய்ய முடியாதுள்ளது.

இவ்வீதி அருகே செரு[illegible]ன் கிராமமும் கொல்லன் ஆறுக்கு அருகாமையிலுள்ள இத்தியடி கிராமமும் உள்ளது.எனவே, இவ்வீதியை புனரமைத்து பயன்படுத்தும் மக்களின் போக்குவரத்திற்காக உதவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-254)

# இனங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்த ஊடகங்கள் முனைப்பு

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் சிறுபான்மை இனங்களுக்கும் இடையில் முறுகலை ஏற்படுத்தக்கூடிய வகையில் சில ஊடக நிறுவனங்களும் நபர்களும் செற்பட்டு வருவதர்க பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறு குறுகிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வவுணதீவு, உன்னிச்சை இருநேருவில் பிரதேசத்தில் நான்கு தற்காலிக வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இரண்டு கோஷ்டிகளுக்கு இடையிலான முறுகல் காரணமாக இந்த வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர்,

எனினும் இச்சம்பவம் சிங்கள மற்றும் சிறுபான்மை இனத்துக்கு இடையிலான இன முறுகல் நிலைமையாக சித்திரிக்க சில இணைய ஊடகங்களும் இலத்திரனியல் ஊடகங்களும் முயன்று வருகின்றன.

நாட்டில் இடம்பெற்ற 30 ஆண்டு கால யுத்தத்தின் பின்னர் சிங்கள,தமிழ், முஸ்லிம் மக்கள் சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வரும் சந்தர்ப்பத்தில் குறுகிய நோக்கத்துடன் இவ்வாறு பிரசாரம் செய்வது வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்தச் சம்பவம் எந்தவொரு அரசியல் காரணத்தின் அடிப்படையிலும் இடம்பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(அ-2)

# மும்மொழியிலான விளம்பர பலகை பொருத்த பணிப்பு

(மல்லாவி)

அரசாங்கத்தின் மும்மொழி கொள்கைத் திட்டத்தின் கீழ் முல்லை.மாவட்டத்தில் உள்ள அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகளில் மும்மொழிகளிலான விளம்பரப் பலகை காட்சிப்படுத்தப்பட வேண்டுமென முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அரச மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்கள் ஊடாக பேருந்து உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதன்படி தமிழ்ப் பிரதேசங்களில் பயணிகள் சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள் பயணிக்கின்ற இடத்தினை குறிக்கும் விளம்பரப் பலகையில் முதலில் தமிழ் மொழியையும் இரண்டாவது சிங்கள மொழியையும் மூன்றாவது ஆங்கில மொழியையும் காட்சிப்படுத்த வேண்டுமெனவும் பேருந்தின் முன் பக்கம், பின் பக்கம் இக் காட்சிப்படுத்தல் காணப்பட வேண்டுமென அறிவித்துள்ளார்.

இவ் விளம்பரப் பலகை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னதாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் அதன் பின்னர் வீதிப் போக்குவரத்துப் பணிகளில் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலிஸார் கண்காணித்து இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (அ-3-15)




மானிப்பாய் வட்ட லியோ கழகத்தின் ஏற்பாட்டில் மானிப்பாய் வட்ட லயன்ஸ்கழக, லியோ கழக உறுப்பினர்கள் இணைந்து நடத்திய இரத்ததான நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி உடுவில் வீதி, மா[illegible] வர்த்தகத் தொழிற்றுறை வேளாண் மகளிர் ஒன்றிய [illegible] நடைபெற்றது. இந்நிகழ்வின் போது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 250 இற்கும் மேற்பட்டோரின் உயிரிழப்பு என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது

## ஈரானுக்கு ஜனாதிபதி இரங்கல்

(கொழும்பு)

ஈரானில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரங்கல் வெளியிட்டுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி முஹட் அஹம் நிஜாடீனுக்கு அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஈரானில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் 250 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

நில நடுக்கம் தொடர்பான செய்தி தம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நாட்டு மக்களின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்க இலங்கை தயார் என அவ் இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# சமுர்த்தி நிவாரண பணிகள் ஆரம்பம்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி நிவாரணப் பணிகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமுர்த்தி அதிகார சபையினால் இதற்கான ஆரம்பவிழா கடந்த வாரம் பூநகரி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் கே.குணரத்தினம், பூநகரிப் பிரதேச செயலக சமுர்த்தி தல்லைமைப்பீட முகாமையாளர் சி.கங்காதரன் உட்பட பலர் கலந்து சிறப்பித்ததோடு ஆரம்பகட்டமாக பயனாளிகளின் கணக்கு ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பான நடவடிக்கைகள் பூநகரிப் பகுதியில் உள்ள சகல கிராம சேவகர் பிரிவிலும் இடம்பெறவுள்ளதாக சம்பந்தப்பட்ட அலுவலரால் தெரிவிக்கப்பட்டது. (அ-84)

# பள்ளிவாசல் தீக்கிரை; கூட்டமைப்பு கண்டனம்

(மட்டக்களப்பு)

முஸ்லிம்களின் புனித நோன்பு காலத்தில் உன்னிசைக்கிராமத்திலுள்ள முஸ்லிம்களின் பள்ளிவாசல் தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவத்தையும் முஸ்லிம் பெண்ணொருவர் தாக்கப்பட்ட சம்பவத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் பாவற்கொடிச்சேனை என்னும் கிராமத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்களின் வழிபாட்டு இடமான பள்ளி வாசல் தீ வைக்கப்பட்டு எரிக்கப்பட்ட சம்ப வத்தையும் ஒரு குடும்பப் பெண் தாக்கப்பட்ட சம்பவத்தையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் இவ் வேளையிலும் முஸ்லிம் மக்கள் புனித நோன்பு அனுஷ்டிக்கும் இக் காலகட்டத்திலும் இவ்வாறான ஒரு வழிபாட்டுத் தலத்தையும் முஸ்லிம் பொண்ணொருவர் தாக்கப்பட்ட சம்பவத்தையும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஆயுதப் போர் இடம்பெற்று முடிவுக்கு வந்து சமாதான காலமென அரசாங்கம் அறிவித்த பின்பும் தமிழ், முஸ்லிம் மக்களின் இயல்பு வாழ்வையும் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையையும் சீர்குலைப்பதற்காக திட்டமிட்டு இச்செயலை யார் செய்தாலும் அவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி இவர்களுக்கான தண்டனையை வழங்க வேண்டுமென கேட்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தமிழ் தே.கூவுடன் சர்வதேச சமூகம் கைகோர்த்துள்ளது

## அரசுக்கு இது நன்றாகத் தெரியும் என்கிறார் சம்பந்தன்

(திருகோணமலை)

ஜனாதிப்தியின் விருப்பத்திற்கு ஏற்றவாறு செயற்படும் முதலமைச்சர் கிழக்கு மாகாண சபைக்கு தேவையில்லை.

மக்களின் விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய முதலமைச்சரே கிழக்கு மாகாண சபைக்கு தேவையாகும்.

அதன் காரணமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை திருகோணமலை பொதுநலவாய மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் உரையாற்றும் போதே சம்பந்தன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது உரையில் கூறியவை வருமாறு, ஒருமித்த நாட்டுக்குள் நிலையானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமானதும் நியாயமானதுமான அரசியல் தீர்வு ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி காணும்படி அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகள், இந்தியா ஆகியன இலங்கை அரசாங்கத்துக்கு தெளிவாக வற்புறுத்தியுள்ளன.

சர்வதேச சமூகம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பின்னால் நிற்கின்றது என்பது இலங்கை அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். இந்த நிலையில்தான் சிங்கள, தமிழ், முஸ்ஸிம் மக்கள் தமக்கு பின்னால் அணிதிரண்டு நிற்கின்றார்கள் என்பதை காட்டி சர்வதேச சமூகத்தை திசை திருப்பும் நோக்குடன் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை ஒரு வருடத்திற்கு முன்பதாக இலங்கை அரசாங்கம் நடத்துகின்றது.

அரசாங்கத்தின் இத்தந்திரோபாயத்தை கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனிப்பெரும் கட்சியாக எதிர்வரும் தேர்தலில் தெரிவு செய்வதன் மூலம் முறியடிக்க வேண்டும் என்றார். (அ-2)

# சம்பந்தனின் செயல் சிறுபிள்ளைத்தனமானது

## அமைச்சர் பீரிஸ் கிண்டல்

(கொழும்பு)

தேசியப் பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பில் மூத்த அரசியல்வாதி ஒருவர் அமெரிக்க பிரதிநிதி றொபேர்ட் ஓ பிளேக்கிடம் விளக்கமளிக்கவுள்ளதாக கூறியிருப்பது சிறுபிள்ளை ஒன்று அப்பாவிடம் கூறிவிடுவேன் என்று கூறுவதை போன்றது என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் தீர்வு விவகாரம் குறித்து அமெரிக்க பிரதிநிதி றொபேர்ட் ஓ பிளேக்கிடம் விளக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார் என்று அது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்றும் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர். இக்கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல வருடங்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற மூத்த அரசியல்வாதியிடம் இருந்து இதனைவிட ஆரோக்கியமான பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம். எமது நாட்டின் எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்று எமது நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும். வேறு யாரும் அதனை தீர்மானிக்க முடியாது. எமது மக்களும் அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமுமே இதனை தீர்மானிக்கும்.

இந்நிலையில்.எமது விவகாரத்தை வெளிநாடு ஒன்றின் பிரதிநிதியிடம் கூறப்போவதாக அரசியல்வாதி ஒருவர் தெரிவிப்பது நான் அப்பாவிடம்கூறிவிடுவேன்என்று சிறுபிள்ளை கூறுவதைப் போன்று காணப்படுகின்றது.

பக்குவமான மற்றும் பாராளுமன்றத்தில் பல வருடகாலம் அங்கம் வகிக்கும் ஒரு மூத்த அரசியல்வாதியிடமிருந்து இதனைவிட ஆக்கபூர்வமான விடயங்களை எதிர்பார்க்கின்றோம் என்றார். (அ-2)

# தகவல் வழங்கினால் 10 இலட்சம் ரூபா சன்மானம்

(கொட்டகெத்தேன)

இரத்தினபுரி-கஹவத்தை- கொட்டகெத்தேன பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்ய பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதியன்று கொட்டகெத்தேன பகுதியில் 63 மற்றும் 33 வயதுடைய தாய், மகள் கொல்லப்பட்டு தீயிட்டு எரிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த இரட்டை கொலை மர்மம் குறித்து தகவல் வழங்குவோருக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பொலிஸ்மா அதிபர் அறிவித்துள்ளார். (அ-2)



கலாசார திணைக்களத்தினால் கலாபூஷணம் விருது பெற்ற தவில் வித்துவான் கை.வீராச்சாமியை கௌரவிக்கும் நிகழ்வு கோவில்குளம் சிவன் கோவில் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விழா நாயகனுக்கு பிரதேச செயலாளர் வாழ்த்துப் பாமாலை வழங்குவதையும் அருகில் பிரபாகரக்குருக்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# 5 வருடங்களில் மீண்டெழுவோம்

## எஸ்.பி.நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை எதிர்வரும் 5 வருடங்களில் வறுமையிலிருந்து மீண்ட நாடாக மாறிவிடும் என உயர்கல்வியமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் அபிவிருத்தியடைந்த நிலையை எட்டும் இலங்கையில் தொழில் வாய்ப்பிற்காக அயல் நாடுகளில் இருந்தும் ஊழியர்களை அழைத்து வரும் நிலை ஏற்படும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு



செங்கை ஆழியான்

### விஜயனின் வருகை

#### விஜயனின் பிறப்பு

இலங்கையின் முதலாவது மன்னனாக விஜயன் என்பவன் இனங்காணப் படுகிறான். பாரம்பரியமாக மரபுவழி



விஜயனின் வருகையைச் சித்தரிக்கும் அஜந்தா குகை ஓவியம்

சத்தின் ஆறாவது அத்தியாயத்தில் நமது நாட்டின் வரலாறு, விஜயனின் கதையுடன் ஆரம்பமாகின்றது.

வங்கதேசத்து மன்னன், கலிங்க தேசத்து மன்னனின் மகளை மணந்திருந்தான். அவர்களுக்கு சுப்பாதேவி என்றொரு மகளும் பிறந்தாள். இவளுடைய ஜாதகத்தைக் கணித்த ஜோதிடர் இவள் விலங்குகளின் மன்னனுடன் (சிங் கம்) உறவு கொள்வாள் எனத் தெரிவித்தான். சுப்பதேவி மிக அழகுடையவளாக வளர்ந்தாள் ஒருநாள் மகத நாட்டை நோக்கி பயணப்பட்ட வணிகக் குழுவுடன் இணைந்து அரண் மனையை விட்டு வெளியேறி பயணப்பட்டாள். லாலா நாட்டின் காட்டினூடாக அக்குழு பயணம் செய்துகொண்டிருக்கும்போது ஒரு சிங்கம் அக்குழுவைத் தாக்கியது. சுப்பாதேவியைத் தவிர ஏனைய அனைவரும் அவ்விடத்தைவிட்டு நாலா திக்குகளிலும் சிதறி ஓடி விட்டனர். ஆனால், அவள் சிங்கம் வந்த திசையை நோக்கி நடந்து சென்றாள். வேட்டையாடி போதிய இரையைத் தின்று பசியாறிய நிலையில் அச்சிங்கம் அவ்வேளை இருந்தது.

திரும்பி பழைய படி குகைக்கு வந்தான்.

ஒருநாள் சிங்கம் இரையைத் தேடச் சென்றவேளை சிங்கபாகு தன்னொரு தோளில் தாயையும் மற்றைய தோளில் சகோதரியையும் இருத்தி குகைக்கு வெளியே வந்து வேகமாகப் பயணப் பட்டான். அவர்கள் இலை குழைகளை தம் ஆடைகளாக அணிந்துகொண்டு வங்க தேசத்தின் எல்லைக்கிராமம் ஒன்றினை அடைந்தனர். அவ்வேளை வங்க தேச மன்னனது மருமகன் அனுரா, அவர்கள் சென்றடைந்த பிரதேசத்தின் ஆள்வோனாக நியமிக்கப்பட்டிருந்தான். அநுரா, அவர்களைக் காண நேர்ந்தது. எவரென விசாரித்தபோது நாங்கள் காட்டு வாசிகள் என்றனர். அநுரா அவர்களுக்கு ஆடை அணிகளை வழங்கச்செய்தான். அகன்ற இலைகளில் வழங்கப்பட்ட உணவை அவர்கள் வாங்கி கரங்களில் ஏந்தியபோது அவ்விலைகள் தங்கத்தட்டுகளாக மாறிய அதிசயத்தை அவன் கண்டான். வியப்படைந்த அநுரா விசாரித்தபோது சுப்பாதேவி தன் வரலாற்றினைக் கூறினாள் அவள் தன் மாமன்மகள் எனப்புரிந்துகொண்ட அநுரா அவர்களை வங்க தேசத்தின் தலை நகருக்கு அழைத்துச் சென்று சுப்பா தேவியை திருமணம் செய்து கொண்டான். குகைக்கு திரும்பிய சிங்கம் மனைவியையும் பிள்ளைகளையும் காணாது கவலையடைந்து உணவும் நீரும் அருந்தாது அவர்களைத் தேடி எல்லைப்புறக் கிராமங்களுள் புகுந்தது. அக்கிராமங்களில் வாழ்ந்தோர் பயத்தினால் தமது இருப்பிடங்களைக் கைவிட்டு ஓடி மன்னரிடம்

சகோதரி சிங்க சீவிலியை மணந்து கொண்டான். தான் பிறந்த பிரதேசத்திற்கு சென்று லாலா நாட்டையும் சிங்கபுரம் என்ற புதியதொரு நகரத்தையும் அமைத்துக்கொண்டான் சிங்கபாகுவிற்கும் சிங்கசீவிலிக்கும் 16 தடவைகள் இரட்டை பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுக்கு மொத்தமாக 32 மக்கள். அவர்களில் மூததவன் விஜயன் இரண்டாமவன் சுமித்தா.


#### விஜயனும் தோழர்களும்

இளவரசன் விஜயன் மிகவும் கீழ்த் தரமான நடத்தைகளையும், கொடூரமான குணவியல்புகளையும் கொண்டவனாகக் காணப்பட்டான். அவனைப்போலவே அவனது தோழர்களும் விளங்கினர். அவர்களால் நாட்டு மக்கள் நித்தம் துயர்ப்பட்டனர். மக்களால் தாங்க முடியாதளவு கொடுமைகளைச் செய்தனர். மக்கள் திரண்டெழுந்து சிங்கபாகு மன்னனிடம் முறையிட்டனர். மன்னன் இருதடவைகள் மகனையும் அவனது தோழர்களையும் கடும் எச்சரிக்கைக்

## இலங்கையில் வரலாற்று உதயகால மன்னர்கள்

யாக மக்களிடையே நிலவிவந்த கதைகளையும், ஜாதகக் கதைகளையும் தொகுத்து எழுத்து வடிவில் பௌத்த துறவிகள் எழுதி வைத்தனர். அவர்கள் புத்தரின் பிறப்பிற்கும் நிர்வாணத்திற்கும் முதன்மை கொடுக்கும் கருத்தோடு வரலாற்றைப் பதிவு செய்ததால், ஆரம்ப கால வரலாற்றுப்பதிவுகள் கற்பனை கலந்ததாகவும் சுவாரசியம் நிறைந்ததாகவும் அமைந்தன. எனினும் இலங்கை வரலாற்றை புரிந்துகொள்ள இருக்கிற தகவல்களைக் கவனத்தில் எடுக்கவேண்டியுள்ளது. அதனால், விஜயனின் கதை

விஜயனின் உலாவைச் சித்தரிக்கும் சித்திரம்



யோடு இலங்கை வரலாற்றை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.


விஜயனின் வரலாற்றை மஹாவம்சம் பின்வருமாறு விபரிக்கின்றது. மஹாவம்

ஜோதிடத்தில் தெரிவிக் கப்பட்ட கதை அவளுக் குத் தெரிந்திருந்தது. எனவே அவள் சிங்கத்திற்குப் பயப்படவில்லை, சிங்கம் அவளை குகைக்கு கொண்டு சென்றது என்றும் சிங்கத்துக்கும் அவளுக்குமான உறவில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன (ஆணும் பெண்ணும்) என்றும் கூறப்படுகிறது.

பிறந்த ஆண்மகனின் கைகளும் கால்களும் சிங்கத்தின் கால்கள் போன்றிருந்தன. இதனால் அவனுக்கு சிங்கபாகு எனப்பெயரிட்டு அழைத்தாள். மகளுக்கு சிங்க சீவிலி எனப்பெயரிட்டாள் சிங்கபாகுவிற்கு 16 வயது நடந்து கொண்டி ருந்த போது "தாயே எமக்கும் எம் தந்தைக்கும் இடையில் தோற்றத்தில் இவ்வாறான வேறு பாடுகள் ஏன்?" எனக் கேட்டான். அவள் சகல விபரங்களையும் மகனிடம் கூறினாள். நாங்கள் ஏன் இங்கிருந்து வெளியே செல்ல முடியாது? எனக் கேட்க இக்குகையின் வாயிலைப் பாறையொன்றினால் உன் தந்தை அடைத்து மூடியுள்ளார் என்றாள் சுப்பாதேவி. சிங்கபாகு தன்தோளினால் [illegible] துக்கிடந்த [illegible] அதே நாளில் 50 ஜோஜனாதூரம் சென்று

முறையிட்டனர். சிங்கத்தைக்கொன்று மக்களின் துயரைப்போக்குபவர்களுக்கு 30 ஆயிரம் பொற்காசுகள் வழங்கப்படும் என மன்னன் பறை அறிவித்தான். சிங்கபாகு சிங்கத்தைக் கொல்ல முன்வந்த வேளையில் தாய் துர்க்காதேவி அனுமதிக்கவில்லை. மூன்றாவது தடவை தாயின் அனுமதியின்றியே சிங்கபாகு சிங்கத்தை வதம் செய்யப்புறப்பட்டான். சிங்கபாகுவில், அம்பு ஏந்தி சிங்கத்தின் குகைக்கு வந்தான். அவனைக் கண்டதும் பாசமிகுதியால் சிங்கம் அவனை நோக்கி வர அம்புகளால் அதன் உடலைத் துளையிட்டுக் கொன்றான். பின்னர் சிங்கத்தின் தலையைத் துண்டித்து நகரத்துக்கு எடுத்து வந்தான். அவன் திரும்பியவேளை வங்கதேச மன்னன் இறந்து ஏழு நட்களாகியிருந்தது. மன்னனுக்கு சுப்பாதேவி தவிர வேறு சந்ததியில்லை.

விஜயனின் முடிசூட்டுவிழாவைச் சித்தரிக்கும் ஓவியம்



அமைச்சர்கள் சிங்கபாகு வானவன் மன்னனின் பேரன் என்பதை இனங்கண்டு கொண்டனர். அவனை வங்கதேசத்தின் மன்னனாக்கினர்.

சிங்கபாகு மன்னனாகியதும் தனது

குள்ளாக்கியும் அவர்கள் திருந்தவேயில்லை. பொறுமையிழந்த மக்கள் "உங்கள் மகனைக் கொன்றுவிடுங்கள்" எனக் குரல் எழுப்பினர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

190

## யுத்த களத்தில் சேனாதிபதியை வென்ற கதை

## தெனாலிராமன் கதைகள்

மன்னர் கிருஷ்ணதேவ ராயரின் அரசசபை, மந்திரிகள் ராஜகுரு மற்றும் முக்கிய பிரமுகர்களுடன் நிரம்பி இருந்தது.

அரசசபையில் கூடி இருந்த அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தனர்.

காரணம் பலம்வாய்ந்த அண்டை நாட்டுடன் போர் புரிந்த விஜயநகரப் போர் வீரர்கள் வீராவேசத்துடன் போர் புரிந்து அண்டை நாட்டுப் போர் வீரர்களை சரணடையச் செய்து விட்டனர்.

திறமையுடன் போர் புரிந்த விஜயநகர போர் வீரர்களைப் பாராட்டி பரிசுகள் வழங்க வேண்டும் என்று விஜயநகரப் பேரரசின் சேனாதிபதி மன்னர் கிருஷ்ண தேவராயரிடம் கேட்டுக் கொண்டார்.

மன்னர் கிருஷ்ண தேவராயரும் சேனாதிபதியின் வேண்டுகோளை ஏற்று போரில் பங்குகொண்ட அனைத்து வீரர்களுக்கும் பரிசு வழங்க முடிவு செய்தார்.

போர் வீரர்களுக்கு பரிசு வழங்கப் போவதை அறிந்த தெனாலிராமன் அவசர அவசரமாக அரச சபைக்கு வந்து மன்னர் கிருஷ்ண தேவராயரை வணங்கினான்.

கிருஷ்ணதேவராயரும் பதிலுக்கு தெனாலிராமனை வணங்கினார்.

தெனாலிராமன் மன்னரைப் பார்த்து, பார் போற்றும் மன்னரே! தாங்கள் சமீபத்தில் நடந்து முடிந்த போரில் பங்குகொண்ட போர் வீரர்களுக்கு பரிசுகள் வழங்கப் போவதாக கேள்விப்பட்டேன்.

போர் வீரர்களுக்குப் பரிசுகள் வழங்குவதை நான் தடுக்கவில்லை.

அதேநேரத்தில் தாங்கள் அளிக்கும் பரிசுகளைப் பெற போர் வீரர்கள் தகுதியான வர்களா என்பதை யோசிக்கும் போது என்னால் அவர்களுக்கு பரிசுகள் அளிப்பதை ஒப்புக்கொள்ள முடியவில்லை என்றான்.

தெனாலிராமன் மன்னரிடம் கூறியவைகளை கேட்ட சேனாதிபதி சற்று கோபமாக



தெனாலிராமனை பார்த்து, தெனாலிராமா! போரைப் பற்றியும் அதில் கலந்து கொண்டு போர் புரிந்து வெற்றி வாகை சூடிய போர் வீரர்களைப் பற்றியும் உனக்கு என்ன தெரியும்.

நீ சுதந்திரமாக விஜயநகர சாம்ராச்சியத்தில் உலா வருவதற்கும் இரவில் பயமின்றி உறங்குவதற்கும் முக்கிய காரணம் விஜயநகர போர்ப் படையில் உள்ள போர் வீரர்கள்தான்.

அவர்கள் இரவு பகல் என்று பாராமல் கண் விழித்து விஜயநகர மக்கள் பயமின்றி வாழ பாதுகாப்பாக உள்ளார்கள்.

இத்தகைய பொறுப்பும் கடமை உணர்ச்சியும் உள்ள போர் வீரர்களுக்குப் பரிசளிப்பதைத் தடுக்கும் உரிமை உனக்கு இல்லை என்று தெனாலிராமனைப் பார்த்து கூறினார் சேனாதிபதி.

சேனாதிபதி சற்றுக் கடுமையாக கூறியவற்றை கேட்ட தெனாலிராமன் கோபப்படாமல், சேனாதிபதியை பார்த்து, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய சேனாதிபதி அவர்களே! நீங்கள் உங்களிடம் பணி புரியும் போர் வீரர்களின் திறமையைப் பற்றி கூறினீர்கள்.

அதேநேரத்தில் நான் சில ஆண்டுகளுக்கு முன் நடந்த போரில் கலந்து கொண்டு செய்த வீரச் செயலை யாருமே கண்டு கொள்ளவில்லை என்றான் தெனாலிராமன்.

தெனாலிராமன் கூறியதைக் கேட்ட சேனாதிபதியும் அப்படி என்ன யாருமே செய்ய முடியாததை செய்து காட்டினாய் என்றார்.

நான் செய்த வீரச் செயலை சொன்னால் எல்லோரும் ஆச்சரியப்படுவீர்கள்.

சண்டை நடந்து கொண்டிருந்த போது அங்கு சென்ற நான் தனி ஒரு மனிதனாகப் போர் களத்துக்குச் சென்று எதிரி நாட்டு சேனாதிபதியின் காலை ஒரே வெட்டாக வெட்டி விட்டு வந்து விட்டேன் என்றான் தெனாலிராமன்.

தெனாலிராமன் கூறியதைக் கேட்ட சேனாதிபதி, காலை வெட்டிய நீ ஏன் தலையை வெட்டவில்லை என்று கேட்டார்.

சேனாதிபதி கூறியதைக் கேட்ட தெனாலிராமன், என்னைப் பயந்தவன் என்றா எண்ணி விட்டீர்கள்.

காலை வெட்டிய நான் தலையை வெட்டாமல் விட்டதற்கு ஒரு காரணம் இருந்தது என்றான்.

தெனாலிராமன் கூறியதைக் கேட்ட சேனாதிபதியும் அரசர் கிருஷ்ண தேவராயரும் மிகவும் ஆவலாகத் தலையை வெட்டாமல் விட்டதற்கான காரணம் என்ன என்று கேட்டார்கள்.

தெனாலிராமனும் சேனாதிபதியையும் அரசர் கிருஷ்ண தேவராயரையும் பார்த்து காலை வெட்டுவதற்கு முன் தலையைத் தேடிய நான் தலையை எனக்கு முன்னால் யாரோ வெட்டிப் போட்டு விட்டதால் உயிரற்றுக் கிடந்த எதிரி நாட்டு சேனாதிபதியின் உடலில் இருந்த காலை மட்டும் வெட்டிப் போட்டுவிட்டு போர்க்களத்தில் இருந்து ஓடி வந்து விட்டேன் என்றான்.

தெனாலிராமன் கூறியதைக் கேட்ட சேனாதிபதியும் அரசர் கிருஷ்ண தேவராயரும் சற்று நேர அமைதிக்குப் பின்பு அரச சபையே அதிரும் வண்ணமாகப் பலமாகச் சிரித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துக்குள்ளானோர் விண்ணப்பிக்க முடியும்

(மல்லாவி)

இலங்கை தேசியப் போக்குவரத்து அமைச்சின் கீழ் உள்ள வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றம் மோட்டார் ஊர்திகளினால் விபத்துக்குள்ளாகியவர்கள் விபத்து இடம்பெற்று 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்குமாறு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, சம்பந்தப்பட்டவர் அல்லது உறவினர்கள் யாராகிலும் விபத்துக்குள்ளாகியிருப்பின் விபத்துச் சம்பவத்தை ஏற்படுத்திய மோட்டார் ஊர்தியை இனம்காண முடியாது போய் இருப்பின் நாடுபூராகவும் உள்ள பொலிஸ் திணைக்களங்கள் உங்கள், பகுதி பிரதேச செயலகங்கள் இல. 01, டீ.ஆர்.விஜயவர்த்தனா மாவத்தையில் உள்ள போக்குவரத்து அமைச்சின் வீதிப் பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் அல்லது www.Transportgov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ விண்ணப்பங்களைப் பெற்று உடன் பூரணப்படுத்தி பொருத்தமான ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறு அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை செயலாளர், வீதிப்போக்குவரத்துக்கான தேசிய மன்றம், போக்குவரத்து அமைச்சு, இல. 01, டீ.ஆர்.விஜயவர்த்தனா மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு விண்ணப்பித்து தீர்வினையும் பயன்களையும் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந-3-15)

# போர்க்குற்றவாளிகளை இலங்கை தண்டிக்கவேண்டும்

## கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின் போது போர்க்குற்றங்களில் ஈடுபடுபவர்களைக் கண்டறிந்து அவர்களை இலங்கை அரசு தண்டிக்க வேண்டும் என்று இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிருந்தா காரத் வலியுறுத்தியுள்ளார்.

தருமபுரியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

இலங்கையில் தமிழர்கள் பெரும் சித்திரவதைக்குள்ளாகியுள்ளனர். அவர்களின் உரிமைகள் நிலை நாட்டப்படவேண்டும்.

சுதந்திரமான ஓர் அமைப்பின் மூலம் விசாரணை நடத்தி அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களை இலங்கை அரசு கண்டறிந்து தண்டிக்கவேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு காண்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. விரைவில் அது ஏற்படுத்தப்படவேண்டும் என்றார். (அ-2)

# விக்கிரமபாகுவுக்கு பேச்சு சுதந்திரம் மறுப்பு

(கொழும்பு)

ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனம். வடக்கு கிழக்கு அவர்கள் தாயகம். ஈழத்தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு. இறுதிப்போர் என்று சொல்லி நடத்தப்பட்டது ஒரு இனப்படுகொலை. இதற்கு இந்திய நடுவண் அரசும் உடந்தை என்று விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற டெசோ மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்திய நடுவண் அரசுக்கு எதிராக உண்மையைத் துணிந்து உரைத்த விக்கிரமபாகு கருணாரட்னவின் உரையானது அவர் பேசிக்கொண்டிருக்கும் போது இடைநடுவில் தடுத்து நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புதுக்குடியிருப்பு பிரதேச செ.பிரிவில் அதிக கிணறுகள் அமைக்கப்பட வேண்டும்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கு வழங்கப்படவுள்ள கிணறுகளின் எண்ணிக்கை மிகக் குறைவானதாக காணப்படுகின்றது.

அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் ஊடாகவே இக்கிணறுகள் மக்களுக்கு வழங்குவதற்கான திட்டம் செயற்படுத்தப் படவுள்ளது.

இத்திட்டத்தின் ஊடாக ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளுக்கும் குறைந்தது 20 கிணறுகள் வழங்கப்படவுள்ளன. இங்குள்ள பெரும்பாலான கிராமங்களில் வீட்டுத் தோட்டத்தினையே அதிகளவாக காணமுடிகின்றது.

பெரும்பாலான குடும்பங்களின் வாழ்வாதாரம் இத்தோட்டத்திலேயே தங்கியுள்ளதால் வழங்கப்படவுள்ள கிணறு போதாதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களில் குறைந்தது ஒரு கிராமத்தில் 50 தொடக்கம் 100 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் 20 கிணறுகள் போதாதுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே கிராமசேவையாளர் ஊடாக கிராமங்களுக்கு வழங்கப்படவுள்ள இக்கிணறுகளின் எண்ணிக்கையை அதிகரித்து அனைவரும் பயன் பெறும் வகையில் உரிய தரப்பினர் ஆவண செய்யுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-260)




★1248-உலக பாரம்பரியக் களங்களில் ஒன்றான ஜேர்மனியின் கொலோன் கதீட்ரல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. இது 1880 இலேயே கட்டி முடிக்கப்பட்டது.

★1900- ஐரோப்பிய ஜப்பானிய அமெரிக்கக் கூட்டுப் படைகள் பீஜிங் நகரை ஆக்கிரமித்தன.

★1908- முதலாவது அழகுப் போட்டி இங்கிலாந்தின் போக்ஸ்டன் நகரில் இடம்பெற்றன.

★1912-நிக்கராகுவாவில் அமெரிக்க சார்பு அரசை அமைக்க அமெரிக்கக் கடற்படையினர் நிக்கராகுவாவை முற்றுகையிட்டனர்.

★1921-தன்னு துவா என்ற புதிய நாடு (தற்போதைய திவா) உருவாக்கப்பட்டது.

★1937- ஆறு ஜப்பானிய விமானங்கள் சீனாவினால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

★1945- பசுபிக் போர் முடிபுற்றது.

★1945- இரண்டாம் உலகப் போர்: நட்பு நாடுகளின் விதிகளுக்கமைய ஜப்பான் சரணடைந்தது.

★1947- பிரித்தானியா இந்தியாவில் இருந்து ஐக்கிய இராச்சியத்தின் நிர்வாகத்தின் கீழ் பாகிஸ்தான் விடுதலை அடைந்து பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இணைந்தது.

★1969- வட அயர்லாந்துக்கு ஐக்கிய இராச்சிய இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர்.

★1972- கிழக்கு ஜேர்மனியைச் சேர்ந்த விமானம் கிழக்கு பேர்லின் விமான நிலையத்திலிருந்து புறப்படும்போது விபத்துக்குள்ளாகியதில் 156 பேர் உயிரிழந்தனர்.

★1980- போலந்தில் தொழிற்சங்க தலைவர் லெக் வலேசா தலைமையில் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

★2006- இஸ்ரேல்- லெபனான் போ முடிவுக்கு வந்தது.

★2006- முல்லைத்தீவு செஞ்சோலை சிறார் இல்லம் மீது இலங்கை இராணுவத்தினர் நடத்திய விமானத் தாக்குதலில் 81 பாடசாலை சிறுமிகள் கொல்லப்பட்டு 60 பேர் படுகாயமடைந்தனர்.

★2007- ஈராக்கில் கட்டானியா என்ற இடத்தில் இடம்பெற்ற நான்கு தொடர் குண்டுவெடிப்புகளில் 796 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★1867- ஜோன் கல்ஸ்வோதி, நோபல் பரிசு பெற்ற ஆங்கில நாவலாசிரியர் (இ.1933)

★1959- மேஜிக் ஜான்சன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★1941- போல் சபாடியே, பிரெஞ்சு வேதியியலாளர் நோபல் பரிசு பெற்றவர் (பி.1854)


★1953-க. சிவபாதசுந்தரனார், யாழ்ப்பாணம் புலோலியூர் சைவப் பெரியார் (பி.1878)

★1958-பிரெட்றிக் ஜோலியோ, பிரெஞ்சு இயற்பியலாளர் நோபல் பரிசு பெற்றவர் (பி. 1900)

★1979- என். எம்.பெரேரா, இலங்கையின் மாக்சியவாதி

★2004- செஸ்லோ மிலோஸ், போலந்து எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர். (பி.1911)

★2007 - இராம திரு.சம்பந்தம், தினமணி முன்னாள் ஆசிரியர்



வேதாத்திரி

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் நெசவுத்தொழில்செய்யும் வரதப்பன் முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தவர். சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்தி கதைகளையும் புராணக்கதைகளையும் அறிந்து கொண் டார்.

இவரது குடும்பச்சூழல் இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாம் வகுப்பு வரை படித்த இவர் பின்னர் தங்கள் குடும்ப தொழிலான தறி நெய்தலை செய்யத் தொடங்கினார்.

18 ஆவது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது. சென்னையில் இவருக்கு ஆயுர் வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளை கற்றார் மகரிஷி .

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால் உந்தப்பட்டு சித்த ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்று தேர்ச்சி பெற்றார். மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணி புரிந்தார். பின்பு பொருளாதாரம் தன்னிறைவு பெற வேண்டும் என்று தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக் கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

அச்சமயத்தில் அரசாங்கத் தொழிற்கொள்கை மாற்றம் காரணமாக வியாபாரம் திடீர் சரிவு நிலையை அடைந்தது. இருப்பினும் தன்னிடம் பணிபுரிந்த 2000 குடும்பங்களையும் காப்பாற்றுவதற்காக ஈட்டிய பொருள் அனைத்தையும் அவர்களுக்கே செலவழித்து அனைத்து பொருள் வளத்தையும் இழந்தார்.

தனது 35 ஆவது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார். அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே மனவளக்கலை ஆகும்.

தனது சகோதரியின் மகளை மணந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார். ஆன்மீகத் தேடலில் மிகுந்த ஆர்வத்துடன் நாட்டம் கொண்டிருந்தார். இவரது ஆழ்ந்த ஆன்மீகத் தேடலின் விளைவாக தனது 35 ஆவது வயதில் ஞானம் பெற்றார். அதிலிருந்து அடுத்த 15 ஆண்டுகளில் பல உன்னதமான ஆன்மீகக் கருத்துக்களை தனது எழுத்துக்களின் மூலமாகவும் உரைகளின் மூலமாகவும் மக்களுக்கு எழுத்துரைத்தார்.

பின்னர் தனது நெசவு தொழிலை முற்றிலும் விட்டு விட்டு தன்னை முழுமையாக ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் தவநிலையில் தான் பெற்ற கருத்துக்களை பல கவிகளாகவும் கட்டுரைகளாகவும் புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அளித்துள்ளார்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த தமிழ் பாடல்களை இயற்றியிருக்கிறார்.

1957 இல் மகரிஷி உலக சமாதானம் என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார். 1958 ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம் இன்று இந்தியாவிலும் மலேசியா,ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.


அருட்தந்தை வேதாத்திரி 2006 ஆம் ஆண்டு மார்ச் 28 ஆம் திகதி தனது 95 ஆவது வயதில் மறைந்தார்.

மகரிஷியின் வைர வரிகள்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன் இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் அண்மைக்கால முதலீடுகள் ஐ.நா. மனித உரிமை பேரவை வாக்கெடுப்புக்கு முந்தியவை



"ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தமை காயப்படுத்தியதா? இந்தியா ஏன் அதை செய்தது என நீங்கள் கருதுகிறீர்கள்?"

"என்னால் சொல்ல முடிந்தது என்னவென்றால், நாம் உணர்வுகள் அற்ற நாடோ, மக்களோ அல்ல, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பொதுவான கலாசார மற்றும் வரலாற்று பெறுமானங்கள் உள்ளன. எனவே இத்தகைய நடவடிக்கையால், நாம் ஆழமாக உணர்ச்சியடைகிறோம். ஆனால், எமது நட்பையும் சிறந்த உறவுகளையும் இது மாற்றவில்லை. எமது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் பரிமாணம் மாறவில்லையென நான் நம்புகிறேன். அப்படியானதை (மாற்றத்தை) இந்தியப் பிரதமர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உட்பட முக்கிய அதிகாரிகளின் விஜயங்கள் வெளிப்படுத்தவில்லை.

கள் ஏற்பட்டுள்ளமை குறித்து வினவப்பட்டபோது, அணிசேரா நாடொன்றாக தொடர்ந்தும் இருப்பதில் இலங்கை முழு அர்ப்பணிப்புடன் உள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

"பழைய அதிகார கூட்டுகள் இல்லாதபோதிலும் அணிசேராக் கொள்கையை நாம் பின்பற்ற வேண்டும். அத்துடன் புதிய பூகோள அரசியல் யதார்த்தங்களையும் கருத்திற்கொள்ள வேண்டும். இலங்கைக்கு இந்தியா குறிப்பிடத்தக்க முக்கியமானதொரு நிலமாகும். ஆனால், நீங்கள் குறிப்பிட்டவாறு சீனாவுடனான உறவு அதிகரித்து வருகிறது என இந்திய அமைப்புகளிடையே இருக்கக் கூடிய கவலை ஆதரமற்றதாகும். ஆனாலும், இலங்கையில் சீன முதலீடு அதிகரித்துள்ளது. ஆனால், இவை அனைத்தும் வர்த்தகப் பரிமாற்றங்கள். மூன்று தசாப்பத யுத்தகாலத்தில் நாம் இழந்த அபிவிருத்தி வாய்ப்புகளை நாம் பற்றிக்கொள்ளவும் குறைந்த செலவிலான நிதிமூலங்களை நாம் தேடிக்கொள்ளவும் வேண்டியுள்ளது" என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறனார்.

## டைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகைக்கு இல. ஜனாதிபதி அளித்த செவ்வி

இலங்கையின் நிலைப்பாடாக இருந்தது என்னவென்றால், எமது அபிவிருத்திக்கு தடையாக இருந்த நீண்ட கால மோதலால் ஏற்பட்ட இனப் பிரச்சினைகளைத் தீர்க்க எமக்கு மேலும் அவகாசம் வழங்க வேண்டும் என்பதே."

"பிரேரணைக்கு இந்தியா ஆதரவு அளித்தபோதிலும் உண்மையில் அப்பிரேரணையில் பயன்படுத்தப்படும் மொழிப் பிரயோகத்தை நீக்கச்செய்து, அது அத்துமீறாததாகவும் அது கண்காணிப்புப் பொறிமுறையாக இல்லாதிருப்பதையும் உறுதிப்படுத்துவதில் பிரதமர் மன்மோகன்சிங் ஆர்வம் கொண்டிருந்தார். அத்துடன் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் அமெரிக்கா செல்வாக்கு செலுத்துவதாக நீங்கள் கருதுகிறீர்களா?"

"அப்பிரேரணைக்கு அப்பால் செல்வது நல்லது என எண்ணுகிறேன். அது நடந்து முடிந்து விட்டது. எந்த நல்ல நோக்கங்களும் நடவடிக்கைகளும்எப்போதும் பாராட்டத்தக்கவை. ஆனால், இந்தியா எமக்கு ஆதரவாக நின்று மேலும், நேரமும் இடமும் வழங்கப்படவேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கைக்கு ஆதரவு அளித்திருந்தால், அவ்வாறான பிரேரணையே இல்லாமல் இருந்திருக்கும். இப்பிராந்தியமானது இந்தியாவை நோக்குகிறது. இந்தியா தனது அயல்நாடுகளுடனான விவகாரங்களை கையாளும் போது தான், செய்வது சரியானதா, தவறானதா என ஆராய வேண்டும்."

சீனாவுடனான கொழும்பின் நெருக்கம் அதிகரிப்பது குறித்து இந்திய அமைப்புகளிடையே கவலை

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் மாத்திரமல்லாமல் கொழும்புத் துறைமுகத்திலும் வீதிகள், ரயில்வே, மின் உற்பத்தி நிலையங்கள் என்பவற்றிலும் சீனா அண்மையில் முதலீடுகளைச் செய்துள்ளமை குறித்து வினவப்பட்டபோது,

சீனாவின் அண்மைக்கால முதலீடுகளான ஐ.நா. மனித உரிமைப் பேரவை வாக்கெடுப்பிற்கு வெகு முன்னராக நடந்தவை என ஜனாதிபதி கூறினார்.

"காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையம் ஆகியற்றை இந்தியா மீள் நிர்மாணம் செய்கிறது. சம்பூர் அனல் மின்நிலையத்தில் இந்தியா முதலீடு செய்கிறது. வடக்கிலும் ரயில்வே நிர்மாண நடவடிக்கையிலும் இந்தியா ஈடுபட்டுள்ளது. கொழும்பு துறைமுக அபிவிருத்திக்கு புகோளரீதியான கேள்விப்பத்திரம் கோரப்பட்டு, ஹொங்கொங்கை தளமாக கொண்ட நிறுவனமொன்று அதில் வென்றது. அந்த ஒப்பந்தத்தை

வெடிபொருட்களையும் எமக்கு சிறந்த நிபந்தனைகளில் வழங்கத் தயாராக விருந்த சட்டபூர்வமான அமைப்புகளிடமிருந்து நாம் வாங்கவேண்டியிருந்தது. இப்பிராந்தியத்தில் இந்தியாவின் நலன்களைப் பாதிக்கும் வகையில் இலங்கை எதையும் செய்வதற்கு காரணமில்லை" எனவும் அவர் கூறினார்.

"வடக்கில் இராணுவ மயத்தை நீக்குவதற்கு போதுமானளவு நீங்கள் ஏன் செயற்படவில்லை? அத்துடன் உங்கள் படையினரில் ஏறத்தாழ 70 சதவீதமானோர் வடக்கில் இன்னும் நிலைகொண்டுள்ளனர். அதியுயர் பாதுகாப்பு வலையங்கள், காணாமற் போனவர்களின் பட்டியல், வடக்கில் தேர்தல் தொடர்பாக நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"

"எமது ஆயுதப்படையினரில் 70 சதவீதமானோர் வடக்கில் நிலை கொண்டுள்ளதாக கூறுவது, விடுதலைப்புலிகளின் எச்சசொச்சங்களின், இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான தீயநோக்கம் கொண்ட பிரச்சாரமாகும். அது நிச்சயமாக உண்மையல்ல. பயங்கரவாதிகளால் மூன்று தசாப்பதங்களாக நடத்தப்பட்ட கொடிய ஆயுத மோதலில் இருந்து நாம் மீண்டு வருகிறோம். வடக்கிலுள்ள படையினரின் எண்ணிக்கையை படிப்படியாகக் குறைத்து வருகிறோம். 2009 டிசெம்பரில் யாழ்ப்பாணத்தில் எமது படையினரின் எண்ணிக்கை 27 ஆயிரமாக இருந்தது. இவ்வருடம் ஜூன் மாதம் இந்த எண்ணிக்கை 15 ஆயிரமாகும். இதை இராணுவ மயப்படுத்தலுக்கான அறிகுறியாக பார்ப்பது கடினம். வடக்கில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையை நீங்கள் அறியவில்லையென நம்புகிறேன்.

வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவர்கள் வகிக்கும் பாத்திரத்தை நீங்கள் ஏன் பார்க்கவில்லை? வடக்கில் ஒளித்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படுவது உங்களுக்குத் தெரியாதா? அத்துடன் வெளிநாடுகளில் குறிப்பாக மேற்குலகில் வாழும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவுக் குழுக்கள் வன்முறையைத் தூண்டுவதை நீங்கள் அறியவில்லையா? நன்கு

மாட்டா என்பதை நான் வலியுறுத்த வேண்டும்"

"தமிழ் தேசியகூட்டமைப்பினுடனான பேச்சுவார்த்தையில் தற்போது ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைக்கு யார் காரணம்?"

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கு விரும்பும் வேறு எவருடனும் பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு நாம் எப்போதும் தயார். ஆனால், அனைத்து கலந்துரையாடல்களையும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நடத்தலாம் என திட்டவட்டமாக நாம் கூறியுள்ளோம். நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வருவதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டும்" என ஜனாதிபதி பதிலளித்தார்.

"உங்கள் வெளிவிவகார அமைச்சர் 2011 மே மாதம் இந்தியாவிற்கு விஜயம் செய்தபோது இருநாடுகளாலும் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் 13-வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் தீர்வுப்பொதியானது உண்மையான நல்லிணக்கத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் என கூறப்பட்டது. ஆனால், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை வலியுறுத்துவதானது இனப்பிரச்சினை தொடர்பான உங்கள் அரசாங்கத்தின் மற்றொரு இழுத்தடிப்பாக இந்தியாவினால் பார்க்கப்படுகின்றது?

"உங்கள் கேள்வியிலேயே நீங்கள் பதிலை அளித்துள்ளீர்கள். 13-வது திருத்தத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட உண்மையான நல்லிணக்கத்திற்கான சூழல் தொடர்பான

நன்றி: இணையம்

2011 மே கூட்டறிக்கையை நீங்கள் குறிப்பிட்டீர்கள். அதைத்தான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினூடாக நாம் அடைய விரும்புகிறோம். செயற்படும் ஜனநாயகத்தில் நாம் இருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. நாடாளுமன்றமே அதியுயர் சட்டமியற்றும் சபை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனோ, வேறு யாருடனோ நாம் என்ன பேசினாலும் இறுதித் தீர்மானம் நாடாளுமன்றத்தினா

## தனது அயல்நாட்டு விவகாரங்களை இந்தியா ஆராய்ந்து கையாளவேண்டும்

சீனாவுக்கு இலங்கை வழங்கியது என்பது தவறானது. இந்தியாவும் கேள்வி மனுக் கோரலில் பங்குபற்றியிருக்கலாம். ஆனால், அவர்கள் அதை செய்யவில்லை" என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

"ஆம் உலகின் மிகக் கொடிய பயங்கரவாதிகளுடன் நாம் போரிட்ட போது எமக்கான ஆயுதங்களையும்

நிதி அளிக்கப்பட்ட இந்தக் குழுக்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்து கடந்த மூன்று வருடகால அனுபவத்தைக் கருத்திற்கொண்டு எச்சரிக்கையாக இருப்பதற்கு நாம் உரித்துடையவர்கள் இல்லையா? இந்த ஆயுதப்படை உறுப்பினர்கள் இல்லையாயின் யுத்தத்தின் பின்னரான பாரிய அபிவிருத்திகள் இடம்பெற்றிருக்க

லேயே மேற்கொள்ளப்படவேண்டும். அதனால்தான் மேலும் உண்மையான, செயற்படக் கூடிய இணக்கப்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கூடாக தீர்வொன்றைக் காண்பது சிறந்தது என நாம் கருதுகிறோம். என ஜனாதிபதி செவ்வியின் நிறைவில் மேலும் பதிலளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் சார்பாக கேள்வி எழுப்பிய இலங்கை உயர்ஸ்தானிகர் பணி நீக்கம்

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற இலங்கை இராஜதந்திரிகளுக்கான மாநாட்டில் மலேசிய தமிழர்கள் எழுப்பிய கேள்வியை கேட்டமைக்காக மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கே.கொடகே பதவி விலக்கப்பட்டுள்ளார். 76 வயதான கொடகே ஓய்வின் பின்னர் கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் மலேசிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் மலேசியாவில் உள்ள தமிழர்களால் அவருக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்த கேள்வி ஒன்றை அவர்கள் சார்பில் இராஜதந்திரிகள் மாநாட்டில் எழுப்பி இருந்தார்.

இலங்கை தமிழர்களுக்கு அரசாங்கம் இதுவரையில் என்னென்ன செய்திருக்கிறது என அவர் எழுப்பிய கேள்வியும் அவர் மலேசிய தமிழர்களின் சார்பாக இந்த கேள்வியை எழுப்பியமையும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து அவர் பதவி விலக்கப்பட்டு மீண்டும் இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளார். தம்மை பதவி விலக்கியமையானது நேர்மையும் நீதியும் இல்லாத செயல் என அவர் கண்டனம் வெளியிட்டுள்ளார். இந்த மாத இறுதியில் அவர் நாடு திரும்புவார் என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## குடிநீரின்றி அலைந்து திரியும் கால்நடைகளின் பரிதாபம்

### பூநகரிப் பகுதியில் துன்பம்

(பூநகரி)

பூநகரி பகுதியில் உள்ள சகல குளங்களும் வற்றிய நிலையில் பல ஆயிரக்கணக்கான கால்நடைகள் குடிப்பதற்கு நீரின்றி அலைந்து திரியும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

குறைந்தளவான நீருள்ள குளங்களில் வீதி ஒப்பந்தகாரர்கள் தமது வேலைகளுக்காக பவுசர்கள் மூலம் நீரை உறிஞ்சிப் பெற்றுக் கொள்வதால் என்றுமில்லாதவாறு நீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குளங்களில் நீரைப் பெறுவது தடுக்கப்பட்டால் தாம் வீதி திருத்த வேலைகளை நிறுத்தி விட்டு சென்று விடுவோம் என வீதி ஒப்பந்தகாரர்கள் தெரிவிப்பதால் மக்கள் எதுவும் செய்வதறியாது விழிக்கின்றனர்.

ஆயினும் இத் தண்ணீர் பஞ்சத்தை தீர்க்க ஊறாது உள்ள குளங்களை ஆழமாக்க வேண்டும். இதன்மூலம் கால்நடைகளை அழிவில் இருந்து காப்பாற்ற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-84)

## மஹிந்தவுக்கு எதிராக சந்திரிகா செயற்பட்டார்

### அமைச்சர் விமலின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கடந்த 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக செயற்பட்டதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்த லின் போது சந்திரிகா பண்டாரநாயக்க ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவாகவே செயற் பட்டார். அண்மையில் பொலநறுவை பிர தேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட் டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக ஓர் துண்டுப்பிரசுரத்தைக் கூட அனுப்பி வைக்க சந்திரிகா நடவடிக்கை எடுக்கவில்லை.

சந்திரிக்காவின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளாது அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாகச் செயற்பட்டார் என தெரிவித்துள்ளார்.

கடந்த 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் காமினி திசாநாயக்க பற்றிய உளவுத் தகவல்களை ரணில் விக்ரமசிங்க, சந்திரிகா பண்டாரநாயக்கவிற்கு வழங்கியதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார். எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை ரணில் விக்ரமசிங்கவும் சந்திரிகா பண்டாரநாயக்கவும் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பொதுச்சந்தையில் கழிவு நீர் தேக்கம்

### மூக்கைப்பொத்தும் மக்கள்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசசபைக்குட்பட்ட மல்லாவி நகரப்பகுதியில் உள்ள பொதுச்சந்தையில் நீர்வசதி ஏற்படுத்திக் கொடுக்காமையினால் சுகாதாரப் பணியாளர்களின் பணி சீரின்மையாலும் மலசலகூடம் மற்றும் சந்தைப் பகுதியின் சில பகுதிகளில் கழிவுகள் தேங்கி துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மல்லாவி நகரப்பகுதியில் அமைந்துள் பொதுச்சந்தையானது துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட 35 கிராமசேவகர் பிரிவுகளில் உள்ள 6 ஆயிரத்து 50 குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரதான சந்தையாகும். இங்கு தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் வருகைததருகின்றபோது பெரும்பாலானவர்கள் நீண்டதூரத்தில் இருந்து வருகை தருபவர்களாக இருப்பதால் இங்குள்ள மலசலகூடத்தையே பயன்படுத்துகின்றனர்.

இவர்களுடன் பேருந்துப் பயணிகளும் மல்லாவி நகரப்பகுதி வர்த்தக நிலையங்களுக்கு வருகை தருகின்ற பொதுமக்களும் இம் மலசல கூடத்தையே பயன்படுத்துகின்றனர்.

என்வே உரிய தரப்பினர் நீர் வசதியுடனான மலசலகூடத்தை ஏற்படுத்தி தருவதுடன் சுகாதாரப் பணியாளர்களின் சேவை தினசரி சந்தைப்பகுதிக்கு கிடைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை ஏற்படுத்தித் தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-15)



அலம்பில் பிரதேச உடுப்புக்குளம் மீள்குடியேற்றக் கிராமத்தில் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிராமத் தலைவர் பா. ஜோன் மென்கோ அடிக்கல் நாட்டுவதை படத்தில் காணலாம்.

## பொருளாதாரத்தை சீர்குலைக்க புலம்பெயர் தமிழர்கள் முனைப்பு

### அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்கு புலம்பெயர் தமிழர்கள் முயற்சி செய்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரின் மூலம் வெற்றியீட்ட முடியாது என அறிந்து கொண்ட புலம்பெயர் சமூகம் தற்போது பொருளாதார ரீதியாக இலங்கையை நெருக்கடிக்குள் ஆழ்த்த முயற்சிக்கின்றது.

இந்த சதி முயற்சியை தோற்கடிக்க எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் ஆளும் கட்சியை மக்கள் வெற்றி பெறச் செய்ய வேண்டும். தேர்தலில் மக்கள் அரசாங்கத்துடன் இருப்பதனை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு வெளிப்படுத்துவதன் மூலம் புலம்பெயர் தமிழர்களின் சூழ்ச்சித் திட்டங்களை முறியடிக்க முடியும். புலம்பெயர் தமிழர்களில் ஒரு பிரிவினர் வடக்கின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

எனினும் மற்றுமொரு பிரிவினர் தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாது பல்வேறு சதித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டில் முதலீடு செய்வதனை தடுக்க புலம்பெயர் தமிழர்கள் முயற்சி செய்து வருகின்றனர். போரை வென்றதைப் போன்றே தமிழ் புலம்பெயர் மக்களின் சதி முயற்சிகளும் தோற்கடிக்கப்படும் என்றார். (அ-2)

## த.ம.வி.பு.கட்சி செயலாளர் அலுவலகம் தாக்கப்பட்டது

### பொலிஸாரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான பூ. பிரசாந்தனின் தேர்தல் அலுவலகம் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக காத்தான் குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக தெரியவருவதாவது,

தேர்தல் அலுவலகத்தினுள் நுழைந்த சிலர் அங்கிருந்தவர்களைத் தாக்கியதுடன் தளபாடங்களையும் சேதப்படுத்தியுள்ளனர். இதேவேளை முச்சக்கரவண்டியில் வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆரையம்பதி வேட்பாளரின் உறவினர் ஒருவரும் மற்றும் அவரின் ஆதரவாளர்கள் சிலருமே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் காத்தான்குடி பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளை அந்த அலுவலகத்திற்குள் வேட்பாளர் பூ.பிரசாந்தன் இருந்திருக்கவில்லை எனவும் அவரது அலுவலக உதவியாளரே அலுவலகத்தில் இருந்ததாகவும் அங்குள்ள கதிரைகள் சேதப்படுத்தப்பட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் கூறினர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 10: பத்மாசனம் என்ன நன்மை செய்யும்?**

**பதில்:** பத்மாசனத்தினால் பல நன்மைகள் உண்டாகும் – ஜீரண சக்தி நன்றாக இருக்கும். பதற்றத்தைக் குறை த்து மனதில் அமைதியை உண்டாக்கும். பத்மாசனம் செய்வதற்கு எளிதானதும் கூட.

செய்முறை: தரையில் சம்மணமிட்டு அமர்ந்து கொள்ளுங்கள். வலது பாதத்தை வலது தொடையின் மீதும் இடது பாதத்தை வலதுதொடையின் மீதும் வைத்துக் கொள்ளுங்கள். பாதங்கள் தொப்புள் பகுதிக்கு அருகில் இருக்க வேண்டும். முதுகெலும்பு நேராக இருத்தல் வேண்டும். கைகள் இரண்டையும் நேராக நீட்டி கால் மூட்டுக்களின் மீது வைத்துக் கொள்ளுங்கள். உள்ளங்கை இரண்டும் மேலே பார்த்த வண்ணம் இருத்தல் வேண்டும். இருகைகளிலுள்ள கட்டை விரலும் சுட்டுவிரலும் ஒன்றையொன்று தொட வேண்டும்.


**கேள்வி 11: நீரிழிவு நோயாளிக்கு வேறு எத்தகைய பயிற்சிகள் பயனளிக்கும்?**

**பதில்:** ஒரு நீரிழிவு நோயாளி பின்வரும் யோகாசனங்களைப் பயின்று தனது நோயைக் கட்டுப்படுத்தலாம்.

I) **தனுராசனம்:** இந்த ஆசனத்தை ஒரு நீரிழிவு நோயாளி ஒரு நாளைக்கு இரண்டு தடவை மட்டுமே செய்ய வேண்டும். தரையில் குப்புறப்படுத்துக் கொள்ளுங்கள். கால்கள் இரண்டையும் மேல் நோக்கி மடக்கிக் கொள்ளுங்கள். உங்கள் கைகள் இரண்டையும் பின்பக்கம் கொண்டு சென்று கணுக்கால்களைப் பற்றிக் கொள்ளுங்கள். இப்போது உங்கள் மார்பு, தலை மற்றும் தொடைகளை மேலே தூக்குங்கள் இந்நிலையில் உங்கள் மூச்சை ஒரு சில விநாடிகள் நிறுத்திக் கொள்ளுங்கள்.

II) **திரிகோணாசனம் :** இது செய்வதற்கு மிகவும் எளிதான ஆசனமாகும். இரண்டு கால்களுக்கும் மூன்று அடி இடைவெளிவிட்டு நேராக நில்லுங்கள். கைகள் இரண்டையும் தலைக்கு மேல் தூக்கி கொள்ளுங்கள். இப்போது உடலை இடுப்பிலிருந்து வலது பக்கமாக வளைத்து கைவிரல்களினால் வலது கால் விரல்களைத் தொடுங்கள்.

இச்சமயம் உங்கள் இடது கை செங்



குத்தாக மேல் நோக்கி இருக்கும். மீண்டும் பழைய நிலைக்கு வாருங்கள். இப்போது இடது பக்கம் வளைந்து இடது கையினால் இடது கால் விரல்களைத் தொடுங்கள். இவ்வாறு மாற்றி மாற்றி ஐந்து அல்லது ஆறு தடவை செய்யுங்கள். இதனால் ஜீரண சக்தி அதிகரிக்கும்.

III) **சர்வாங்காசனம்:** இந்த ஆசன த்தை நீங்கள் 1–5 நிமிடம் செய்தால் போதும். விரிப்பின் மீது மல்லாந்து படுங்கள். தரையிலிருந்து முதலில் மெதுவாக உங்கள் கால்களையும் அடுத்து தொடைகளையும் இறுதியில் இடுப்பையும் உயர்த்துங்கள். முழங்கைகளைத் தரையில் ஊன்றி உள்ளங்கைகளால் உங்கள் இடுப்பை பற்றிக் கொள்ளுங்கள். இப்போது உங்கள் உடல் எடை முழுவதும் உங்கள் தலை, தோள் மற்றும் முழங்கைகளின் மீது இருக்கும். மீண்டும் பழைய நிலைக்கு வாருங்கள்.

IV) **பஸ்சிமோத்தாசனம் :** தரையில் அமருங்கள். கால்கள் இரண்டையும் முன் பக்கம் நீட்டிக் கொள்ளுங்கள். அப்படியே முன்புறம் குனிந்து உங்கள் இரண்டு கைகளாலும் உங்கள் இரண்டு கால்கட்டை விரல் களைப் பற்றிக் கொள்ளுங்கள்.

V) **புஜங்காசனம்:** புஜங்காசனம் முதுகெலும்பிற்கு அழுத்தம் கொடுத்து அதனை நெகிழ்வுத் தன்மை உடையதாக்கிறது. தரையில் குப்புறப்படுத்துக்கொள்ளுங்கள். கைகள் இரண்டையும் தரையில் ஊன்றி உடலை மெதுவாக உயர்த்துங்கள். இப்போது உங்கள் உடல் எடை முழுவதும் உங்கள் உள்ளங்கை மற்றும் விரல்களின் மீது இருக்கும்

VI) **வஜ்ராசனம் :** வஜ்ராசனம் வாயுத் தொல்லையைப் போக்கும், தரையில் முட்டி போட்டு நில்லுங்கள், உங்கள் குதிக் கால்கள் இரண்டின் மீதும் அப்படியே அமருங்கள். இப்போது உங்கள் உடல் எடை முழுவதும் உங்கள் குதிக்கால்களின் மீது இருக்கும். கைகள் இரண்டையும் தொடைகளின் மீது வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் முதுகெலும்பு நிமிர்ந்தபடி நேராக இருக்கட்டும்.

VII) **சூரிய நமஸ்காராசனம் :** இந்த ஆசனத்தில் பன்னிரண்டு நிலைகள் உள்ளன. இந்த ஆசனத்தைச் செய்வதற்கு முன்னும் பின்னும் வேறு எந்தவொரு ஆசனமும் செய்யத் தேவையில்லை அதிகாலையில் சூரியன் உதிக்கும் பொழுது இந்த ஆசனத்தைச் செய்ய வேண்டும். பின்வருமாறு இந்த ஆசனத்தைச் செய்ய வேண்டும்.

**முதல்நிலை:** நேராக நிமிர்ந்து நில்லுங்கள். கைகள் இரண்டையும் குவித்து மார்பின் மீது வைத்துக் கொள்ளுங்கள். அதாவது உங்கள் கைகள் வணங்குவது போல் இருத்தல் வேண்டும்.

**இரண்டாம் நிலை :** உங்கள் மூச்சுக் காற்றை நிறுத்திக் கொள்ளுங்கள். குவித்த கரங்களை முடிந்தவரை மார்புக்கு மேலே உயர்த்துங்கள்.

**மூன்றாம் நிலை :** அடுத்து முன்புறம் குனிந்து உங்கள் தலையால் கால் முட்டிகளைத் தொழுங்கள். உள்ளங்கைகள் இரண்டும் உங்கள் பாதங்களின் இருபுறமும் தரையில் தொடும்படி இருக்கட்டும்.

**நான்காம் நிலை :** இப்போது இடது காலை பின்பக்கம் கொண்டு செல்லுங்கள். வலது கால் முட்டியை மடக்கிக் கொள்ளுங்கள். கைகள் இரண்டும் தரையில் ஊன்றியபடி இருக்கட்டும். கால் முட்டியால் உங்கள் மார்பைத் தொட முயலுங்கள்

**ஐந்தாம் நிலை:** இப்போது வலது காலையும் பின்பக்கம் நீட்டிக் கொள்ளுங்கள். பாதங்கள் இரண்டும் தரையில் நன்கு ஊன்றியபடி இருக் கட்டும்.

**ஆறாம் நிலை:** ஐந்தாம் நிலையில் இருந்த படியே உங்கள் முகவாய்க்கட்டை மார்பு, கால்முட்டிகள் முதலியவை தரையை நன்கு தொடட்டும்.

**டாக்டர். A.K. ஜிங்கான்**

**ஏழாம் நிலை :** இப்போது உங்கள் தலை மற்றும் மார்பை உயரே தூக்கி மேலே நிமிர்ந்து பாருங்கள்.

**எட்டாம் நிலை:** கால்களும் கைகளும் தரையில் ஊன்றியபடி இருக்கட்டும். உங்கள் தலை உங்கள் இரண்டு கைகளுக்கும் இடையில் இருக்க வேண்டும்.

**ஒன்பதாம் நிலை:** சுவாசிக்கும் பொழுது இடது காலைமடக்கி உங்கள் கைகளுக்கு இடையில் கொண்டு வாருங்கள். உங்கள் வலதுகாலை பின் புறம் நன்கு நீட்டிக் கொள்ளுங்கள். வலது கால் முட்டி தரையைத் தொட வேண்டும்.

**பத்தாம் நிலை:** ஒன்பதாம் நிலைக்கு நேர் மாறாக இப்போது வலது காலை மடக்கி கைகளுக்க் இடையில் கொண்டு வாருங்கள். இடதுகாலை பின்புறம் ஒட்டிக் கொள்ளுங்கள்.

**பதினொராம் நிலை :** மூச்சை நன்கு உள் இழுத்துக் கொள்ளுங்கள். கைகள் இரண்டையும் மேலே தூக்குங்கள் கால்கள் இரண்டும் நேராக இருக்கட்டும்.

**பன்னிரண்டாம் நிலை :** மூச்சுக்காற்றை வெளியே விட்டபடியே கைகள் இரண்டையும் மார்புக்குள் கொண்டு வந்து குவித்துக் கொள்ளுங்கள். முதல் நிலைக்கு வாருங்கள்.

(தொடரும்)




# ஊட்டச்சத்துக்கள் நிறைந்த வல்லாரை

இது நீர் நிறைந்த பகுதிகளில் தானாக வளரும் தாவரம். இதன் இலைப்பகுதிகள் உணவாகப் பயன்படுவதால் இத்தாவரம் கீரையினங்களுள் அடங்கும் . வல்லமை மிக்க கீரை என்பதால் வல்லாரை எனப் பெயர் பெற்றது. இக்கீரையில் இரும்புச் சத்து, சுண்ணாம்புசத்து உயிர்ச்சத்து ஏ ,சி மற்றும் தாது உப்புக்கள் ஏராளமாக அடங்கியுள்ளன. இரத்தத்திற்கு தேவையான சத்துக்களை சரிவிகித அளவில் கொண்டுள்ளது.


மூளை நன்கு செயல்படத் தேவையான ஊட்டச்சத்துக்களை தகுந்தமுறையில் பெற்றிருக்கிறது.

காலை வேளையில் பறித்த சில மணி நேரங்களில் பச்சையாக நன்கு மென்று விழுங்கி வந்தால் மூளை மிகுந்த செயலாற்றல் பெறும். அத்துடன் ஒரு கைப்பிடியளவு கீரையைப் பச்சையாக நன்கு மென்று விழுங்கிய பின் பசும்பால் உண்டு வர மாலைக்கண் நோய் குணமாகும்.

சிறுவர் அடிக்கடி உண்ணுதல் மிக்க நல்லது. இக்கீரையை சித்த மருத்துவர்கள் லேகியம், சூரணம், மாத்திரை போன்ற வடிவங்களில் பக்குவப்படுத்தி பயன்படுத்துகிறார் கள்.

**வளரியல்பு**

ஈரமான பகுதிகளில் அதிகமாகக் காணப்படும். தட்பமான, மித தட்பமான பகுதிகளில்



வளரும். ஒரு மென்மையான கொடி, தண்டு நீண்டதாக தரையில் படர்ந்து இருக்கும். செங்குத்தான வேர்களின் இலைக் கோணத்திலிருந்து இந்த தண்டுகள் வளரும். மெல்லிய தண்டு பெரும்பாலும் சிவப்பு நிறமானதாக இருக்கும். வேர்க்கூட்டத்திலிருந்து தோன்றும் இலைக்காம்பு மிகவும் நீண்டு இருக்கும்.

ஒரு கணுவிலிருந்து 1 முதல் 3 இலை தோன்றும். இலையின் வடிவம் வட்ட வடிவமாகவோ மொச்சை வடிவமாகவோ இருக்கும். அகலம் அதிகமாக இருக்கும். கரு வல்லாரை என்ற ஓினம் மலைப்பகுதியான இடங்களில் வளர்கின்றன. கொடிமற்றும் விதைகளின் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படு கிறது.

**மருத்துவப் பயன்கள்**

உடல் தேற்றி, உரமாக்கி ,சிறுநீர் பெருக்கி வெப்பமுண்டாக்கி, வாதம், வாய்வு அண்ட வீக்கம், யானைக்கால், குஷ்டம் நெரிகட்டி, கண்டமாலை, மேகப்புண், பைத்தியம், சூதக் கட்டு, மூளைவளர்ச்சிக்கும் சுறுசுறுப்பிற்கும் ஏற்றது.

முற்றிய வல்லாரை இலையை நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து இதில் காலை மாலை 5 கிராம் அளவு 48 தொடக்கம் 96 நாட்கள் வரை சாப்பிடவும். மேலே கூறப்பட்ட எல்லா நோய் களும் குணமாகும். உடல் நோய் எதிர்ப்பாற்றல் பெறும். ஒரு வருடம் சாப்பிட்டால் நரை திரை மாறும். வல்லாரை + தூதுவளை இரண்டையும் சம அளவில் இடித்துப் பிழிந்த சாற்றை 5 மி.லி. சாப்பிடவும். நோய்க கேற்ற வாறு காலம் நீடித்து சாப்பிட சயரோகம், இருமல், சளி குணமாகும்.

இதன் இலைச்சாறு நாளும் 5 மி.லி காலை, மாலை சாப்பிட்டு வரவும். யானைக் கால், விதை வாதம், அரையாப்பு, கண்ட மால் குணமாகும். ஆமணக்கெண்ணெய்யில் இலையை வதக்கி மேலே பற்றிட வேண்டும. கட்டிகளும் கரையும் அரைத்துப் பூச புண்களும் ஆறும்.

வல்லாரை, உத்தமாகாணி( வேலிப்பருத்தி, மிளகு சமன் சுவட்டி அரைத்துக் குண்டு மணி அளவு மாத்திரை செய்து காலை 1 மாத்திரை வெந்நீரில் கொடுக்க அனைத்து வகையான காய்ச்சலும் தீரும்.

கீழா நெல்லி, வல்லாரை சமன் அரைத்து சுண்டக்காயளவு காலை மட்டும் தயிரில் உட்கொள்ள நீர் எரிச்சல் தீரும்.

வல்லாரை சாற்றில் 7 முறை ஊறவைத்து உலர்த்திய திப்பிலி மூளைசுறுசுறுப்பாக இயங்கவும் தொண்டைக் கரகரப்பு நீங்கவும் நல்ல சாீரம் கொடுக்கவும் பயன்படும். பெண்களுக்கு உதிரத்தடை ஏற்படும். மாதவிலக்கு தள்ளிப்போகும். இதனால் இடுப்பு, அடிவயிறு கடுமையாக வலிக்கும். இதற்கு வல்லாரை+உத்தமாகாணி இலையை சம அளவில் அரைத்து 20 தொடக்கம் 30 கிராம் அளவு காலை மாலை நான்கு நாட்கள் சாப்பிட்டுவர குணமாகும்.

வல்லாரையை நிழலில் உலர்த்தி சூரணம் செய்து கொள்ளவும். பறங்கிச் சக்கையையும் இதே போல் சூரணம் செய்து இரண்டையும் சம அளவில் சேர்த்து 5 தொடக்கம் 10 கிராம் காலை, மாலை பசும் வெண்ணெயில் சாப்பிட வேண்டும். நோய்க்கேற்ப 6 தொடக்கம் 12 மாதம் சாப்பிட வேண்டும். மோர், பாலில் தான் உணவு சாப்பிட வேண்டும். புளி, காரம், இனிப்புக் கூடாது. புலால், புகை, மது கூடாது, குஷ்டம் குணமாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெசோ மாநாடு 12.08.2012

சென்னை ராஜபேட்டை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் அதாவது முன்பு திட்டமிட்ட இடத் திலேயே ஈழத்தமிழர் வாழ்வுரிமைப் பாது காப்பு மாநாடு (டெசோ) நேற்றுமுன்தினம் மாலை நடந்தது. மாநாட்டில் நிறைவுறைவுரை யாற்றுகையில் தி.மு.க.தலைவர் கருணா நிதி தெரிவித்ததாவது,

“ஈழத்தமிழர்களின் இனிய விடியலைக் காண்பதற்காக களத்தில் நின்றும், தியாக வேள்விகள் புரிந்தும் உயிருற்ற கல்லறை களாக மாறிவிட்ட மாவீரர்களாம் தியாக தங்கங்களுக்கு என் வீரவணக்கத்தைச் செலுத்தி இந்த உரையைத் தொடங்குகிறேன்.

ஈழத்தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்புக் காக இங்கு மாநாடு நடத்துகிறோம். இந்த மாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங் களை தமிழகத்தில் எல்லா இடங்களிலும் டெசோ தொண்டர்கள், செயலாளர்கள் ஊருக்கு ஊர் சென்று ஆங்காங்கே நடைபெற இருக்கின்ற பொதுக்கூட்டங்களிலே ஈழத் தமிழர்களின் அவலநிலை, அவர்களுக்கு நாம் தரவேண்டிய பாதுகாப்பு; அவர்க ளுக்கு நாம் நீட்ட வேண்டிய உதவிக்கரம் பற்றி பேசி அவர்களுக்கு பேராதரவைப் பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

**மத்திய அரசுக்கு அழுத்தம்**

நாம், இந்தியாவை வலியுறுத்த வேண் டும் என்று இங்கு பேசிய தலைவர்கள் எல் லாம் கேட்டுக்கொண்டார்கள். காலை யில் பேசியவர்களும் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களும், நண்பர்களும் எடுத்துரைத் தார்கள். மாலையில் பேசிய திருமாவள வன், இலங்கை பிரச்சினையில் இந்திய அரசுக்கு அழுத்தத்தைத் தரவேண்டும் என்று பலமுறை இங்கே எடுத்துரைத்தார்.

நான் அவருக்கு ஒன்றை சொல்வேன் அண்டை நாடான இலங்கையில் அமை தியும் சமத்துவமும் நிலவுவதற்குத் தேவை யான பணிகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு இந்தியாவிற்கு உள்ளது. பல் வேறு தேசிய இனங்கள் , மதங்கள், மொழி யை உள்ளடக்கி ஜனநாயக மரபுகளைப் பாதுகாத்துவரும் இந்திய அரசு அண்டை நாடான இலங்கையில் நடைபெறும் நிகழ்வு களைக் கண்டும்காணாமல் இருப்பது ஏன் என்ற கேள்வி தமிழர்களின் மனதில் எழுந் துள்ளது என்பதை இந்த மாநாடு இந்திய அரசுக்கு சுட்டிக்காட்டுகிறது.

எனவே, இலங்கையில் தற்போது நிலவி வரும் சூழ்நிலைகள் மாறி ஈழத்தமிழ் மக்கள் அரசியல் பொருளாதாரம், பண்பாட்டு உரி மைகளை பெற்றெடுத்து சமத்துவமும் அமை தியும் நிறைந்த வாழ்வை மேற்கொள்ள இந்திய அரசு முழுமூச்சோடு செயல்பட வேண்டும். அந்த தீர்மானத்தின் இறுதியாக இலங் கையில் தமிழர்கள் விரும்பும் அரசி யல் தீர்வை தாங்களே முடிவு செய்துகொள் ளும் வகையில் அவர்களுக்கு முழு உரிமை வழங்க இந்திய அரசு , ஐ.நா. மன்றத்தில் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று இந்த மாநாடு வலியுறுத்து கிறது. இதைவிட இந்திய அரச்க்கு வேறு என்ன அழுத் தத்தை கொடுக்க முடியும் என்று புரிய வில்லை. இதுதான் சரியான அழுத்தம் என்று சொன்னால், அதை ஏற்றுக் கொண்டு இந்த தீர்மானத்தை மேலும் வலுவானதாக் குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஆனால், இந்தத் தீர்மானத்தை வைத் துக்கொண்டே இந்திய அரசுக்கு நம்மால் அழுத்தம் கொடுக்க முடியும். இந்தத் தீர் மானமே இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக் கும் தீர்மானம் தான் என்பதை திருமாவள வன் உணர்வார். மற்றவர்களும் இதை மிக நன்றாக உணர்வார்கள் என்று கருதுகி றேன். ஆகவே, இன்றைக்கு நிம்மதியான, இனிமையான வாழ்வு பெற இன்றைக்கு இடுகாட்டு சாம்பலை பூசிக் கொண்டிருப் பவர்களைப் போல் இருக்கின்ற வாழ்க் கையில் இருந்து விடுபட வீரமணி மற்றும் நண்பர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னதைப் போல இந்த மாநாட்டின் வெற்றி, இந்த மாநாட் டில் எவ்வளவு பேர் கூடினார்கள்? மாநாடு எத்தனை நாள் நடைபெற்றது? எவ்வளவு மணிநேரம் நடைபெற்றது? என்பது அல்ல. இந்த மாநாட்டினுடைய வெற்றி, உலகம் முழுவதும் இருக்கின்ற தமிழர்கள், அரசியல் வாதிகள் அனைவரும் அறிந்து உணரப் படுவதிலேயே தங்கியுள்ளது.

நாம் இந்த தீர்மானத்தின் மூலம் ஒவ்வொ ருவரும், தமிழ் ஆர்வம் உள்ள அத்தனை பேரும்,ஈழத்தமிழர்கள்பால் அன்புகொண்ட அத்தனைபேரும், இரக்கம் கொண்ட அத் தனை பேரும் அழுத்தம் கொடுத்து இந்தத் தீர்மானத்திற்கு வலுச்சேர்ப்பார்களேயா னால், நாம் காணுகின்ற கனவு நிச்சயமாக நிறைவே றும். இலங்கையில் இருக்கும் அல்லல், உடன டியாகத் தீரும். ஒரே ஈழநாடு பெறவேண்டும் என்று கேட்டீர்களேயானால், அவர்களுக்கு சொல்லுகின்ற ஒரேயொரு சமாதானம் என்ன வென்றால், முதலில் காயம்பட்டுக் கிடப்போரை, ரணத்தை, காயத்தை ஆற்ற, அவர்கள் உயிர் பிழைக்க முதலுதவி தேவைப்படுவதைப் போல டெசோ மாநாட்டின் மூலமாக தேவையான முதலுதவிகளை எல்லாம் இலங்கைத் தமிழ ருக்கு நாம் செய்ய வேண்டும். நாம் அவற் றைச் செய்யத் தொடங்கியிருக்கிறோம்.

அதைத்தெடர்ந்து நான் அடிக்கடி சொல் வதைப்போல, என்னுடைய வாழ்நாளில் நான் கண்டு கொண்டு இருக்கின்ற, நிறை வேறாத கனவு, அந்த கனவு நிறைவேறு கின்ற வரை யில் உங்களை எல்லாம் அரவணைத்துக் கொண்டு போராடுவேன். நிச்சயமாக போராடு வேன்” என்றார்.

## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

**1.இலங்கை போர்க்குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

**2.தமிழ்பகுதிகளில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்.**

**3.இலங்கையில் நடைபெறும் அநீதி களை இந்திய அரசு கண்டு கொள்ளா மல் இருப்பது ஏன்? ஈழத் தமிழர் தாங் கள் விரும்பும் அரசியல் தீர்வை தாங் களே தீர்மானித்துக் கொள்ள வகை செய்யும் தீர்மானத்தை ஐ.நா. மன்றத் தில் இந்தியா கொண்டுவரவேண்டும்.**

**4.இலங்கையில் தமிழ்மொழி அடை யாளங்கள் அழிக்கப்படுவதை தடுக்க வேண்டும்.**

**5.இன்றைய இலங்கையில் இராணு வத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கி றது. இராணுவ முகாமாக காட்சியளிக்கி றது இன்றைய தமிழீழ தமிழர் பகுதி களில் வலிந்து குடியமர்த்தப்பட்டுள்ள சிங்களவர்களை உடனே வெளியேற்ற வேண்டும்.**

**6. தமிழர் பகுதியில் இயல்புநிலை திரும்ப, இலங்கை அரசை ஐ.நா.அவை வலியுறுத்த வேண்டும்**

**7. அகதிகளாக வெளிநாடுகளுக்கு சென்று சிறைகளில் வாடும் தமிழர்களை விடுதலை செய்வதில் ஐ.நா. அகதிகள் சபை தலையிட வேண்டும். இந்தியாவில் உள்ள அனைத்து இலங்கை அகதிகளுக் கும் இந்திய குடியுரிமை அல்லது அவர் கள் இந்தியாவில் நிரந்தரமாக வாழ வழிவகை செய்ய வேண்டும்.**

**8. அகதிகள் தொடர்பான ஐ.நா. வின் ஒப்பந்தத்தை இந்தியாவும் பின்பற்ற வேண்டும்.**

**9.ஐ.நா. மூலம் தமிழ் மக்களிடத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும். ஈழத்தமிழர் பிரச்சினை தெற்காசிய பிரச் சினையாக அறிவிக்கப்பட வேண்டும்.**

**10.தமிழ் அரசியல் கைதிகள் அனை வரும் இலங்கைச் சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டும்.**

**11.தமிழக மீனவர் படுகொலைக்கு முடிவுகட்ட கச்சதீவை மீட்க வேண்டும். தமிழகத்தின் மண்டபம் அல்லது தனுஷ் கோடியில் இந்திய கடற்படை முகாம் அமைக்க வேண்டும்.**

**12.தமிழர் பகுதிகளில் மறுவாழ்வுப் பணிகளை கண்காணிக்க பன்னாட்டுக் குழு அமைக்க வேண்டும்.**

**13.இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இலங்கை படையினருக்கு பயிற்சி கொடுக் கக் கூடாது.**

**14.டொசோமாநாட்டில்பங்கேற்போரை கண்காணிப்போம் என்ற இலங்கை அர சின் மிரட்டலுக்குக் கண்டனம்.**

**டெசோமாநாட்டுக்கு தடை விதித்து இடையூறு செய்த அ.தி.மு.க அரசுக்கு கண்டனம் என்பது உள்ளிட்ட தீர்மானங் கள் டெசோ் மாநாட்டில் நிறைவேற்றப் பட்டன.**

**அன்று காலையில் நிகழ்ந்தஆய்வரங்கம்**

**ஏமாற்றிய இலங்கை**

முன்னதாக நேற்றுமுன்தினம் காலை சென்னை தியாகராஜ நகரிலுள்ள அக்கார்ட்டு மெட்ரோபாலிடன் ஹோட்டலில் டெசோ மாநாடு தொடர்பான ஆய்வரங்கம் நடந்தது. இந்த ஆய்வரங்கத்திற்கு கருணாநிதி தலைமை தாங்கி னார்.

அச்சமயம் அவர் உரையாற்றுகையில்




## தமிழர்கள் தாம் விரும்பும் அரசியல் தீர்வை அடைய இந்தியா ஐ.நா.வில் தீர்மானம் கொண்டுவரவேண்டும்

“ஈழத்தில் இறுதிப்போரின்பேOது இரத்தம் சிந்துவதை எதிர்த்தும் இந்தியாவை தலை யிடும்படியும் அண்ணா நினைவிடத்தில் 27.04.2009 அன்று சாகும்வரை உண் ணாவிரதம் தொடங்கினேன்.

இலங்கை அரசு மற்றும் இந்திய வெளி யுறவுத்துறை உத்தரவாதம் அளித்து அதன் நகல் எனக்கு அனுப்பப்பட்டது. போர்முடி வுக்கு வந்ததாக நினைத்து உண்ணாவிர தத்தை நான் முடித்துக் கொண்டேன் ஆனால், இலங்கை அரசு இந்தியாவை ஏமாற்றி விட்டது ” எனத் தெரிவித்தார்.

இவ் ஆய்வரங்கில் தி.மு.க.பொதுச் செய லாளர் க.அன்பழகன், பொரளாளர் மு.க.ஸ்ரா லின்,லோக் ஜனசக்தி தலைவர் ராம்விலாஸ் பஸ்வான், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், திராவிட கழகத் தலைவர் கி.வீரமணி, டெசோ உறுப் பினர் சுப. வீர பாண்டியன், சமாஜ்வாதி எம்பி ராம்கோபால்ஜாதவ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**டெசோவில் பங்கேற்றவர்கள்**

ஆய்வரங்கத்தில் மத்திய அமைச்சர்கள் மு.க.அழகிரி, ஜெகத் ரட்சகன், காந்திச் செல் வன், எம்பிக்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி, இன்னும் பலமுக்கியமான எம்பிக்களும் இன்னும் பல அதிகாரிகளும் அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, நைஜீரியா, சுவீடன், நோர்வே,மொராக்கோ,துருக்கி சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

டெசோ மாநாட்டில் இல்ங்கையைச் சேர்ந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகியவை பங்கு பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த இருஅமைப்புகளும் மாநாட்டில் பங் கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் மாநாட்டில் கலந்துகொண்ட க.வீரமணி பேசுகையில் “இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறை வேற்ற நாம் அனைவரும் உறுதுணையாக இருக்கவேண்டும் இதற்கு முன்பாக ஈழப்பிரச் சினையில் உலகத்தின் பார்வையை திருப்ப வேண்டும். ஈழப்பிரச்சினையில் இந்திய அர சுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் இதன் மூலம் தான் தனி ஈழம் பிறக்கும்” என்று குறிப்பிட்டார்.

சுப வீரபாண்டியன் குறிப்பிடுகையில் “2009 இல் இலங்கையில் நடந்த போராட் டதில் பின்னடைவு ஏற்பட்டது. இப்போது நாம் மூன்றாம் கட்டப்போராட்டத்தில் களத் தையும் யுக்தியையும் மாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அதன் தொடக்கம் தான்இந்த மாநாடு.

இலங்கையில் நடப்பது தமிழீழப் பிரச் சினை இல்லை. அது மனித உரிமைச் சிக்கலாகும். இதனை உலகின் கவனத் திற்கு கொண்டு சென்றால்தான் நாம் அடுத்த கட்டத்திற்கு செல்ல முடியும்.

தமிழீழப்பிரச்சினையை உலக நாடு களின் கவனத்தற்கு கொண்டு செல்வது கருணாநிதியால்தான் முடியும். இந்த மாநாட் டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஐ.நாடுகள் சபை ஜெனிவாவிற்கு கருணா நிதி நேரில் கொண்டுபோய் கொடுக்க வேண்டும்”என்று கூறினார்.

ராம்விலாஸ்பஸ்வான் தெரிவிக் கையில், “அமைதியான வழியில் போராடி அத னால் பயன் கிடைக்காமல்போகவே விடுத லைப் புலிகள் கையில் ஆயுதங்களை எடுக்கவேண்டியிருந்தது என்ற உண்மை தமிழகத்தை தவிர மற்றைய மாநில மக்க ளுக்கு தெரிவதில்லை. அவர்களையும் இது போன்ற மாநாடுகளில் இணைக்கவேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் உரி மைகளைப் பெற மத்திய அரசு உரிய நட வடிக்கை எடுக்கவேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர தனி ஈழம்தான் ஒரே தீர்வு ” என்று கூறினார்.

தொல்.திருமாவளவன், தனி ஈழத்தை வென்றெடுப்பதற்கு முன்பாக மூன்று சவால் களை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

முதலாவதுசவால், ஈழத்தில், தமிழர்கள் வசித்துவந்த பகுதிகளிலிருந்து அவர்களை இடம் பெயர வைத்துது, அங்கு சிங்களவர் குடியேற்றங்களையும் இராணுவ முகாம் களையும் அமைத்து தமிழ்மண்ஆக்கிரமிக் கப்படுவது தடுக்கப்படவேண்டும்.

இரண்டாவது சவால், தமிழர்கள் மீது இராணுவத்தினர் செய்து வரும்கொடுமை களை நீக்கி அவர்களுக்கு மறுவாழ்வு அமைத் துத் தரவேண்டும்.

மூன்றாவது தமிழர்கள் மீது திணிக்கப் படும் கலாசார சீரழிவுகழிலிருந்து அவர் களைக் காப்பாற்றவேண்டும். இந்த மூன்று சவால்களையும் வென்றெடுக்க வேண்டும்.

ஈழத்தமிழர்கள் பிரச்சினையில் தனி ஈழம் தான் தீர்வு என்பதை சர்வதேச சமூ கத்திற்கு கொண்டு செல்லவேண்டும் அதற் கான யுக்திகளையும் செயல் திட்டங்களை யும் கலைஞர் வகுத்துத் தரவேண்டும். களம் காண நாங்கள் தயாராக இருக்கிறோம். ஈழம் வெல்லும் காலம் சொல்லும் என்று தெரிவித் தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு.வில் பாடசாலை சேவையிலீடுபடும் வாகனங்களை பதிவு செய்ய பணிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் பாடசாலை சேவையில் ஈடுபடும் அனைத்து வாகனங்களையும் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கு முன்னர் தேசிய சிறு வர் பாதுகாப்பு அதிகார சபையிடம் பதிவு செய் யுமாறு வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வகுமார் வேண் டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது நாடளாவிய ரீதியில் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களை பதிவு செய்து அனுமதி பத்திரம் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

சிறுவர்களுடைய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் பாடசாலை சேவை வாகனங்களுடைய தரத்தினை உறுதிப்படுத்துவதற்கும் ஓட்டுநர் மற்றும் உதவியாளர்களின் விபரங்களை சேகரிக்கும் நோக்கமாகவே இத்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வடமாகாணத்தில் முதற்கட்டமாக வவுனியா மாவட்டத்தில் முச்சக்கரவண்டி தவிர்ந்த பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களை பதிவு செய்து அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையானது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக கடந்த 8 ஆம் திகதி 7 பாடசாலை சேவை வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

செப்டெம்பர் மாதத்திற்கு முன்னர் அனைத்துப் பாடசாலை சேவை வாகனங்களுக்குமான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். செப்டெம்பர் மாதத்திற்கு பின்னர் அனுமதிப்பத்திரம் பெறாத வாகனங்கள் சேவையில் ஈடுபடுவது கட்டுப்படுத்தப்படும். அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தினை வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (அ-2-266)

## ஆடை விற்பனை நிலையத்தில் தீ

(மஸ்கெலியா)

ஹற்றன் -மஸ்கெலியா பிரதேசத்தில் ஆடை விற்பனைக் கடைகள் இரண்டில் ஏற்பட்ட திடீர் தீயால் அவ்விரு கடைகளும் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இச்சம்பவம் நேற்று அதிகாலை வேளையில் ஏற்பட்டுள்ளது. மஸ்கெலிய பொலிஸாரின் உதவியுடன் அதிகாலை 2.45 மணியளவில் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தீயால் உயிர்ச்சேதங்கள் எதுவும் இடம் பெறவில்லை. மஸ்கெலிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# பல்கலைக்கழக பேராசிரியர்களின் கோரிக்கைகள் நியாயமானவை

## பிரதி உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்களின் கோரிக்கை நியாயமானது எனவும் பேராசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது எனவும் பிரதி உயர்கல்வியமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக பேராசிரியர்களின் கோரிக்கைகள் மனிதாபிமான அடிப்படையில் நோக்கப்படவேண்டும். கோரிக்கைகளை நிறைவேற்றுவது அரசாங்கத்தின் கடமையாகும்.

சம்பள மீளாய்வு ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைவாக சம்பளங்களை உயர்த்த முடியாது. பல்கலைக்கழக பேராசிரியர்களின் சம்பளங்கள் உயர்த்தப்பட்டால் ஏனைய பொதுத்துறை ஊழியர்களின் சம்பளங்களையும் உயர்த்த நேரிடும்.

எனவே சம்பள முரண்பாடுகளைக் களைவதற்கு உசிதமான பொறிமுறைமை ஒன்றை உருவாக்கவேண்டியது அவசியமானது.

இலங்கைப் போக்குவரத்துச்சபை சாரதிகளை பணிக்கு அமர்த்துவது போன்று பல்கலைக்கழக பேராசிரியர்களை பணிக்கு அமர்த்த முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மீளப் பெறப்பட்டன உழவியந்திரங்கள்

## கமக்கார அமைப்புக்கள் கண்டனம்

(பூநகரி)



பூநகரியில் உள்ள 19 கமக்கார அமைப்புக்களுக்கு இந்திய அரசின் உத வித்திட்டத்தின் கீழ் ஒருவருடத்திற்கு முன்பாக வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் மீளப் பெறப்பட்டுள்ளன.

கமக்கார அமைப்புக்கள் இவ்வுழவு இயந்திரங்களை நன்கு பராமரித்து விவசாயிகளுக்கு சேவையைச் செய்து இலட்சக்கணக்கான ரூபாய்களை வருமானமாக ஈட்டிய தோடு இப்பணம் கமநல சேவை நிலைய த்துக்குச் செலுத்தப்பட்டது. தற்பொழுது மீளவும் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பாதுகாப்பற்ற நிலையில் கொளுத் தும் வெயிலில் சேதமடையும் நிலையில் காணப்படுகின்றது.

இந்நிலையில் சென்றவாரம் நடைபெற்ற கமநல சேவை நிலைய உறுப்பினர்களின் கூட்டத்தில் இந்நடவடிக்கைக்கு தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளதோடு இச்செயற்பாட்டுக்கு எதிராக தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளனர். இவ் இயந்திரங்கள் மேலும் சேதமடையாமல் பாதுகாக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென விவசாயிகள் உயர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலதிகாரிகள் மத்தியில் ஏற்பட்ட கருத்து முரண்பாடே இச்சம்பவத்திற்கு காரணம் என கம க்கார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2-84)

# சிறுவர் துஷ்பிரயோகம்; விழிப்புணர்வு செயலமர்வு

(அநுராதபுரம்)

சிறுவர் துஷ்பிரயோகத்தை தவிர்ப்பதற்கான நாடு தழுவிய வேலைத்திட்டம் ஒன்று இன்று அநுராதபுரத்தில் ஆரம்பமாகிறது.

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவின் ஆலோசனைப்படி 18 மாவட்டங்களை உள்ளடக்கியதாக இந்தப் புதிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

அதன் முதல் கட்டமாக அநுராதபுரம் நுவரவெல கேட்போர் கூடத்தில் வதிவிட செயலமர்வு இன்றும் நாளையும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வடமத்திய மாகாண ஆளுநர் கருணாரத்ன திவுல்கனே, அரச அதிபர் மஹிந்த செனவிரத்ன ஆகியோர் தலைமையில் நடைபெறும் இந்த செயலமர்வில் அநுராதபுர மாவட்ட மகளிர் அபிவிருத்தி அதிகாரிகள், சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரிகள், நன்னடத்தை அதிகாரிகள், அதிபர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறுவர் அபிவிருத்தி மகளிர் அமைச்சின் சகல பிரதேச வெளிக்கள அதிகாரிகளுக்கும் சிறுவர் துஷ்பிரயோக தவிர்ப்பு தொடர்பாக இந்த செயலமர்வில் விளக்கம் அளிக்கப்படும். (அ-9)

# சிற்பனை முருகன் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# ஆசிரியை ஒருவரிடமிருந்து நகைகளை அபகரித்த யுவதி

## சுழிபுரத்தில் சம்பவம்

(மிருசுவில்)

வலிகாமம் வலயத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரிடம் நயமாக பேசிப் பழகிய யுவதி ஒருவர் அவரிடமிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை தந்திரமாக அபகரித்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் சுழிபுரம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது, மேற்குறித்த ஆசிரியருடன் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் யுவதி ஒருவர் நண்பர் போன்று பழகி தான் நேர்முக பரீட்சை ஒன்றிற்கு தோற்றவிருப்பதாகவும் அதற்காக பெற்றோரிடம் நகையை வாங்கித் தருமாறு யுவதி கேட்கவே யுவதியை நம்பிய ஆசிரியரும் நகைகளை கொடுத்துள்ளார்.

பல நாட்களாகியும் வாங்கிய நகைகளை யுவதி திரும்பிக் கொடுக்காமையால் யுவதியிடம் நகைகளை கேட்டபோது அடைவு வைத்ததாக கூறியுள்ளார்.

இதனால் மேற்குறித்த ஆசிரியர் நகைகளை பெறுவதற்காக யுவதியை மீண்டும் தேடி அலைவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-3-85)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 09 1928



உதிர்வு 27 07 2011

திதி : ஆடிமாத அபரபக்க துவாதசி

**திரு கதிர்காமு கிருஷ்ணபிள்ளை**

(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

எல்லோரும் வாழவேண்டும் என்ற நற்கோட்பாட்டை
உளமாரக் கைக்கொண்டு உவகையுடன் கருமமாற்றி
வல்லோனாய் வையகத்தில் வாழ்ந்த வாழ்வு ஓய்ந்து இன்று
வருடமொன்று ஆனதுவோ! வணங்குகின்றோம்
நற்கதிக்காய்

குடும்பத்தினர்
பாடசாலை வீதி,
தொண்டைமானாறு.

(217)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எப்படி வாழ வேண்டும் என்று உனக்குத் தெரிந் தால் நீ பலகாலம் வாழலாம்.

~ லாங்ஃபெலோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஈழத் தமிழர்களின் துயர மேடையில் கருணாநிதியின் வெற்றிப்படைப்பு

கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்பது தமிழ்ப் பழமொழி. கண்ணுள்ள போது சூரிய நமஸ் காரம் செய்யாமல் விட்டுவிட்டு, கண் தெரியாமல் போன பின்னர் சூரிய நமஸ்காரம் செய் வதென்ற பொருளை இப்பழமொழி வெளிப்படுத்தி நின்றாலும், அதற்குள் இருக்கக் கூடிய ஆழமான உட்கருத்தை எவரும் புரிந்து கொண்டு செயற்படுவதாக இல்லை.

இதில் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியும் ஒருவர். கலைஞர் கருணாநிதி தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த போதே வன்னி யுத்தம் இடம்பெற்றது.

அதே நேரம் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் கூடிய ஆட்சியே மத்தியிலிருந்தது.

தமிழகத்தின் முதல்வர் என்ற தகுதிப்பாடும் தி.மு.க வின் பலத்துடன் கூடிய மத்திய அரசென்ற அதிகார மும் இருந்த வேளையில் கலைஞர் கருணாநிதி ஈழத் தமிழர்களுக்காக செய்யக் கூடியது ஏராளம்.

ஆனால் அந்தக்காலத்தில்தான் வன்னிப் போர் நடந்தது. பூல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்ற செய்தி வரலாற்றில் பதி வாகியது.

இந்தப் பதிவை இல்லாதொழிக்க கலைஞர் எத்தனை மாநாடுகளை கூட்டினாலும் அது சரி வராது என்பது தெரிந்த விடயம். ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் போது மௌனமாக இருந்த கருணா நிதி இப்போது. வெறுமையாகி வீட்டுத் துன்பமும் வாட்டுங்கால் ஈழத்தமிழர்களின் நெட்டூரத்தை கையில் எடுத்துக்கொண்டு, உட் பூசலைச் சந்தித்து வரும் தன்கட்சிக்கும் குடும்பத் தகராற்றுக்கும் விமோசனம் தேட முற்பட்டுள்ளார்.

தமிழகத்தில் கலைஞர் எதைக் கதைத்தாலும் அதற்கு பதிலடி கொடுக்க அரசியல் கட்சிகள் தயாராகி விட்ட நிலையில், ஈழத்தமிழர்களின் விடயத்தை எடுப்பதே இப்போதைக்கு ஒரேவழி என்று அவர் நினைத்துக் கொண்டார்.

ஆனாலும் அவரின் உண்ணாவிரத நாடகம், கலைஞர் கருணாநிதி கதைவசனத்திற்கும் மட் டும்மல்ல; சிறந்த நடிகர் என்பதையும் தமிழ் உலகம் ஐயம் தெளிவுறக் கண்டுகொண்டது.

அரசியல் களத்தில் இன்னொரு சந்தர்ப்பம் இல்லை என்பதை தெளிவாகக் புரிந்து கொண்ட அவர் குறைந்தது தனது மனைவி, துணைவி ஆகியோரின் தொந்தரவில் இருந்தும் அவர் களின் ஊடாக தனக்குப் பிறந்த பிள்ளைகளின் கழுத்தறுப்புப் போட்டியில் இருந்தும் தப்பித்துக் கொள்ள ஈழத்தமிழர்களின் விடயத்தை நல்ல தொரு நாடகப்படைப்பாக ஆக்கிக்கொள்வது என்று முடிவெடுத்தார்.

ஈழத்தமிழர்களுக்காக தான் இருந்த உண்ணா விரதத்தை கைவிட்டதற்கு அவர் கூறிய காரணம் இருக்கிறதே, அது தான் கலைஞரின் மிக மோச மான – மிக அபத்தமான – மிக உச்சமான பொய் யும் நடிப்பும் நாடகமுமாக இருக்க முடியும்.

உண்ணாவிரதம் இருக்கும் போதே எத்தனை மணிக்கு அதனை முடிவுறுத்திக் கொள்வது என்று தீர்மானித்துக் கொண்டவர் கலைஞர்.

தனது உண்ணாவிரதத்தை முடிபுறுத்திக் கொள்வதற்காகவும், தான் உண்ணாவிரதம் மேற் கொண்டதனால் வன்னியுத்தம் நிறுத்தப்பட்டு விட்ட தாகவும் பொய்ப்பிரசாரம் செய்தவர் அவர். இத் தகைய ஒருவர் இப்போது... நம்பி உண்ணா விர தத்தை கைவிட்டதாக கூறுவது ஈழத்தமிழர்களின் துயர மேடையில் கலைஞர் தனக்கொரு வெற்றிப் படைப்பை தயாரித்துள்ளார் என்றே கூற வேண்டும்.

# மது விற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்க தடைவிதிப்பு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் 14பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரி வித்துள்ளார்.

அத்தோடு பொது இடத்தில் மது அருந்திய 11 பேர் கைது செய்யப்பட் டுள்ளதோடு 3 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இவ்வாறு மதுபோதையில் வீதிப் போக் குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்துபவர்களின் எண்ணி க்கை அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இவ்வாறு இடையூறு ஏற் படுத்துபவர்களைக் கட்டுப்படுத்த நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வும் தெரிவித்தார்.

இதேவேளை மகிந்த சிந்தனையில் போதை ஒழிப்போம் என்னும் தொனிப் பொருளின் கீழ் கடந்த 2011ஆம் ஆண் டிற்குப் பின்னர் மதுபான விற்பனை நிலை யங்களுக்குப் புதிய அனுமதிகள் வழங் குவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள தாகவும் மதுவரித் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் தெரிவித்துள்ளது.

அனுமதிப்பத்திரம் இன்றி இயங்கும் மதுபான விற்பனை நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகளும் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

பல வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் மதுபான விற்பனை நிலையங் கள் தவிர்ந்த ஏனைய மதுபான விற் பனை நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின் றன எனவும் இருப்பினும் பழைய மது பான விற்பனை நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படமாட் டாது எனவும் மதுவரித்திணைக்களத் தின் யாழ்.அலுவலக உதவி அத்தியட் சகர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (அ-6)

# பிரதேச செயலகங்கள் ஊடாக வீடுகளுக்கு இலக்கத் தகடுகள்

## நடைமுறைக்கு வரும் என்கிறார் அஞ்சல்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

கிராமப்புறங்களில் உள்ள வீடுக ளுக்கான வீட்டு இலக்கங்கள் இல்லா மையால் அஞ்சல் பொதிகளை விநி யோகிப்பதில் தபால்காரர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக வடமாகாண பிரதி அஞ்சல்மா ஆணை யாளர் என்.ரட்னசிங்கம் தெரிவித்தார்.

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக இன்று கரவெட்டிப் பிரதேசத்தில் அஞ் சல் திணைக்கள அதிபர் டீ.எல்.பி. ஆர்.அபேரத்தின தலைமையில் வீடு களுக்கு இலக்கத்தகடுகள் பொருத்தப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வீடுகளுக்கு முன்னுள்ள பாதையில் வீட்டின் இலக்கம் பொறிக்கப்பட வேண் டும்.

இதன்மூலம் சரியான முகவரி இனங் காணப்பட்டு சரியான நேரத்தில் அஞ் சல் பொதிகளை விநியோகிக்க முடியும்.

சில கிராமங்களில் வீடுகளுக்கு இலக் கங்களே இல்லாமல் உள்ளன. நகரங்களில் இலக்கங்கள் இருந்தாலும் அவை வெளியே தெரியும்படி ஒட்டப்படுவதில்லை.

இதனால் தபால் பொதிகளை விநி யோகிப்பவர்கள் அதிக சிரமத்தை எதிர் கொள்வதோடு நேரத்தையும் வீணடிக்க வேண்டியுள்ளது.

இதற்கு தீர்வுகாணும் பொருட்டு அனை த்து பிரதேச செயலகங்களின் ஊடாக இல க்கத்தகடுகள் பொருத்தும் நடவடிக்கை எடு க்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.(அ-4)

# கலாசார விழாவினை முன்னிட்டு கட்டுரைப்போட்டி

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசார விழா வினை முன்னிட்டு நடத்தும் திறந்த மற் றும் மட்டுப்படுத்தப்பட்ட கட்டுரைப் போட் டிகள் நடைபெறவுள்ளதாக பூநகரிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இரண்டு பிரிவுகளாக நடைபெற வுள்ள இப்போட்டியில் மட்டுப்படுத்தப் பட்ட பிரிவுப்போட்டியில் பூநகரிப் பிர தேசபாடசாலை மாணவர்கள் மட்டும் பங்குகொள்ள முடியும் எனவும் திறந்த பிரிவுப்போட்டியில் வயது வேறுபாடி ன்றி யாவரும் பங்குகொள்ளமுடியும் எனவும் அறிவித்துள்ளார்.

மட்டுப்படுத்தப்பட்ட பிரிவினருக் கான கட்டுரையானது பூநகரி வளங்க ளும் வாழ்வியலும் எனும் தலைப்பில் அமைதல் வேண்டும்.

கனிஷ்ட பிரிவினருக்கான (தரம் 6,7,8) கட்டுரையானது 100 தொடக்கம் 150 சொற்களிலும் மத்திய பிரிவினருக் கான (தரம்9,10,11) கட்டுரையானது 150 தொடக்கம் 200 சொற்களிலும் சிரேஷ்ட பிரிவினருக்கான (தரம் 12,13) கட்டுரை யானது 250 தொடக்கம் 300 சொற் களிலும் அமைதல் வேண்டும்.

திறந்த பிரிவினருக்கான கட்டுரை யானது நாட்டார் வழக்காற்றியலும் பூநகரியும் எனும் தலைப்பில் 1000 தொடக்கம் 1500 சொற்களிலும் அமை தல் வேண்டும்.

இப்போட்டிக்கான ஆக்கங்களை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் போட்டிக்கான விண்ணப்பப்படிவத்தினை பூநகரி பிர தேச செயலகத்தில் பெற்று கட்டுரையு டன் விண்ணப்பத்தினை இணைத்து அனுப்புதல் வேண்டும் எனவும் அறி வித்துள்ளார்.

போட்டியில் முதல் மூன்று இடங்க ளைப் பெறுவோருக்கு இவ்வாண்டுக் கான கலாசார விழாவின் போது சான் றிதழும் பரிசில்களும் வழங்கப்படும். முதலாம் இடம்பெறும் கட்டுரைகள் இவ் வாண்டு பூந்துணர் சஞ்சிகையில் இடம் பெறும்.

போட்டி தொடர்பான மேலதிக விப ரங்களை பிரதேச செயலகத்துடன் தொட ர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளார். (அ-9-84)

# சந்நிதியான் மகோற்சவம் 17ஆம் திகதி ஆரம்பம்



தொண்டைமானாறு ஸ்ரீ செல் வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற் சவம் எதிர்வரும் 17ஆம் திகதி வெள் ளிக்கிழமை இரவு 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொட ர்ந்து 15 தினங்கள் திருவிழா நடை பெறவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி புதன் கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் 31ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளதாக பிரதமகுரு அறிவித்துள்ளார். (அ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உண்மையைப் பின்பற்றுங்கள்



அடக்கப்படாத மனமும் தீயநெறியில் செல்லும் குண மும் நம்மை எப்போதும் கீழ்நோக்கியே இழுக்கும். ஆனால் அடங்கிய மனம் நமக்கு விடுதலை அளிக் கும்.

உலக நன்மைக்காக உங்களிடம் உள்ள அனைத் தையும் தியாகம் செய்யத்தயாராய் இருங்கள்.

கள்ளம் கபடம் இல்லாத ஒழுக்கமுள்ள நாத்திகன் வஞ்சகனைக் காட்டிலும் சிறந்தவன்.

இதயம் பரந்து விரிந்திருந்தால் மட்டுமே ஒருவனிடம் உண்மை ஞானம் உதிக்கும். உண்மை ஞானத்தால் அனைத்தையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் வந்துவிடும்.

மனத்தூய்மையுடையவனே கடவுளுக்கு மிக நெருங்கியவன்.

யாருடைய மனம் ஏழை மக்களுக்காகத் துன்பத்தில் வருந்துமோ அவரே மகாத்மா.

இந்த மண்ணில் பிறப்பு எடுத்திருக்கும் நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதாவது ஒரு நல்ல பதிவை விட்டுச் செல்லுங்கள்.

உண்மை எங்கு இழுத்துச் சென்றாலும் அதையே பின்பற்றிச் செல்லுங்கள். கபடதாரியாகவோ கோழையாகவோ இருப்பதால் பயனில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடதாரகையை வீழ்த்தியது யுனிபைட்

vpl
Vavuniya
Premier League

(வேலணை)

வவுனியா செவ்வானம் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் வவுனியா பிறீமியர் லீக் இருபதுக்கு இருபது தொடரின் முதலாவது போட்டியில் யுனிபைட் கழகம் வெற்றிபெற்றுள்ளது.

வடதாரகை கழகத்திற்கு எதிரான போட்டியிலேயே யுனிபைட் வெற்றி பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வடதாரகை கழகம் கேட்டுக் கொண்ட தற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய யுனிபைட் கழகம் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பத்திலிருந்தே விக்கெட்டுக்களை இழந்த யுனிபைட் கழகம் மிகப்பெரிய இணைப்பாட்டங்களைப் பகிர்ந்துகொள்ள முடிந்திருக்கவில்லை என்ற போதிலும் சிறிய சிறிய இணைப்பாட்டங்களாகப் பகிர்ந்து 126 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் யுனிபைட் கழகம் சார்பாக விதுஷ் 20 பந்துகளில் 29 ஓட்டங்களையும் கஜன் 15 பந்துகளில் 24 ஓட்டங்களையும் சாமர 32 பந்துகளில் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வடதாரகை கழகம் சார்பாக சிதர்ஷன் 4 ஓவர்களில் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் விதுர்ஷன் 4 ஓவர்களில் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் குமரன், அசங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய அதே வேளை அகிலன் கட்டுப்பாட்டாகப் பந்துவீசி 3 ஓவர்களில் 13 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்திருந்தார்.

127 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய வட தாரகை கழகம் 19 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 22 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சிறப்பான ஆரம்பத்தைப் பெறத் தவறிய வடதாரகை விளையாட்டுக் கழகம் 2 தொடக்கம் 6 வரையிலான விக்கெட்டுக்களை 9 ஓட்ட இடைவெளியில் இழந்ததன் காரணமாக போட்டியில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களை இழந்தது.

துடுப்பாட்டத்தில் வடதாரகை விளையாட்டுக் கழகம் சார்பாக பிரகாஷ் 32 பந்துகளில் 31 ஓட்டங்களையும் அசங்க 21 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யுனிபைட் கழகம் சார்பாக சஞ்ஜீவன் 4 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் விதுஷ் 4 ஓவர்களில் 24 ஓட் டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் மயூரன், பகி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதோடு இறுதி நேரத்தில் ஆட்டமிழக்காது12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்த சஞ்ஜீவன் தெரிவானார்.




# தேசிய விளையாட்டு விழா



38 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் உதைபந்தாட்டம் கடந்தவாரம் நடைபெற்றது. இத்தேசியமட்ட உதைபந்தாட்ட பெண்களுக்கான போட்டியில் கலந்து கொள்வதற்காக வடமாகாணம் சார்பாக வடமாகாண உதைபந்தாட்ட பெண்களுக்கான போட்டியில் வெற்றியீட்டிய யாழ். மாவட்ட பெண்கள் அணியினர் தெரிவு செய்யப்பட்டனர்.

முதல் போட்டியில் வடமாகாண உதைபந்தாட்டபெண்கள் அணியினர் மேல் மாகாண உதைபந்தாட்ட பெண்கள் அணியினை சந்தித்தது. ஆரம்பத்திலிருந்தே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த மேல் மாகாண உதைபந்தாட்ட பெண்கள் அணியினர் 4:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றதனால் வடமாகாண உதைபந்தாட்டபெண்கள் அணியினர் போட்டியிலிருந்து வெளியேறினர்.

# ஆதிசக்தி வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் மோதின.

இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறுகின்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை C பிரிவில் 3.30 மணிக்கு நடைபெற்ற போட்டியில் ஆதிசக்தி A அணியை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இப்போட்டியில் 11:3 என்ற கோல்கணக்கில் ஆதிசக்தி A அணி வெற்றிபெற்றது. (3)

# உதைபந்தாட்ட போட்டி



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதை பந்தாட்ட சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் மோதவுள்ளன.

இதில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்றைய தினம் நடைபெறும் ஆட்டத்தில் பி.ப. 3.30 மணிக்கு அண்ணா சி.வி. விளையாட்டுக் கழகத்னத எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு மனோகரா அணியை எதிர்த்து வல்வை B அணி மோதவுள்ளது. (3)









(வேலணை)

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 8 ஆவது ஆசிய வலைப்பந்தாட்ட போட்டியின் பிரதான அனுசரணையாளரான மக்கள் வங்கியின் ஏற்பாட்டில் [illegible] சுன்னாகத்திற்குள் பவனி வந்தது. பாண்ட் வாத்திய இசை சகிதம் நடைபெற்ற இப்பேரணியில் பிரமுகர்கள் மற்றும் வலைப்பந்தாட்ட அணிகளைச் சேர்ந்த வீராங்கனைகளும் கலந்து கொண்டதனைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்துரட்ட வொரியர்ஸை வீழ்த்தியது நகெரஹிர



சிறிலங்கா பிரிமியர் லீக்கின் 5ஆவது போட்டியில் அஞ்சலோ மத்யூஸ் தலைமையிலான நகெரஹிர நாகாஸ் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

ஆர்.பிரேமதாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நகெரஹிர நாகாஸ் அணியும் கந்துரட்ட வொரியர்ஸ் அணியும் மோதிக்கொண்டன.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கந்துரட்ட அணி முதலில் துடுப்பெடுதாட தீர்மானித்து. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 159 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக திஸார பெரேரா 33 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 6 நான்கு ஓட்டங்கள் உட்பட 72 ஓட்டங்களைப் பெற்றார்.

160 ஓட்டத்தை பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நகெரஹிர நாகாஸ் 19.3 ஓவர்களில் தமது வெற்றியிலக்கினை அடைந்தது.

அதிக பட்சமாக இம்ரான் நசீர் 58 ஓட்டங்களையும் அணித்தலைவர் மத்யூஸ் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்ட நாயகனாக நகெரஹிர ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் இம்ரான் நசீர் தெரிவு செய்யப்பட்டார்.

# இங்கிலாந்து அணியிலிருந்து விலக மாட்டேன் ; பீற்றர்சன்


தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் தெரிவு செய்யப்படாத போதிலும் இங்கிலந்து சார்பான தனது கிரிக்கெட்டை வாழ்க்கை நிறைவுக்கு வரவில்லை என இங்கிலாந்து அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

ஒழுக்கவியல் தவறுகள் காரணமாக இங்கிலாந்து அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள அவர், சர்வதேச போட்டிகள் அனைத்திலிருந்தும் ஓய்வுபெறும் எண்ண்ம் கிடையாது என மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடன், இங்கிலாந்து வீரர்களுடன் ஏற்பட்ட மன கசப்புக்கள், இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது தென்னாபிரிக்க வீரர்கள் சிலருக்கு இங்கிலாந்து அணித்தலைவரையும், பயிற்றுவிப்பாளரையும் அவமதித்தது குறும் செய்திகள் அனுப்பினார் என்ற சந்தேகமாகியன காரணமாக அவர் மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் தன்னைச் சேர்க்காமல் விட இங்கிலாந்து கிரிக்கெட் சபை முடிபு செய்தமை குறித்து மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளதாக தெரிவித்த அவர், மிகவும் மனம் உடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.


அண்மைக்காலமாக தன்னைச் சுற்றி வரும் சர்ச்சைகள் தனக்கு வருத்தமளிப்பதாக தெரிவித்த அவர், தனது குடும்பத்தினரும் மிகுந்த



பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் இச் சம்பவங்கள் எவையும் தனது கிரிக்கெட் வாழ்வு இங்கிலாந்தில் முடிந்து போவதை உறுதி செய்யாது என தெரிவித்த அவர் இங்கிலாந்து சார்பாக மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் பங்கு பற்றுவேன் என நம்பிக்கைத் தெரிவித்தார்.

# பதவி மீது எனக்கு ஆசையில்லை



இந்திய கிரிக்கெட் அணியில் சிறப்பாக ஆடிவரும் கவுதம் காம்பீருக்கு, அணியின் துணை அணித்தலைவராக வேண்டும் என்ற ஆசையில்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவராக மஹேந்திர சிங் தோனி உள்ளார். சிறந்த விக்கெட் கீப்பர் மற்றும் துடுப்பாட்ட வீரர் என்ற முறையில், அவர் தனது பதவியில் தொடர்ந்து பொறுப்பாக செயல்பட்டுவருகிறார். ஆனால் இந்திய அணியின் துணை அணித்தலைவர் பதவி பலரைக் கடந்து வந்துள்ளது.

இதுவரை கௌதம் காம்பீர், சேவாக் ஆகியோர் வகித்துள்ள இந்திய துணை அணித்தலைவர் பதவியை தற்போது இளம்வீரர் விராட் ஹோலி வகித்து வருகிறார்.

இந் நிலையில் அடுத்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள இருபது-20 உலகக் கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியின் துணை அணித்தலைவர் பதவி மாற்றம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஹோலி இருபது-20 உலகக் கிண்ண போட்டிக்கான இந்திய அணிக்கு துணை அணித்தலைவராக நீடிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்திய அணியின் துணைத் அணித்தலைவராக வேண்டும் என்ற எண்ணம் எதுவும் இல்லை என்று கௌதம் காம்பீர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், இந்திய அணியில் ஏதேனும் பதவி வகிப்பதன் மூலம் தமது பொறுப்பும் அர்ப்பணிப்பும் மாறப் போவதில்லை. நான் அணியில் துணை அணித்தலைவராக வேண்டும் என்பதற்காக விளையாட வில்லை. போட்டிகளில் ஓட்டங்கள் சேர்த்து அ…ியின் வெற்றிக்கு உதவும் வகையில் ஆடி வரு…கிறேன்.

யுவராஜ் சிங் அ…க்குத் திரும்பியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இந்திய அணியின் வீரர்கள் அறைக்கு யுவராஜ் சிங்கின் வருகை மூலம் பெரும் மாற்றம் ஏற்படும். ஆனால் அணியில் மாற்றம் என்பது ஒரு தனி வீரரின் மூலம் ஏற்படுவது அல்ல என்று நினைக்கிறேன்.

அது ஒரு அணியின் ஒருமித்த செயற்பாட்டின் மூலம் ஏற்படுகின்றது. ஹர்பஜன் சிங் போன்ற அனுபவ வீரர் அணிக்கு திரும்பியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இருபது-20 உலகக்கிண்ணம் போன்ற பெரிய தொடர்களில் அவரை போன்ற அனுபவ வீரர்கள் தேவை. இருபது-20 உலகக்கிண்ணத்துக்கு அடுத்தபடியாக இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளது.


ஆனால் இருபது-20 உலகக்கிண்ணத்திற்கு முதலாக சில பயிற்சிப் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டியுள்ளது. இதன் மூலம் உலகக்கிண்ணத்தில் சிறப்பாக ஆட முடியும்.

இந்திய அணியில் ராகுல் ராவிட்டின் இடத்தில் பூர்த்தி செய்வது அவ்வளவு எளிதில்ல என்றும் கடந்த 16 ஆண்டுகளுக்குப் பிறகு ராவிட் இல்லாத இந்திய வீரர்களில் அறை எப்படி இருக்கும் என்பதைக்குறித்து யோசிக்கவே முடியவில்லை எனவும் கூறியுள்ளார்.

# சர்வதேச கிரிக்கெட் சபை விருதுகளில் சங்கா, அஜ்மல் முன்னிலை

சர்வதேச கிரிக்கெட் சபையின் வருடாந்த விருதுகளுக்காக நீண்ட பட்டியலில் இலங்கைச் சேர்ந்த ஆறு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

குமார் சங்கக்கார, அஜந்த மெண்டிஸ், லசித்மலிங்க, திலகரட்ண டில்சான், லஹிரு திரிமன்ன, டினேஸ் சந்திமால் ஆகியோரே



இடம் பெற்றுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள நீண்ட பட்டியல் நான்கு பேர் கொண்ட குறும்பட்டியலாக இம் மாத இறுதியில் மாற்றியமைக்கப்படும்.

அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலில்,

**சர்வதேச கிரிக்கெட் சபையின் இந்த ஆண்டுக்கான வீரர்கள்**

குமார் சங்கக்கார (இலங்கை), சயிட் அஜ்மல் (பாகிஸ்தான்), வீராட் ஹோலி (இந்தியா), ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா), ஸ்ரூவர்ட் பிரேட் (இங்கிலாந்து), மைக்கல் கிளார்க் (அவுஸ்திரேலியா), அலஸ்ரெயர் குக் (இங்கிலாந்து), வேர்ணன் பிலாந்தர் (தென்னாபிரிக்கா), ஸ்டஃபானி ரெய்லர் (மேற்கிந்தியத்தீவுகள் பெண்கள் அணி),

**இந்த ஆண்டுக்கான டெஸ்ட் வீரர்கள்**

குமார் சங்கக்கார (இலங்கை), சயிட் அஜ்மல் (பாகிஸ்தான்), ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா), ஸ்ரூவர்ட் பிரேட் (இங்கிலாந்து), சிவ்நாரின் சந்தர்போல் (மேற்கிந்தியத்தீவுகள்), மைக்கல் கிளார்க் (அவுஸ்திரேலியா), அலஸ்ரெயர் குக் (இங்கிலாந்து), ஜக்ஸ் கலிஸ் (தென்னாபிரிக்கா), வேர்ணன் பிலாந்தர் (தென்னாபிரிக்கா), மற் பிரயர் (இங்கிலாந்து), மார்லன் சாமுவேல்ஸ் (மேற்கிந்தியத்தீவுகள்), டேல் ஸ்ரெய்ன் (தென்னாபிரிக்கா), ஏ.பி.டி.வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா),

**ஆண்கள் ஒருநாள் சர்வதேச போட்டிக்கான வீரர்கள்**

குமார்சங்கக்கார, லசித் மலிங்க, (இலங்கை), சகிட் அப்ரிடி, சயிட் அஜ்மல் (பாகிஸ்தான்), கௌத்தம் காம்பீர், மகேந்திரசிங் தோனி, விராட் ஹோலி (இந்தியா), மைக்கல் கிளார்க், ஷேன் வோட்சன் (அவுஸ்திரேலியா), அலஸ்ரெயர் குக், ஸ்டீபன் ஃபின் (இங்கிலாந்து), சஹிப் அல் ஹசன் (பங்களாதேஷ்), மோர்னி மோர்கல் (தென்னாபிரிக்கா), சுனில் நரைன் (மேற்கிந்தியத்தீவுகள்), பிரெண்டன் ரெய்லர் (சிம்பாவே),

**சிறந்த அறிமுக வீரர்**

லஹிரு திரிமன்ன, டினேஸ் சந்திமால் (இலங்கை), டிரெண்ட் போல்ட், டக் பிரேஸ்வெல் (நியூசிலாந்து), பற் கமின்ஸ், நேதன் லயன், ஜேம்ஸ் பற்றின்ஸன், மத்தியூ வேட் (அவுஸ்திரேலியா), நசீர் ஹொஸைன் (பங்களாதேஷ்), ஜுனைட்கான் (பாகிஸ்தான்), ரீனா மவோயா (சிம்பாவே), சுனில் நரேன் (மேற்கிந்தியத்தீவுகள்.

**சிறந்த இருபது -20 திறமை வெளிப்பாடு விருது**

திலகரட்ண டில்சான்- 104 (ஆ.இ (57), அஜந்த மெண்டிஸ் - 4-0-12-4 (இலங்கை), மொகமட் கபீஸ்-2.2-0-10-04 (பாகிஸ்தான்), ரவி போப்பாரா - 3.4-0-10-4, அலக்ஸ் ஹேல்ஸ் - 99 (68) (இங்கிலாந்து), கிறிஸ் ஹெயில் - 85 (ஆ.இ (52), சுனில் நரைன்-4-0-12-4 (மேற்கிந்தியத்தீவுகள்), மார்ட்டின் கப்பில்-91 (ஆ.இ (54), பிரண்டன் மைக்கலம்-81 (ஆ.இ (46) (நியூசிலாந்து), ரிச்சட் லெவி-117 (ஆ.இ (51) (தென்னாபிரிக்கா), எலியாஸ் சனி-4-1-12-5 (பங்களாதேஷ்),

**விளையாட்டு உணர்வுகளுடன் விளையாடியமைக்கான விருது**

மொகமட் ஹபீஸ் (பாகிஸ்தான்), ஜக்ஸ் கலிஸ், ஏ.பி.டி.வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), கெரான் பொல்லார்ட் (மேற்கிந்தியத்தீவுகள்), டானியல் விட்டோரி (நியூசிலாந்து),

**சிறந்த நடுவர்**

குமார் தர்மசேன, பில்லி பௌடன், அலீம் தார், ஸ்டீவ் டேவிஸ், பில்லி டொக்ரறோவ், மரையஸ் எராஸ்மஸ், இயன் கூல்ட், ரொனி ஹில், ரிச்சாட் கெற்றல்புரோ, நைஜல் லோங், அசத் ரௌஃப், சைமன் ரௌபல், ரொட் ரக்கர்,

**மக்கள் தெரிவு விருது**

குமார் சங்கக்கார (இலங்கை), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), ஜேம்ஸ் அண்டர்சன் (இங்கிலாந்து), ஜக்ஸ் கலிஸ், வேர்ணன் பிலாந்தர் (தென்னாபிரிக்கா),

இவர்கள் தவிர ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் சிறந்த வீராங்கனை, சிறந்த இருபது-20 வீராங்கனை ஆகிய விருதுகளும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.கைதிகளின் படுகொலைப் பழியை அரசாங்கத்தின் மீது சுமத்தமுடியாது!

## தீக்குள் விரலை வைத்தால் சுடும்தானே!-அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை தொடர்பில் அரசாங்கம் மீது குற்றம் சாட்ட முடியாது அதற்காக மன்னிப்புக் கோர வேண்டிய தேவையும் இல்லையென பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சரிடம் அரசியல் கைதிகளின் படுகொலை தொடர்பில் ஊடக வியலாளர்களினால் கேள்வி எழுப்பப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் அரசியல் கைதிகள் நிலைமைகளை உணர்ந்து செயற்பட வேண்டும். தீக்குள் விரலை வைத்தால் சுடும் என்று தெரிந்து கொண்டும் தீக்குள் விரலை வைத்துவிட்டு சுட்டு விட்டது என்றால் என்ன செய்ய முடியும்.

இருப்பினும் தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதை சரி என்று நான் சொல்ல வரவில்லை. அதற்காக அரசாங்கம் மன்னிப்புக் கோர வேண்டும் எனக் கூறுவதைத்தான் தவறு என்கின்றேன்.

எனக்கு சிறையில் உண்ணாவிரதம் இருந்த அனுபவம் உண்டு. அதனால் அரசியல் கைதிகள் தொடர்பில் கதைக்கத் தகுதி உண்டு. ஆனால் மனோ கணேசனுக்கும், சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் தமிழ் அரசியல் கைதிகள் பற்றிக் கதைக்கத் தகுதியில்லை. அரசாங்கம் மன்னிப்புக் கோரவேண்டும் எனக் கூறுவதற்கு மனோ கணேசனுக்கு தகுதியில்லை.

பிரச்சினை வரும்போது ஓடி ஒளிந்துவிட்டு மன்னிப்புக் கூறவேண்டும் எனக் கூற முடியாது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் என்ன நடந்தது? தமிழ் அரசியல் கைதிகள் சிறை அதிகாரிகளை சிறை பிடித்தனர். அதனால் அவர்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகள் சிலர் தாக்கப்பட்டனர். அதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்பது உண்மை தான். எனவே தமிழ் அரசியல் கைதிகள் நிலைமைகளை உணர்ந்து செயற்பட வேண்டும் சுய லாப அரசியல்வாதிகளை நம்பி ஏமாந்து போகக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## த.தே.ம.முன்னணியின்...

மாறாக தமிழர்களின் நில அபகரிப்பையும், இராணுவ மயமாக்கலையும், கலாசார சீரழிவுகளையும் தமிழர் நிலத்தில் ஏற்படுத்தி வருகின்றது.

காணாமல் போனோர் தொடர்பாகவும், சிறையில் உள்ளோர் தொடர்பாகவும் ஆக்க பூர்வமான முடிவுகள் அரசாங்கத்திடம் இருந்து இல்லை. இதற்கு மாறாக சிறையில் உள்ள தமிழர்களை சித்திரவதை செய்யும் மனித நாகரிகம் கொஞ்சமும் இல்லாத வகையில் கொன்றொழித்து வருகின்றது.

வவுனியாவைச் சேர்ந்த நிமலரூபனும் பாசையூரைச் சேர்ந்த டெல்றொக்ஷனும் இதற்குச் சாட்சி.

ஒவ்வொரு தமிழ் மகனும் பாதுகாப்பற்ற சூழலில் இந்த நாட்டில் வாழ்வதாக உணர்கிறார்கள்.

அச்ச வாழ்வு ஏற்பட்டிருக்கிறது. கொலைகளும் கொள்ளைகளும், விசார ணைகளும் தமிழர் நிலத்தில் மலிந்து வருகின்றன.

சிறையில் கொல்லப்பட்ட எமது உறவுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் எந்த விசாரணைகளையும் மேற்கொள்ளவில்லை. அது மேற்கொள்ளுமெனத் தமிழர்கள் நம்பவுமில்லை.

எனவேதான் அனைத்து அடக்கு முறைகளுக்கு எதிராகவும் ஜனநாயக வழியில் போராடி உலகிற்கு இலங்கை ஆட்சியாளர்களின் தமிழர்கள் மீதான அடக்குமுறை முகத்தை உலகிற்கு தொடர்ந்து காட்டுவதென முடிவெடுத்து த.தே.கூட்டமைப்பு, த.தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் அரசியல் கட்சிகள் உட்பட தென்னிலங்கையின் முற்போக்கு சிங்கள கட்சிகளும் மனித உரிமைவாதிகளும் இணைந்து போராட்டங்களில் குதித்துள்ளன.

முறிகண்டியிலும், யாழ்ப்பாணத்திலும் நெல்லியடியிலும் என இந்த போராட்டங்கள் விரிந்திருக்கிறது.

இதன் இன்னொரு கட்டமாக டெல்றொக்சனின் உடலை அடக்கம் செய்த குமுறல்களோடு நாளை யாழ்.நகரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ள உலகத்திடம் நீதி கேட்டும் இலங்கை அரசாங்கத்தை கண்டித்தும் நடத்தப்படவுள்ள கவனயீர்ப்பு போராட்டத்தை ஆதரிப்பதுடன் அதில் த.தே.கூட்டமைப்பில் பங்கு கொண்டுள்ள பா.உறுப்பினர்களும் கட்சிகளும் பங்குபற்றுவதென முடிபெடுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த மிக முக்கியமான கவனயீர்ப்பு போராட்டத்தில் த.தே.கூட்டமைப்பின் மாநகர சபை, பிரதேச சபை தலைவர்கள் உறுப்பினர்கள் கட்சி அங்கத்தவர்கள் அனைவரும் பங்குபற்றவேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வெறுமனே அறிக்கைகளோடும் அஞ்சலிக் குறிப்புகளோடும் நில்லாமல் தெருவுக்கு இறங்கி நீதிகேட்டு போராட வேண்டிய கால நிர்ப்பந்தம் தமிழர் பிரதிநிதிகளுக்கும் தமிழர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

இதில் கட்சி பேதமின்றி களத்தில் இறங்க வேண்டியது மக்களுக்கான கடமையாகின்றது. இதன் மூலம் தமிழ் மக்களுக் கான உரிமைகளை பெறுவதற்கு வழிகள் பிறக்கும் என த.தே. கூட்டமைப்பை மேற்கோள்காட்டி பா. உறுப்பினர் சி.சிறீதரன் அறிக்கை ஒன்றின் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.(ந-6)

## டெசோ மாநாடுகளை...

செயலாளர் புபுது ஜாகொட இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர்களின் உரிமை குறித்து எவரும் கதைக்காது இருந்தால் கருணாநிதி போன்றவர்களின் பின்னே மக்கள் செல்வர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் அவர்கள் இந்தியாவிடம் செல்கிறார்கள். வெளிநாடுகளை நாடுகிறார்கள் என்று கதைத்து பயனில்லை எனவும் அவர்கள் அங்கு செல்லும் முன் சிங்கள மக்கள் அவர்களுடைய பிரச்சினை குறித்து கதைக்க வேண்டும் எனவும் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்தால் தமிழர்கள் கருணாநிதியிடமோ கிலாரி கிளின்டனிடமோ செல்ல வேண்டிய நிலை ஏற்படாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

டெசோ மாநாடு நடத்தப்பட்டது சரியா பிழையா என்று ஆராய்வதை விடுத்து டெசோ மாநாடு போன்ற ஒன்று நடத்தப்பட்டமைக்கான காரணம் என்னவென ஆராய வேண்டுமென


**உடனடி வேலைவாய்ப்பு**

கொழும்பை தலைமைமைக் காரியாலயமாக கொண்டு இயங்கும் பிரபலநிறுவனத்திற்கு பின்வரும் மாவட்டங்களில் வெற்றிடங்கள் உள்ளன.

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு.**

1. **சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்-** 2 வருட முன்அனுபவம் A/L சித்தி மும்மொழி பாண்டித்தியம்
2. **கணக்காளர்-** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது தனியார் துறையில் அதிவிசேட சித்தி 3வருட முன்அனுபவம் மும்மொழி பாண்டித்தியம்
3. **வாகன சாரதி-** 5 வருட முன்அனுபவம் மும்மொழி பாண்டித்தியம்
5. **வரவேற்பாளர்-** ஆளுமைமிக்கவர்கள் மும்மொழி பாண்டித்தியம்

**இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்**

உங்கள் சுயவிபரக்கோவை அனைத்து ஆவண ங்களின் பிரதிகள் 4x6 நிழற்புகைப்படம் என்பவற்றை கீழ் வரும் முகவரிக்கு 24.08.2012 திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

அனைத்து விபரங்களும் பூரணப்படுத்தப்படாத பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(க-759)

விளம்பர இல-759 வலம்புரி 03, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.


## தமிழருக்காக கேள்வி கேட்ட...

அனைத்துக் கட்சிக் குழு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியவற்றைக் காண்பித்தது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில் அடுத்தது என்ன என்று தமிழ் மக்கள் கேட்கிறார்கள். அதற்கு என்ன பதில் கூறுவது என அமைச்சரைக் கேட்டேன்.

அதனை அவர் தவறாக எடுத்துக் கொண்டு என்னை மீள அழைத்துவிட்டார் போலும் என்றும் கூறினார்.

இந்த கேள்வி குறித்து அமைச்சர் தன்னிடம் சத்தம் போட்டதாகவும், அதற்கானப் பதில் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று அவர் கூறியதாகவும் கொடகே கூறினார்.

ஆனால் மக்களுக்கு நம்பகத்தன்மையில்லாத பதிலை கூறமுடியாது என்றும் நம்பகத் தன்மையுடனான பதிலைத்தான் கூறமுடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதேவேளை, தனது கடந்தகால பணிகளை கருத்தில் எடுக்காது தான் மீள அழைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் கல்யானந்த கொடகே தொடர்பாக வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கு கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இவரை பதவிக் காலம் நிறைவடைய முன்னர் நாடு திரும்புமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் மலேசியாவில் செயற்படும் விடுதலைப்புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவு அமைப்புகள் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளும் பிரசாரங்களை முறியடிக்கத் தவறியதாக இவர் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

எனினும் தனது பதவிக்காலம் நிறைவடைய முன்னர் நாடு திரும்பப் போவதில்லை எனவும் அதுவரை மலேசியாவுக்கான இலங்கையின் தூதுவராக பணியாற்றப் போவதாகவும் கல்யானந்த கொடகே முன்னர் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து மலேசியாவுக்கான தூதுவராக கல்யானந்த கொடகே தொடர்ந்தும் பணியாற்றினால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.(ந-11)

(இது தொடர்பான மேலும் ஒரு செய்தி 13-ம் பக்கத்தில்)

## சில மனித உரிமை மீறல்கள்...

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பிரதி அமைச்சர் பசீர்சேகுதாவூத்,

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளை பற்றி பேச கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் தவறிவிட்டது.

ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் முஸ்லிம்களைப் பற்றி எதுவும் இல்லை.

இது விடயமாக எவரும் எதுவும் செய்யவில்லை.வாயே திறக்கவில்லை.

முஸ்லிம்கள் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை உலகறியச் செய்வதற்கு ஒரே வழி வீதிக்கு வந்து போராட வேண்டும். எழுத வேண்டும்.உலமாக்கள் உரத்துக் குரல் கொடுக்க வேண்டும். எழுத்தாளர்கள் எழுத வேண்டும்.

உலகில் பரந்துவாழும் தமிழ் மக்கள் தங்களது பிரச்சினைகளை உலகத்தின் கண்களுக்கு கொண்டு சென்றுள்ளார்கள்.

சர்வதேச சமூகம் முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு கண்கட்டி வித்தையை செய்து கொண்டு இருக்கிறது.

உலகம் முழுவதும் திட்டமிட்ட பேரழிவுகளை சந்திக்கும் சமூகமாக முஸ்லிம் சமூகம் இன்று இருந்து கொண்டிருக்கிறது.

அரபு வசந்தம் என்று கூறி முஸ்லிம்களுக்கு இழைக்கும் அநீதிகளை அதற்குள் மூடி மறைக்க நினைக்கிறார்கள்.அது அரபு வசந்தம் அல்ல.அது உலகில் பரந்துவாழும் ஒட்டு மொத்த முஸ்லிம்களுக்கே ஒரு நெருப்புக் காய்ச்சல்.நமது அரசியல்வாதிகளும் விடயம் தெரி யாமல் வசந்தம் பேசுகிறார்கள்.

அரபுலக வசந்தம் இங்கேயும் வரவேண்டும் என்று சிலர் அறிவீனமாக பேசிவிடுகிறார்கள்.

மேற்குலக சக்திகளின் வஞ்சக வலை அது. முஸ்லிம் சமூகத்தை சீர்குலைப்பதற்கான சதியில் இன்று முஸ்லிம் சமூகம் சிக்குண்டு கிடக்கிறது.

நாங்கள் அப்பாவித்தனமாக எந்தவிதமான அரசியல் இலக்குகளும் இன்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நமக்கு பாதிப்புகள் வராமல் நாம் வாழ வேண்டும் என்று கருதினால் நமது ஒற்றுமைதான் மிக முக்கியம்.நமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை மறக்க வேண்டாம். மறந்தால் நமக்கு எதிர்காலம் இல்லை. ஆனால் மன்னிப்போம் என்றார். (ந-11)

## தெரிவுக்குழு...

முதலீடுகளை தடுக்கும் நோக்கில் இனவாதக் கருத்துக்களை இந்த புலம்பெயர் தமிழர்கள் வெளியிட்டு வருகின்றனர்.

இராணுவ ரீதியாக வெற்றியீட்ட முடியாது என உணர்ந்து கொண்ட புலம்பெயர் தமிழர்கள் இவ்வாறு போலி பிரசாரங்களை செய்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.(ந-2)

## நீதிமன்றில் ஆஜராகு...

தனது அருகில் இருந்த சட்டத்தரணிகள் சிலர் கேட்கும்படி செய்ததாகவும் குறிப்பிட்டார்.

இந்த வழக்கை விசாரணை செய்த சி.ஐ.டியினர் சாட்சியமளிக்கையில், அமைச்சர் றிசாத் பதியுதீன், அவரது சகோதரர் மன்னார் நீதவான் ஜுட்சன் ஆகியோரது வாக்குமூலங்களை தாங்கள் பதிவு செய்திருப்பதாகவும் தமது விசாரணைகளின் மூலம் அமைச்சருடைய சகோதரரே நீதிவானுடன் தொலைபேசியில் பேசியதாகத் தெரியவந்துள்ளதாகக் கூறியுள்ளனர்.

சி.ஐ.டியினர் நீதிமன்றத்திற்கு கையளித்துள்ள விசாரணைகள் தொடர்பான அறிக்கையில் எவரையும் பெயர் குறிப்பிட்டு சந்தேக நபராக குறிப்பிடாமல் இருந்ததை சுட்டிக் காட்டிய நீதிவான்,ஆர்.திஸாநாயக்க அவர்கள், ஒரு விசாரணை அறிக்கையில் சந்தேக நபர் எவரையும் பெயர் குறித்து குறிப்பிடாமல் எவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்க முடியும் என கேள்வி எழுப்பியுள்ளார்.

அச்சுறுத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட தொலைபேசியின் உரிமையாளர் யார் என்பது தெரிந்த பின்பும் ஏன் சந்தேகநபராக எவரையும் அறிக்கையில் சி.ஐ.டியினர் குறிப்பிடவில்லை என்றும் நீதவான் கேள்வி எழுப்பினார்.

**நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு**

பின்னர் வரும் 27ஆம் திகதி அமைச்சர் றிசாத் பதியூதினை நீதிமன்றத்தில் ஆஜரா குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் நீதவான் ஜுட்சன் தரப்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதித் தலைவி அனோமா குணதிலக கமகே, செயலாளர் சஞ்சே கமகே மற்றும் சிலர் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். (ந-11)

## அட்டாளைச்சேனையில்...

கப்பட்டதோடு, மற்றொரு காரியாலயம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் அதாவுல்லா சார்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளருமான எம்.எஸ்.உதுமா லெப்பையின் தேர்தல் காரியாலயங்களே இவ்வாறு சேதமாக்கப்பட்டன.

நூற்றுக்கணக்கான மக்கள் திரட்டுவந்து இக்காரியாலயத்தினை தாக்கி தளபாடங்களை சேதமாக்கியதோடு, அங்கிருந்த இரண்டு வாகனங்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு அக்கரைப்பற்று பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் வருகைதந்ததோடு, தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளையும் வீசினர். எவ்வாறாயினும் நிலைமை தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## டெசோ மாநாட்டுக்கு...

புதுடில்லியிலும் சென்னையிலும் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் இந்த மாநாட்டை இலங்கை அரசாங்கம் விரும்பவில்லை என்ற தகவல் இந்திய அரசிற்கும் தமிழ்நாடு அரசிற்கும் பரிமாறப்பட்டதாக இலங்கை வெளிவிவகார செயலர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார். (ந-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org